www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
01-07.8.1993
ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 10




இலங்கை மீண்டும் 'வெஸ்ட் மின்ஸ்டர் முறையை நாடிச்செல்கின்றதா?



காதல் ஜோடிகளை மிரட்டும் அடையாள அட்டைப் பிரச்சனை தகர ரவுண்டப்

-இது ஒரு திருவிழாக் காலம்-
ஆடிவேல் காண்போம்

சிறுகதைகள் + சூடான கவிதைகள்
சொக்கவைக்கும் தொடர் கதை!



அழகுக் குறிப்பு
+
தையல் பயிற்சி
லேடீஸ் ஸ்பெசல்



கபில் பேட்டி

ஸ்போர்ட்ஸ்

வாவ், வாவ், வாவ்
தகவல் பெட்டி

பாப்பா முரசு
அறிவூட்டும் கதையோடு

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு
வணக்கம்.

எத்தனை தடவை சொன்னாலும்
திகட்டாத விசயம்-
உங்கள் நேசம்.
எத்தனை தடவை படித்தாலும்
அலுக்காத விசயம்
உங்கள் கடிதம்.

கோபம் வரும்போதும்
சோகம் வரும்போதும்
நேசமானவர்களை நினைத்துக்கொள்
நேசமானவற்றை நினைத்துக்கொள்
என்று எவரோ சொன்ன ஞாபகம்
சொன்னவரை மறந்தாலும்
சொல்லப்பட்ட சங்கதி படுசத்தியம்.

எமக்குள்
சோர்வு எட்டிப்பார்க்கும்போது
உங்கள் அன்பு மடல்களை
புரட்டிப் பார்த்தால் போதும்
சோர்வு
சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிடுகிறது.

உங்கள் ஒவ்வொரு கடிதமும்
பத்திரப்படுதப்படுகின்றன.
விருதுகளை யாரும் வீசியெறிவதில்லை.
எம்மைப் பொறுத்தவரை
விருப்பமான விருதுகள்
உங்கள் நேசம் சுமந்துவரும் மடல்கள்.

■

முரசில்
இடம்பெறும் கருத்துக்கள்
யாவும்
முரசின் சொந்தக்கருத்தல்ல.
முரசின்
சொந்தக் கருத்துக்கள்கூட
தவறானவை என்று கண்டால்
திருத்தப்படும்.
திருத்தப்பட்டுமுள்ளன.

ஆனால்-
இதைப் போடு - இதைப் போடாதே
எப்படிப் போடுவாய்
என்ற ரகத்திலான -
அதட்டல் பாணி வியாபாரமெல்லாம்
இங்கே அங்கீகரிக்கப்படாது.

எங்களுக்கு எழுதவும் தெரியும்.

எதிர்த்து நிற்கவும் தெரியும்.

தவறென்று கண்டால் ஏன்தவறு
அதை ஆணித்தரமாக சொன்னால்
அடுத்த நொடியே திருத்துவது
தவறுகளுக்கு எதிரான சரியானநிலை.
முரசு சரியான நிலை நிற்கும்.

■

கருத்து மோதல்களுக்கு
களம் கொடுக்கும்
காத்திரமான முயற்சிகள்
விரைவில் வெளிவரும்.

சர்ச்சைகள் கூட சுவாரசியமானவைதான்.
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்.
கருத்துக்கள் மோதினால்
சரியான கருத்துக்களின் பொறிகள்
தெறித்து
பொய்கள் பொசுங்கும்.

முரசு எட்டில் வந்த
அஸ்வதியின்
கருத்துக்கள் முரசின் கருத்தல்ல.
ஆனால் அவ்வாறான
ஆக்கங்களுக்கு முரசு இடம்தரும்.
மாற்றுக்கருத்துக்கள் வந்தால்
அவற்றிலே ஆழமான வீச்சுக்கள் இருந்தால்
மனதார இடம் வழங்கும்.

உங்களை சுற்றிய நடப்புக்களை
அலசுங்கள்- யோசியுங்கள்- எழுதுங்கள்.
வாழக்கை இனிதானது.
அதை மறுக்கும்
கொடிதானவற்றை
தண்டிக்கும் உங்கள்
நியாயமான கோபங்களுக்கு
நிச்சயம்
நிறைய இடம் தருவோம்.

மீண்டும் மறுமுரசில்
வந்து கலக்கும் வரை.


அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு
போன்:
820265

## அறிவித்தல்

இலங்கை எங்கும்
தினமுரசு வாரமலர்
ரூபா 8.50ற்கே
விற்கப்படுகிறது.
எனவே-
அதற்கு மேலான
விலையில்
எங்காவது
விற்பனையானால்
எமக்கு அறியத்
தரவும்.

## கவிதைப் போட்டி இல–10



விழிகள் விரிகிறதல்லவா வியப்பால். அந்த வியப்போடு வார்த்தைகளைக் கோர்த்து மடலில் பதிவு செய்யுங்கள். தபாலட்டை போதும். அனுப்பவேண்டிய கடைசித்திகதி: 06.8.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:10
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு -5

## பாராட்டுப்பெறும் கவிதைகள்

## கவிதைப் போட்டி இல–7

வந்து
குவிந்தவற்றில்
பரிசுபெறுவதும்
பாராட்டுப்
பெறுபவையும்

*நிறைவு இல்லை*

விலையுயர்வு போல்
இல்லை-இந்த
சுவையுணர்வில்.....
நிறைவு.

**அக்கரைப்பற்று**
**ஏ.ஜீ. சேகர்.**

முதுமையிலும்
ஒரு புதுமையான
சுவை காண
முயலுகின்ற
முப்பாட்டி!

**ஆர். வாசு**
**இராகலை.**

கொன்றது பசியை
வயது இளமையைத் தின்றது
வறுமை உடலைத் தின்றது
தேநீர் பசியைக் கொன்றது
கானீர் முதுமையின் கொடுமையை.

**தங்கராசா இராஜசேகர்**
**திருகோணமலை.**

*எப்படி?*

"இந்த முதுமையிலும்
உன்னால் எப்படி
சுவைக்க முடிகிறது
இந்த வறுமையை"

**செல்வி விஜி பாலசுந்தரம்**
**பூண்டுலோயா.**

போட்ட சீனி இனிக்கவில்லை
போத்தலிலும் இனி
சீனி இல்லை.
ஆச்சி முகத்தில் .
கசப்பு
ஆனாலும் உபசரிப்பு

**திருமதி. மணிமேகலை**
**கல்குடா.**

*வறுமை*

எடுத்துக்குடி
அம்மா,
வறுமை
என்றைக்குமே
இனித்ததில்லை.

**பீ. தேவமனோகரன்**
**கிளிநொச்சி.**

வருஷங்களாக
வாழ்வே இனிக்கல்ல..
இத-
இனிக்காவிடினும்
'எங்கட தேயில..'

எஸ். புஸ்பானந்தம்
மண்டூர்.

வடக்கிலே சீனி தட்டுப்பாடு
கலப்பிலே வைக்கிறாள் பாட்டி
கட்டுப்பாடு!

ரீ. சந்திரமோகன்
வவுனியா.

*தாயே!*

சீனியிலுமா?
மலையக ரத்தம்!!

**மு. தமீமா**
**மருதமுனை-04.**

*இப்படியும்' வாழலாம்*

நாங்கள் இப்படியும்
ஜீவிக்கின்றோம்
மரணிக்கவில்லை-
எம் வாழ்வில் - எந்த
மாற்றமும் இல்லை
ஏனெனில்-நாங்கள்
ஏமாற்றத்தின்
இருப்பிடங்களான
ஜீவன்கள்!

**சரா சபேஷன்**
**மட்டுநகர்.**

"அந்த நாள்"
ஞாபகமோ
பதம் பார்க்கும்
பக்குவமோ?

**ஏ.அஹமது ஜுனைது**
**ஏறாவூர்-6.**

*கிடைத்ததா?*

வாழ்க்கையில் தொலைந்துபோன
இனிமையை- இவள்
தேனீரில் தேடுகிறாளோ?

**செல்வி.என். ஜுனைதீன்**
**புத்தளம்.**

*வித்தியாசமில்லை*

யார் கண்டது
ஹெரொயினா?
சயனைட்டா..?
சீனியா என்று
அதுதான் ஆராய்ச்சி.

**பிரகாஷ்**
**மாத்தளை.**

வாழ்க்கையின் எல்லையிலும்
வறுமையினை உருசி பார்க்கும்
மானிட ஜீவன் இது.

**சாந்தினி ராஜேந்திரம்**
**புத்தளம்.**

## பரிசுபெறும் கவிதை

**சிரிப்பு**

வயோதிபம் சிரித்தது
கூடவே வறுமையும்
சிரித்தது......
இல்லாமல் போனதோ
இளமையும்
இனிமையும்.....

திருமதி சாந்தினி சந்திரன்
கொட்டஹேனா
கொழும்பு-13



*கலப்பும் கசப்பும்*

தேயிலைச் சாயமும்
வெல்லமும்;
கலந்துவிட்ட பின்பும்
கசக்கிறதே
நம்மூர்
ஜனநாயகமும்
மனித நேயமும் போல.

**செல்வி த.நிரஞ்சலா**
**திருகோணமலை.**

# வாசக(ர்)சாலை



இவ்வாரத்தினமுரசு கண்டேன் படு ஜோர் முகில் வண்ணனின் "என்ன சொல்லப் போகிறார்கள்" சிறுகதை பலே விபுலானந்தரின் கனவு நனவாகுமோ? கட்டுரை சிந்தைக்கு விருந்தானது. நடுப்பக்கம் கண்களுக்கு விருந்தளித்தது. மொத்தத்தில் தினமுரசு பலே பலே அடுத்த முரசுக்கு தவம் கிடக்கிறேன்.

*சி.ஜெயசீலன்- கொழும்பு-14.*

தினமுரசே! வாரந்தோறும் உன்னை அனுபவிப்பதைவிட தினமும் அனுபவிக்கவே நாம் பெரிதும் விரும்புகிறோம். ஆகவே, கூடியவிரைவில், தரமான ஒரு நாளிதழை, எம் கரங்களில் தவழ விட மாட்டாயா?

**எம்.பி.தர்மலிங்கம், ஏ.எம்.எம். மன்ஸீன், எம்.எப்.எம்.வஸீன்-**
**திருக்கோணமலை.**

அன்பு முரசே
நீ என் இதயத்தில் நீங்காத இடம் பிடித்துவிட்டாய் காரணம் நீ சுமந்து வரும்அத்தனை அம்சங்களும் வாசிக்கத் தூண்டும் வசந்த மலர்கள் என்றும் நீ வளம்பெற வாழ்த்துக்கள் வாழ்க வளர்க தமிழ் முரசே.

**ஜெயா செல்லத்துரை-தெரணியகலை.**

முரசே சிந்தியா பதில்கள் சிந்தனை முத்தாச்சு
கண்ணே மதுமிதா கற்பனை இதமாச்சு
பாப்பா முரசு பயங்கர சுவையாச்சு
சினி விசிட் சிவப்பு கலராச்சு
வாசகர் நெஞ்சம் என் உள்ளத்தில் நிறைவாச்சு
இனி என்றும் அன்புடன் தினமுரசாச்சு

**எஸ்.இர்பானா-மூதூர்-05**

தினமுரசே உன் ஆக்கங்கள் அனைத்தும் தித்திக்கும் தேனமுது.
ஒரே மூச்சில் அனைத்துப் பக்கங்களையும் படித்திடத் துடித்திடும் என் மனது.
உன் சேவை தடையின்றித் தொடரட்டும் இனிது.
இருபதே பக்கங்களில் பல ரசங்களை ஒன்று கலந்து பருகிடத் தந்திடும் தினமுரசே நீ வாழ்க!

**திருமதி.ஜென்னா ரஹ்மான்- புத்தளம்.**

வெள்ளி
தினந் தோறும்
தித்திக்க வைக்கும்
தினமுரசுவே
உன்
திருமுகத்தைக் கண்டு
திருப்தி காண்கிறேன்.

**மு.முகர்ரம்**
**நாம்புளுவ-பஸ்யால**

சக்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்தது போல் என் மனதில் பவனி வரும் முரசே நீ புதுசுதான். என் மனதை உன்னிடம் கொடுத்து விட்டேன். இனி சொகுசுதான்.

**செல்வி: ரிபா-தெஹியங்கை**

எப்போது வியாழன் வரும் என்று தினமுரசை எதிர்பார்த்திருப்பவனின் நானும் ஒருவன். ஆனால் ஒரு குறை. குறுக் கெழுத்துப் போட்டியில் 10 பெயரை அதிஷ்டசாலிகளாகவும் 10 பெயரை பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்தால் என்ன?

**கே.தர்மராஜ்- கொழும்பு-13.**

**எஸ். ஜே. அகீல்- கொழும்பு-12, பர்ஹான் அனீஸ்- கிருங்கதெனிய, செ. ஸ்ரீகாந்தன்- ஹட்டன், இப்திகார்- புத்தளம், ரி. ச்நதிரன் - வவுனியா, ராஜன்- கல்கமுவை, சிவலிங்கம் ஜெயசீலன்- களுவாஞ்சிக்குடி, வேலு பத்மநாதன்- ஹட்டன், பாத்திமா நுஸ்ரா- கம்பளை, வி. பிரபாகரன் - கந்தப்பொல, ஆறுமுகம் ரவிக்குமார்- ஆலி-எல, ஆர். கே. செல்வநாயகம்- லபுக்கெலை, எம்.எம்.எம்.றிஸ்வான்- பண்டாரகம, கே.சிவராமலிங்கம்-களுதாவளை-01, சி.சரோஜா-ஹட்டன், எஸ்.பாத்திமா எஸ்.நிர்மலா-எஸ்.லோஜினி எம்.நவ்சாத்- கொழும்பு-10, நூர்ஹலீனாஹமீட்- பாரிஷா ஹமீட்-யூஹான்-சுனாரா-கொழும்பு-10, அ.கலாம்தீன்- வவுனியா, சுபத்ரா பெருமாள்- கோட்லோஜ்.**

# இராணுவத் தளபதி யாழ் விஜயம்

## வடக்கே இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகுமா? புலிகளும் தயார் நிலையில்!

வடபகுதியில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் நீண்டகாலமாக ஓய்ந்திருந்த இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாவதற்கான அறிகுறிகள் காணப் படுகின்றன.

இலங்கையின் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன இவ்வார ஆரம்பத்தில் வடபகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். பலாலி இராணுவ தளத்திற்கும் அவர் விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகளோடு ஆலோசனை நடத்தினார்.

அரசியல் தீர்வு- பேச்சுவார்த்தை என்று பல்வேறுவிதமான பேச்சுக்கள் இருந்தாலும் புலிகளை இராணுவ ரீதியில் பலவீனமாக்கினால் மட்டுமே எதுவும் சாத்தியம் என்ற கருத்து பாதுகாப்புப்படை தலைமையிடம் இருக்கிறது.

புலிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவது ,சாத்தியமில்லை என்றாலும் அவர்களை பலவீனப்படுத்தி பேச்சுக்கு வரவழைப்பதையாவது செய்து முடிக்க வேண்டும் என்று ஒரு அதிகாரி கூறினார்.

யாழ்ப்பாணத்திற்குள் விரைவான இராணுவ நடவடிக்கை எடுப்பதும், உள்ளே செல்வதும் சுலபமான ஒரு காரியமல்ல. மக்களின் உயிரிழப்புக்கள் அதிகமானால் என்ன செய்வது என்பதும்



பாதுகாப்பு வட்டாரங்களுக்கு நெருக்கமான ஆலோசகர்களது கவலையாக இருக்கிறது.

குண்டுவீச்சுக்களால் புலி களை பலவீனப்படுத்தும் தந்திரோபாயம் குடியிருப்புக்கள் நிறைந்த யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்படுமானால் அது புலிகளை பலவீனப்படுத்தாது. பாதிக்கப்படும் மக்களது அனுதாபத்தையும் ஆதரவையுமே புலிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும்.

இதேவேளையில் புலிகளும் தமது காவல் அரண்களை பலப்படுத்துவதிலும் தாக்குதலை எதிர்கொள்ளும் ஏற்பாடுகளைச் செய்வதிலும் முனைப்புக் காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினர் அடுத்த இலக்காக வைத்து முன்னேறக்கூடும் என்று கருதப்படும் பகுதிகளில் உள்ள மக்கள் மோதல் ஏற்பட்டால் விலகிச்செல்ல தயாரான ஏற்பாட்டில் இருக்கின்றனர். பாதுகாக்கப்படவேண்டிய -பெறுமதியான உடமைகளில் கையோடு கொண்டு செல்லக் கூடியவற்றை மூட்டை முடிச்சுக்களாக்கி வைத்திருக்கின்றனர்.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்ததும் வடக்கே தாக்குதல் ஆரம்பமாகும் என்றே கருதப்படுகிறது.

புலிகளும் அவ்வாறுதான் யாழப் பாணத்தில் கூறிவருகின்றனர்.

எப்படியோ யுத்த மேகங்கள் கலைவதாகத் தெரிவதில்லை. இடி யோடு கூடிய மழை எப்போது பெய்யும் என்பதுதான் கேள்வி.

## வேங்கை பாய்ந்தால் மான் கூட்டம் தப்பாது! ஐ.ரி.என். அதை அங்கீகரிக்கிறது!!

கடந்த சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு இலங்கையின் ஐ.ரி.என் தொலைக்காட்சியில் அன்னை என் தெய்வம் படம் காண்பிக்கப்பட்டது.

விஜயகாந் நடித்த சிறந்த படங்கள் எத்தனையோ இருப்பது சம்பந்தப்பட்ட வர்களுக்கு தெரியாமல் போனது வேறு விவகாரம்.

அந்தப் படத்தில் இடம்பெற்ற காட்சிகளிலும் - பாடல் ஒன்றிலும் மிகத் தாராளமாக புலி ஆதரவு விசயங்கள் இருப்பது தெரியாமல் போனதுதான் பெரிய ஆச்சரியம்.

புலி என்ற ஒரு சொல் வந்தாலே பாடலையும்- காட்சியையும் கத்தரி சாப்பிட்டு விடும் என்பது தெரிந்த சங்கதிதான்.

முன்னர் ரூபவாஹினியில் திருவருட் செல்வர் படம் காண்பிக்கப்பட்டபோது "மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்கத் தேவையில்லை. புலிக்குட்டிக்கு பாயச் சொல்லித்தர வேண்டியதில்லை" என்ற வசனத்தை பாய்ந்து அரை குறையாக வெட்டியிருந்தார்கள்.

ஆனால் கடந்த சனிக்கிழமை ஐ.ரி.என் சுயாதீன தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட படத்தில் கத்தரிக்கு வேலையே இல்லை.

"எனக்கு கிளி மாதிரி ஒரு மனைவியும்- புலி மாதிரி ஒரு மகனும் வீட்டில் இருக்கின்றனர்"

இது படத்தில் ஜெய்சங்கர் விஜயகாந்தைப் பார்த்துச் சொல்லும் ஒரு வசனம்.

அடுத்து ஒரு பாடல்.

"வேங்கை பாயாது. பாய்ந்தால் மான்கூட்டம் தப்பாது" பாடலில் இந்த வரிமட்டும் பல தடவை திருப்பித் திருப்பி வ்நதது. அதுதவிர "நான்யார் தெரியுமா- குறிவைச்சாத் தப்புமா" என்ற ரக கேள்விகளும் பாடலில் தலைகாட்டின.

படம் பார்த்தவர்களுக்கு மகா ஆச்சரியம். சுயாதீன தொலைக்காட்சியின் 'தாராளப் போக்கைப் பாராட்டலாம். கவலையீனப் போக்காக இருந்தால் என்ன செய்யலாம் என்பதை அரசாங்கம்தான் சொல்லவேண்டும்.

கொழும்பில் புலிகள் ஊடுருவல் என்று கைதுகள் நடக்கின்றன. அப்பாவிகளும் உள்ளே இருந்து கம்பி எண்ணுகிறார்கள். என்ன செய்வது, புலிகள் தப்பக்கூடாது என்பதால் இப்படி நடக்கிறது என்கிறார்கள்.

ஆனால் தொலைக்காட்சியில்-

"வேங்கை பாய்ந்தால் மான் கூட்டம் தப்பாது" பாடல் ஒலிக்கிறது.

மொத்தத்தில் சகல பக்கத்திலும் பிரச்சனை மான் கூட்டத்திற்குத்தான்.

### தமிழக அரசியல்

## "கட்சி குடும்பமாகலாம் குடும்பம் கட்சியாகக்கூடாது"

தமிழக அரசியல் கட்சிகளில் கட்டுக்கோப்பும்-கட்டுப்பாடான தொண்டர் பலமும், அமைப்புப்பலமும் கொண்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

ஆட்சி அதிகாரம் கைவிட்டுப் போன பின்னரும் கட்சிக்காக உயிர் கொடுத்து உழைக்கும் தொண்டர்பலமே திமுகவின் முதுகெலும்பு.

அறிஞர் அண்ணாவால் ஆரம்பிக்கப் பட்டு இன்று கலைஞர் கருணாநிதியால் தலைமை தாங்கப்படும் கட்சிக்கு இப்போது சோதனைக்காலம்.

உட்பூசல் வலுத்துவிட்டது. வை. கோபால்சாமி மன்னிப்புக் கேட்டார். நாஞ்சிலார் மறுப்பறிக்கைவிட்டார் என்று மூடிமறைக்க முயன்ற உட்பூசல்கள் இன்று பகிரங்கமாகிவிட்டன.

மு. கருணாநிதி மீது கட்சிக்குள் ஒரு பிரிவினர் அதிருப்தி கொண்டுள்ளனர்.

தி.மு.க. என்பதை திருவாரூர் மு. கருணாநிதி என்று மாற்றி கட்சியை தன் குடும்ப சொத்தாக அவர் மாற்றுகிறார் என்பதே குற்றச்சாட்டாகும்.





"கட்சி குடும்பமாகலாம். குடும்பம் கட்சியாகக் கூடாது" என்கிறார் தி.மு.க.வில் இருந்து சமீபத்தில் வெளியே தள்ளப்பட்ட துணைப்பொதுச் செயலாளர் நாஞ்சில் மனோகரன்.

நாஞ்சில் மனோகரன் ஒருகாலத்தில் எம்.ஜி.ஆரோடு போய்ச் சேர்ந்து அமைச்சராக இருந்தவர். பின்னர் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாக கருதி எம்.ஜி.ஆரை விட்டு விலகியவர். ஆனால் கணிப்பு பொய்த்தது.

அவரது கையில் எப்போதும் ஒருசிறு தடி இருக்கக்கூடும். அதனால் மந்திரக் கோல் மனோகரன் என்று கட்சிக் காரர்களே கேலி செய்வார்கள்.

இப்போது நாஞ்சில் மனோகரன் வை. கோபால்சாமி தி.மு.க. தலைவராக வேண்டும் என்கிறார்.

முதியவர்கள் நாங்கள் ஒதுங்குவோம். வை. கோபால்சாமி போன்ற இளைஞர்கள் தலைமை ஏற்கட்டும் என்கிறார்.

நாஞ்சில் மனோகரனுக்கு வை. கோபால்சாமி (வை.கோ.) அணியினர் ஆதரவு கொடுத்தனர். அந்த துணிச்சலில் தி.மு.க. ஆதரவு ஏடான தினகரனில் நாஞ்சிலார் ஒரு கவிதை எழுதினார்.

கவிதை கருணாநிதியை சாடியது. கோபப்படபோதும் கலைஞர் விவேகமாக காய் நகர்த்தினார்.

மனோகரன் மன்னிப்பு கேட்க வேண்டும். கட்சி நலன்கருதி நட்புநலன் வேண்டி.

கருணாநிதி தூது விட்டார். மு.க. ஸ்டாலினும் மன்னிப்புகேளுங்கள் மறப்போம் மன்னிப்போம் என்கிறார்.

நம்பிய நாஞ்சிலார் கடிதம் எழுதினார். "கடிதம் கூட நான் எழுதவில்லை. நீட்டினார்கள். காட்டிய இடத்தில் கையொப்பம் போட்டேன். ஏமாற்றி விட்டார்கள்" என்று இப்போது நாஞ்சிலார் பேட்டி அளித்துள்ளார்.

கடிதம் மட்டுமல்ல தன்னை தூண்டி விட்டவர்கள் என்று ஆறு மாவட்ட செயலாளர்களது பெயர்களையும் நாஞ்சிலார் வெளியிட்டார்.

நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று கலைஞர் மு.க. உறுதிதந்தார் அதுதான் பெயரைச் சொன்னேன் என்று இப்போது சொல்கிறார்.

நாஞ்சிலாரை வாயைமூடவைத்து வெளியே தள்ள திட்டமிடப்பட்டபோதே வை. கோபால்சாமியிடம் மன்னிப்புக் கடிதம் கேட்கப்பட்டது.

வை. கோ. கலைஞரைச் சந்தித்தார். தனது ஆதரவாளர்கள் வெளியேற்றப் படுவதை வருத்தத்தோடு சுட்டிக் காட்டினார். "என்றும் நீங்கள் தானே என் தலைவர். உங்கள் காலடியில் இருக்கும் என்னை இப்படி ஏன் தொல்லைப்படுத்துகிறீர்கள்" என்று அவர் கலைஞரிடம் கேட்டார்.

கலைஞர் "பார்க்கலாம்" என்றாரே தவிர உறுதியான பதில் சொல்லவில்லை.

மாறாக கட்சியின் செயற்குழுவில் வை. கோபால்சாமியிடம் மன்னிப்புக் கடிதம் பெறப்பட்டது.

மறுநாள் பத்திரிகைகளிலும் கடிதம் வெளியானது.

பத்திரிகைகளுக்கு கொடுக்க மாட்டோம் என்றே கடிதம் பெறப்பட்டது என்று வை. கோ. அணி கூறுகிறது.

இதேநேரத்தில் வை. கோபால்சாமிக்கு ஆதரவான நெல்லை மாவட்டத்தில் கலைஞர் கருணாநிதியின் மகனான மு.க. ஸ்டாலினின் ஆதரவாளர்கள் கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

வை. கோபால்சாமிக்கு நெல்லையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் உற்சாகம் கரைபுரண்டோடியது. மறந்தும் கூட யாரும் கருணாநிதியின் பெயரை உச்சரிக்கவில்லை. அது வேறு கலைஞர் கருணாநிதியை உசுப்பி விட்டிருக்கிறது என்கிறார்கள்.

கட்சிக்குள் கருணாநிதியின் மகன் மு.க. ஸ்டாலின், மருமகன் முரசொலி மாறன், மற்றொரு மகன் மு. அழகிரி ஆகியோரது ஆதிக்கம் அதிகமாகிவிட்டதாக அதிருப்தியாளர்கள் குற்றம் சாட்டு கிறார்கள்.

முரசொலி பத்திரிகை, குங்குமம், வண்ணத்திரை, சுமங்கலி, முத்தாரம் போன்ற சஞ்சிகைகள் யாவும் குடும்பச் சொத்தாகவே இருக்கின்றன. மாறனும் ஏனைய மருமக்களுமே அவற்றை கவனித்துக் கொள்கின்றனர்.

எனவே கட்சியை குடும்ப ஆதிக்கத்தில் இருந்து மீட்க வேண்டும். கட்சிச் சொத்துகளுக்கு கணக்கு கேட்க வேண்டும் என்று நாஞ்சில் மனோகரன் போன்றோர் கூறிவருகின்றனர்.

உட்பூசல்கள் தொடர்கிறது. மேலும் பல சுவாரசியமான தகவல்கள் மறுவாரம் தரப்படும். ■

## தொடங்கவிருக்கிறது துறைமுக அபிவிருத்தி அஸ்வரின் முயற்சிக்கு கைமேல் பலன்!

(புத்தளம் நிருபர்- புல்கி)

புத்தளம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த கற்பிட்டி நகரத்தில் அமைந்துள்ள பழம்பெருமை வாய்ந்த மீன்பிடித் துறைமுகம் நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை துரிதமாக செயல்படுத்த புத்தளம் மாவட்ட நியமன எம்.பி.யும், முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சருமான அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இந்த மீன்பிடித் துறைமுகம் நவீன முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் ராஜாங்க அமைச்சர் அஸ்வர், கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேராவிடம் வலியுறுத்தியுள்ளார்.

வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள ஏராளமான முஸ்லிம் மீனவர்கள் இந்த மீன்பிடித் துறைமுகத்தின் மூலமே தமது தொழிலை நடாத்தி வருகின்றனர்.

மேலும், புத்தளத்திலிருந்து மன்னாருக்கு தொடர்பு கொள்ளும் ஒரே மார்க்கம் இந்த கற்பிட்டி மீன்பிடித் துறைமுகம் மூலமே நடைபெறுகின்றனது. மன்னாரில் வதியும் மக்களுக்கு இங்கிருந்தே உணவுப் பொருட்களும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆதிகாலத்தில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய இத்துறைமுகம் மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டால் புத்தளத்திலிருந்து உப்பு, வெங்காயம், சீமெந்து என்பன குறைந்த செலவில் மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரும்பக்கூடிய நிலைமை இருந்தால் திரும்பிச் செல்ல அகதிகள் தயார்!

(மன்னார் நிருபர்)

சென்ற 1990ம் ஆண்டு வடபகுதியிலிருந்து வெளியேறி தற்போது புத்தளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் முஸ்லிம் அகதிகள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

போதிய வருமானமின்மை, அதிக மான செலவு, நுளம்புத்தொல்லைகள், நோய் பரவுதல், கல்வி வசதி இன்மை போன்ற பல்வேறு வகையான கஷ்டங்களை அனுபவித்து வரும் இவர்களில் அதிகமானோர் அகதி முகாமில் வசித்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் படையினரின் பூரண கட்டுப்பபாட்டிலுள்ள பகுதிகளில் வசித்த முஸ்லிம்கள் மீண்டும் அங்குசென்று குடியேற போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படாததினால் அதிகமானோர் அகதி முகாம்களில் கஷ்டப்படுகின்றனர்.

பாதுகாப்பு வசதி, போக்குவரத்து, கல்வி உட்பட பல வசதிகளைச் செய்து கொடுக்கப்படாமையினாலும்,அங்குள்ள பலரது வீடுகள் சேதமடைந்திருப்பதாலும் அங்கு செல்ல மக்கள் தயங்குகின்றனர்.

உடனடியாக இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வந்தால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அங்கு செல்லத் தயாராக இருப்பதாக தெரியவருகின்றது.

## சித்திரத் தேரேறி அம்மன் திருப்பவனி! ஆண்களோடு பெண்களும் வடம் பிடித்த காட்சி!

கொழும்பு, மயூரபதி அருள்மிகு பத்திரகாளி அம்மன் ஆடிப்பூரவிழா கோலாகலமாக நடைபெற்றது. ஜுலை 23ம் திகதி காலை பாற்குட பவனியும் தொடர்ந்து அம்மனுக்குப் பாலாபிஷேகமும் நடைபெற்றது. மிகக் குறுகிய காலத்துக்குள் அமைக்கப்பட்ட மூன்று சித்திரத் தேர்களும் கலை அழகுமிக்கவை. இவற்றில் முறையே விநாயகப் பெருமான், அம்பாள், வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணியப் பெருமான் ஆகிய மூர்த்திகள் அமர்ந்து 24ம் திகதி சனிக்கிழமை காலை திருவீதி உலாப் போந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆண்களுடன் போட்டிபோட்டுக்கொண்டு பெண்களும் அம்மன்தேரை வடம் பிடித்து இழுத்துச்சென்ற காட்சி கொழும்பு மாநகரிலே என்றுமே கண்டிராத கோலமாகும்.

அம்மன் திருவீதி உலா செல்லும் காட்சி இவ்வளவு சிறப்பாக- கொழும்பு மாநகரிலே, ஜுலை 24ம் திகதி இத்தகைய பக்தி சிரத்தையுடன் நடைபெறுவதைக் கண்டு பக்திப்பெருக்கால் கண்ணீர் விட்டு அழுவோரையும் கண்டோம். பத்தாண்டுகளுக்கு முன்னர் இதே நாளன்று கொழும்பிலே வாழ்ந்த தமிழ்மக்கள்பட்ட வேதனையும் அடைந்த சோதனையும் நீங்கி சுமுகமானதோர் சூழ்நிலை இன்று ஏற்பட்டுள்ளதைக் கண்டு பலர் அம்பாளுக்கு கண்ணீர் சிந்தி நன்றி கூறுவது போலவும் அக்காட்சி அமைந்திருந்தது.

## வெகுவிரைவில் மொழிபெயர்ப்பு வசதி மத்தியமாகாண முதல்வர் உறுதி!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் உறுப்பினர்கள் நிகழ்த்தும் உரைகளை உடனுக்குடன் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கும் வசதிகள் விரைவில் செய்து கொடுக்கப்படும்.

தமிழ் உறுப்பினர்கள் தெரிவித்த பல குறைபாடுகளைத் தொடர்ந்து சபைத் தலைவர் திரு. சரத் கோங்கஹகே இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

மாகாண சபையில் இப்பொழுது இடம்பெற்றுவரும் இத்தகைய மொழி பெயர்ப்பு வசதிகள் மேலும் விரிவாக்கப்பட வேண்டுமென உறுப்பினர்கள் பல தடவைகளும் சபைத் தலைவரை வற்புறுத்தி வந்தனர். 56 பேர் அங்கம் வகிக்கும் மத்திய மாகாண சபையில் ஆளுங்கட்சியில் 13 பேரும் எதிர்க்கட்சியில் 3 பேரும் தமிழ் பேசும் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். தமிழ் உறுப்பினர்கள் பலரும் தமிழ் மொழியிலேயே தங்களது உரையை நிகழ்த்தி வருவதால் தமிழ்ப்பிரயோகம் தாராளமாக சபையில் இடம்பெற வேண்டுமென்பதே அவர்களது விருப்பமாகும். இதன் பொருட்டே புதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட உள்ளன.

## பெண்களுக்கான உபவாசக் கூட்டம்

ஜுலை 31ம் திகதி காலை 9.30 மணிக்கு கிராண்ட்பாஸ், லெயார்ட்ஸ் புரோட்வே வீதியில் அமைந்துள்ள சிறீ நாராயண குரு மண்டபத்தில் எல்லா சபைகளையும் சார்ந்த எல்லா பெண்களுக்குமான பெண்கள் உபவாசக் கூட்டம் நடை பெறுகிறது. இக்கூட்டத்தில் தென் இந்தியாவில் இருந்து வரும் சகோதரி சாரா. சுப்பிரமணியம் சிறப்பு செய்தியளிக்கிறார்கள். இக்கூட்டத்தை ராஜ்யத்தின் வீராங்கனைகள் ஒழுங்கு செய்துள்ளார்கள்.

நகர் நனுவண்டம்

**-ஒற்றன்-**

# காதலரை பயமுறுத்தும் அடையாள அட்டைப் பிரச்சனை!

ஒரே வெப்பம். உச்சியில் தாக்கி ஒரேயடியாய் வாட்டிப்போடும் வெப்பம்.

இடைக்கிடையே மேகம் இரங்கி கீழே இறங்கி பூமியின் மேனியை தழுவி நனைத்தாலும் சூடு தணியாத தொடர் வெப்பம்.

காலாற நடந்து காற்றுவாங்கலாம் என்று கோல்பேஸ் கடற்கரை நோக்கி தாவினோம்.

என்ன ஆச்சரியம்- கோல்பேசின் மார்பில் குடைகள் விதைத்தது யார்.

வர்ணக்கலர்களில் எத்தனை குடைகள்? விழிகள் வியப்பால் விரிய உள்ளே இறங்கினோம்.

வாகனங்கள் வரிசையாக அடுக்கப் பட்டிருந்தன.

பூ தசாரிகளை மட்டுமல்ல வாகன சாரிகளையும் (அப்படிச் சொல்லலாமோ) வெப்பம் விட்டுவைக்கவில்லை. சமத்துவமான வெப்பம். நினைத்துக் கொண்டே இளம் சிவப்பு வானுக்குள் பார்வையை வீசிய வேளையில் மின்சாரம் தாக்கிய அதிர்ச்சி.

பார்ப்பது நாகரிகமில்லை என்ற போதும் பத்திரிகையாளன் புத்திபோகுமோ? பார்த்தோம். நம்மை மட்டுமல்ல ரைவிங் சீற்றில் ஏறி வாகனத்தை எடுத்துச் சென்றால் கூட கவனிக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. அத்தனை ஆர்வமாய் பின்சீற்றில் அந்த ஜோடி. சுவாரசியமான ஆராய்ச்சிகள்.

மெல்ல நழுவி திடலுக்குள் நடந்தோம்.

குடை விற்கும் கடைக்கு போனால் கூட இத்தனை நிறங்களை பார்க்க முடியாது.

நீண்டநாளாக ஒரு நல்ல குடை வாங்கவேண்டும் என்று ஆசை. இருந்த குடையொன்றை கடையில் ரீ அடித்து விட்டு மறந்து போய் வந்தது மகாபெரிய இழப்பு.

சில குடைகள் வாங்கும் போது வலுவாகத் தெரியும். பிறகு பாவிக்கும் போது பிரச்சனை பண்ணும்.

இப்போது கோல்பேசில் குடைகளைப் பார்த்த போது- அதுவும் வர்ணக்கலரில் பார்த்த போது சந்தோசமாக இருந்தது.

எந்தப் பொருளைக் கண்டாலும் எடுத்துப் பார்த்து தரம் அறிவது நமக்கொரு பழக்கம். இதனால் எத்தனையோ கடைக்காரர்களின் முகம் சுளிப்பையும், முணுமுணுப்பையும் சந்தித்தாயிற்று. என்றாலும் பழக்கத்தை விடவில்லை. தொட்டில் பழக்கம் அல்லது தொட்டு தூக்கிப் பார்க்கும் பழக்கம் சுடுகாடுவரை வருகிறதோ இல்லையோ கோல்பேஸ்வரை வந்துவிட்டது.

மெல்ல போய் ஒரு குடையை கரத்தில் எடுக்க ஆர்வமாகி குனிந்தோம்.

சிணுங்கல் சத்தம் முகத்தில் அறைந்தது. திடுக்கிட்லோடு நிமிர்ந்தோம். கண்ட காட்சி உள்ளே ஒரு சின்ன நெருப்பை மூட்டிவிட்டது. என்ன செய்வது எம் வயதும் அப்படி.

குடை பார்க்க போனது மறந்து



குடைக்குள் பார்த்தது பத்திரிகையாளன் புத்தியை தட்டி எழுப்பியது.

அங்கங்கே முளைத்திருந்த குடைகளுக்குள் ஒரு பார்வையை எறிந்தோம்.

சில ஜோடிகளின் முதுகுகள் மட்டும்தான் தெரிந்தன. முகங்களை குடைகள் மறைத்தன.

குடையின் உபயோகமே மாறிப் போய் விட்டது. தலையில் வெய்யில் தாராளமாக இறங்கியது. குடையை வேறு பணிக்கு பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

மடியில் முகம் புதைத்து இருந்ததால் பெண்ணின் முகம் தெரியவில்லை. அணிந்திருந்த பள்ளிச்சீருடை மாணவி என்பதை அத்தாட்சிப்படுத்தியது.

பெற்றோர் தம்பிள்ளை பள்ளிக்கு என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். வீடு வந்தவுடன் வாய்க்கு ருசியாக சாப்பிடட்டும் என்று அம்மா சமையலறையில் கஸ்டப் பட்டுக்கொண்டிருப்பாள். யூனிபோமுக்கு- புத்தகங்களுக்கு- பேருந்து செலவுக்கு என்று மாத வருமானத்தில் தனது பிள்ளைக்கு ஒரு பகுதியை ஒதுக்கிவிட்டு தந்தையார் தனது பழைய சட்டையை கிழிசல் தைத்து போட்டுக்கொண்டு போயிருப்பார்.

இங்கே பிள்ளை மடியில் சுகம் தேடுகிறது. இது உத்தரவாதமான காதல்தானா? ஆராய்ச்சிகள் முடிய சுவாரசியம் போனபின் ஓய்ந்துவிடுமா, இல்லையா? இதையெல்லாம் பகுத்துப்பார்க்கும் வயதின் பக்குவம் போதுமா?

நினைத்துப் பார்க்க கவலையாக இருந்தது. நாகரிகம் என்ற போர்வைக்குள் வாழ்க்கையை தொலைக்கலாமோ என்று இளம் வயதினர் சிந்தித்தால் என்ன?

காதல் என்பது இருவரது தனிப்பட்ட விவகாரம். ஆனால் பொது இடத்தில் சரசம் புரிவதும் சல்லாபம் நடத்துவதும் மற்றவர்களையும் பாதிக்கும் அல்லவா.

கோல்பேசில் குடும்பத்தினரோடு வருவோர் சங்கடத்தால் நெளிகிறார்கள்.

சுற்றம் சூழல் பற்றி கவலையில்லாமல் வானமே வந்து தலையில் விழுந்தாலும் கவனிக்க நேரமில்லாமல் தேடல்களில் ஈடுபடும் ஜோடிகளை தம் சிறு பிள்ளைகள் பார்க்கவிடாமல் முகத்தை திருப்பி அழைத்துச் செல்லும் பெற்றோர் எம் பார்வையில் பட்டனர்.

கோல்பேஸ் காதலர் களமாக மாறும் வேகத்தைப் பார்க்கும் போது காற்றுவாங்க வருவோர் வேறு இடம்தான் பார்க்க வேண்டிவரும்.

என்றாலும் இலவச சினிமாவை பார்த்து பொழுது போக்குவோரும் இல்லாமல் இல்லை.

கோல்பேசிலும் தமிழ் குரலுக்கு பஞ்சமில்லை. விடுமுறை தினங்களில் கோல்பேசிற்கு போனால் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பாதிப்பேரைப் பார்க்கலாம் போல் இருக்கும்.

தமிழ் காதல் ஜோடிகளும் கோல்பேசில் புகுந்து கொள்கிறார்கள்.

நமது நண்பர் ஒருவர் சுவையான தகவல் ஒன்றைக் காதிலே போட்டார்.

சில நாட்களுக்கு முன் கோல்பேசிலும் சீருடையினர் பார்வை விழுந்தது.

லைசன்ஸ் இல்லாமல் காதலிக்கும் ஜோடிகளிடம் அடையாள அட்டை கேட்கப் பட்டது.

தமிழ் ஜோடி ஒன்று மாட்டிக்கொண்டு முழித்ததாம். விசயம் காதலர் வட்டாரத்தில் பரவியதால் சின்னதாக ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது.

விசாரிக்க-பதிலாக விலாசம் சொல்ல வீட்டிலே தெரிய வந்தால் பிரச்சனை என்றுசில ஜோடிகள் கோல்பேஸ் பக்கம் வருவதை நிறுத்தி விட்டதாக கடைக்காரர் ஒருவர் வருத்தப்பட்டார்.

வந்தால்தானே வியாபாரம்.

ஒரு சில ஜோடிகள் கடைக்காரர்களுக்கு பரிச்சயமாகிவிடுகிறார்கள். கடன் வைத்திருப்பவர்களும் உண்டு. அடையாள அட்டைப் பிரச்சனை பெரும்பான்மை இன ஜோடிகளுக்கு பிரச்சனை ஏற்படுத்தாது. ஆனாலும் விசாரிப்புக்கள் வீண் பிரச்சனைகளுக்கு காரணமாகும் என்று சில ஜோடிகள் பயப்படுகின்றன. பயப்படுவது இருக்கட்டும். கடைக்காரரின் பாக்கியையாவது மறக்காமல் வந்து செலுத்தட்டும்.

கோல்பேசில் இருந்து தெருவுக்கு கால்வைத்தபோது 'களுக்' என்று ஒரு சிரிப்பு கேட்டது. திரும்பிப்பார்த்தால் காருக்குள் ஒரு ஜோடி பாருக்குள் இதுதான் மிக உபயோகமான விசயம் என்பது போல தம்மை மறந்திருந்தது. டோண்ட் டிஸ்டர்ப். நாம் தலையில் அடித்தபடி தெருவில் இறங்கி மினிபஸ்சில் தாவினோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-09

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | ■ |
| | 4 | 5 | | | | 6 |
| | | | | ■ | | |
| | | | ■ | | ■ | |
| | ■ | 7 | | 8 | | ■ |
| ■ | 9 | | | ■ | | 10 |
| 11 | | | ■ | 12 | 13 | |

### இடமிருந்து வலம்

1. இது இல்லாவிட்டால் தேரே ஓடாது.
5. வாகனங்கள் இல்லாத காலத்தில் மன்னர்கள் இதிலும் பயணம் செய்தார்கள்.
7. மனிதவாழ்வின் ஒரு கட்டம்.
9. தண்டனைக்குரியது.
11. உழவனின் களம்.
12. இவர்களில் சிலர் வெள்ளைச் சேலை உடுப்பார்கள்.

### மேலிருந்து கீழ்

1. இங்கு அந்தப்புரமும் இருந்திருக்கிறது.
2. பழமென்றால் இதற்கும் பிரியம்தான். (குழம்பியிருக்கிறது.
3. உறுமீன் வருமளவும் வாடி இருக்கும் இது.
4. வரும் சோதனைகளை திடமுடன் வெற்றி கொண்டால் இதனை அடையலாம்.
5. புலிகள் இங்கும் புகுந்தார்கள்.
6. ஏழைகள் இங்கு வாழ்ந்தாலும் அவர்கள் கோபுரம் போன்றது என்று சொல்வார்கள்.
8. இதுவரப் பத்தும் பறந்து போகும். (தலைகீழாக உள்ளது)
10. பெண்ணை இப்படியும் சொல்வதுண்டு.
13. காலால் இதைப் போட்டால் மற்றவர் கவிழ வேண்டியதுதான்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டை ஒன்றில் வெட்டி ஒட்டி 07.8.93 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல.-09**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

சரியான விடையை எழுதி அனுப்பும் பத்து அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/- பகிர்ந்தளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-07 இற்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மி | ன் | ன | ல் | ■ | 2 தே | ன் |
| ரு | 3 பெ | 4 வி | ■ | று | யி | 5 க |
| 6 த | ட் | ச | ணை | ■ | லை | சோ |
| ங் | டி | ன | ■ | 7 சோ | ■ | 8 அ |
| க | ■ | ம் | 9 பா | ம் | பு | ■ |
| ம் | டி | ■ | ம் | ப | ல | 10 சு |
| ■ | 11 செ | ங் | க | ல் | ■ | 12 சி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.07ல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. அ. சித்திரா திருகோணமலை.
2. திருமதி. நஸ்லியா ஹுசைன் புத்தளம்.
3. சா. சியாமளாதேவி வாழைச்சேனை.
4. எஸ்.ஏ. நஸார் அம்பகஸ்தோவை.
5. ச. ராஜ்குமார் திருகோணமலை.
6. எம். எம். சாந்திகுமார் கொத்மலை.
7. சி. தயாளினி இறம்பொடை.
8. அஸாஹிம் மாளிகாவத்தை.
9. செல்வி. ஜெயந்தி கதிரேசன் குருநாகல.
10. ச. கஜேந்தினி தெஹிவளை.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/- வழங்கப்படும்.

## புகார் பெட்டி

### திருத்தப்பட்டது நிறுத்தப்பட்டதேன்?

தம்பலகாமம், கிண்ணியா பிரதான பாதை இடையிடையே செப்பனிடப்பட்டு வந்தது தெரிந்ததே. அதுவும் சில மாதகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் தனியார் பஸ் வண்டிகள் மட்டுமே பயணத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன. 50 ஆயிரம் மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் ஒரு சில தனியார் பஸ்கள் பயணத்திற்கு போதாதுள்ளது. இதனால் அரசாங்க பஸ்களையும், பாதையையும் விரைவில் அமைத்துத்தர சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

நியாஸ் மொஹமட்
சின்னக்கிண்ணியா-03

### தொலைபேசி வருமா?

டிக்கோயா புளியவத்தை நகரில் அண்மையில் வேறு இலக்கத்துக்கு இடமாற்றப்பட்ட தபாற் கந்தோருக்கான தொலைபேசி வசதி இதுநாள் வரை இணைக்கப்படவில்லை. இதன் காரணமாக இப்பகுதி பொது மக்களும் மற்றும் வர்த்தகர்களும் தங்களது அவசரத் தேவைகளுக்கென டிக்கோயா நகரங்களுக்கே பெரும் அசெளகரியங்களுக்கு மத்தியில் செல்ல நேரிடுகிறது. இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் இனியாவது விரைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

எஸ்.பி. சுப்பிரமணியம்
புளியாவத்தை மே.பி

### பாதையின் பரிதாபம்

குருனாகலை மாவட்டத்தில் மாவத்தகமைத் தேர்தல் தொகுதியில் பரகஹதெனிய கிராமம் அமைந்துள்ளது. பரகஹதெனிய சந்தியிலிருந்து சிங்கபுர கிராமத்தினூடாக பிரிந்து செல்லும் பாதை படுமோசமான நிலையில் சிதைந்துக் கிடக்கின்றது.

மழைக்காலத்தில் பெரும் குழிகளில் நீர் தேங்கி நிற்பதால் பயணம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. இன்னும் சில மாதங்கள் நீர்த்தேங்கி நின்றால் சிறுவர்கள் மீன் பிடிக்கத் தொடங்கி விடுவார்கள் போல் தோன்றுகிறது. வெயில் காலங்களிலும் குழிகளினால் வாகனங்கள் அவதிப்பட்டே போகின்றது. இப்பாதையை சீர்படுத்த சம்பந்தப் பட்டோர் தயவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். சிங்கபுர ஊர் மக்கள் சார்பாகவும், பேச முடியாத வாகனங்களின் சார்பாகவும்.

ரம்ஷீன்ராஜா-பரகஹாதெனிய.

### மெல்லக் கேட்கும் தமிழ்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன காலை தமிழ் நிகழ்ச்சி மாத்திரம் அதிகளவு சத்தம் குறைவாகவே உள்ளது. மற்றைய மொழிகளில் சீரான ஒலிபரப்பு கிடைக்கிறது. தமிழ் ஒலிபரப்பில் மாத்திரம் ஏன் இந்த நிலை. உரியவர்கள் இதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா?

நஸ்ரினா பேகம் றபீக்
தர்கா நஹர்.

### குளோரின் அதிகம்தான்!

அண்மையில் புத்தளம் நகரில் ஆரம்பிக்கப்பட்ட குழாய் நீர் நன்றாக இருந்தும், ஒரே ஒரு குறை இதுதான். அளவுக்கு அதிகமான குளோரினை கலப்பதால் மக்களுக்கு இது ஒரு பெரும் பிரச்சனையாகவே உள்ளது. தயவு செய்து இனியாவது கவனிக்க வேண்டும்.

எஸ். மெஹர்பான்ஹசன்
புத்தளம்.

### அக்கரையூரில் ஒரு அக்கறைக்குரிய விசயம்!

அக்கரைப்பற்றின் தேசிய கல்லூரிக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் போக்குவரத்து செய்யும் மிகப் பிரதான பாதையான "பிஸ்கால்" வீதி அதிமிக மோசமாகி குன்றும் குழியுமாகவும் கற்களும் மணல்களும் நிறைந்ததாக மிக அசிங்கமாக காட்சி அளிக்கிறது.

அக்கரைப்பற்று தேசிய கல்லூரியான மத்திய கல்லூரியில் சுமார் 2500 மாணவர்கள் கற்கின்றனர். இவர்களில் இப்பாதையை பயன்படுத்துவோர் சுமார் 1500 பேராகும். எனவே இம் மாணவர்களினதும், இதனால் போக்குவரத்து செய்யும் ஆசான்களினதும் இப்பகுதி வாழும் விவசாயிகளினதும் ஏனையோர்களினதும் நலன் கருதி இப்பாதையை புனருத்தாரணம் செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு, அக்கரைப்பற்று மத்திய கல்லூரி வணி.மாணவர்கள் சார்பில் கேட்கிறேன்.

அக்கரையூர் தஸ்ரீப்.

### மன்னார் தொண்டர் ஆசிரியர்களின் அங்கலாய்ப்பு

1992-10-07ல் மன்னார் கல்வித் திணைக்களத்தினால் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. ஆனால் இன்றுவரை நியமனம் வழங்காத தாமதத்தின் தாக்கத்தினால் தவிர்த்துக் கொண்டிருக்கும் தொ-ஆசிரியர்களின் விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவண செய்வார்களா?

எஸ். சரோஜா
கல்பிட்டி.

### விபத்துக்கள் தடுக்க விரைவான நடவடிக்கை தேவை!

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் பாதை "றம்பொட" என்ற இடத்தில் சீராக இல்லை. இதனால் உயரமான மலைப்பிரதேசமான இவ்விடத்தில் செல்லும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்கு உள்ளாகின்றன. பாதையோரங்களில் தடுப்புக்கள் எதுவும் அமைக்கப்படாமையால் வாகனங்கள் பள்ளத்தில் வீழ்ந்து விடுகின்றன.

அடிக்கடி இம்மாதிரியான நிகழ்வுகள் இடம்பெற்று பலர் பலியாகி உள்ளனர். அண்மையிலும் நுவரெலியாவைச் சேர்ந்த பாடசாலை வாகனமொன்று இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியது. இவ்வாறான ஆபத்துக்கள் இனிமேலாவது நிகழாமல் இருக்க வேண்டுமானால் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். உடனடியாக கவனம் எடுக்கப்படா விட்டால் ஆபத்துக்கள் தொடரும் அபாயந்தான் இங்கு நிலவுகின்றது.

பிரிய பாரதி
நுவரெலியா.

புத்தளம்- கண்டல்குழி கிராமத்தில் அமைந்திருக்கும் பொதுசன நூலகத்தின் செயல்பாடு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. தினப் பத்திரிகைகளை ஒரு கிழமையின் பின்பே இங்கு காணமுடிகிறது. எம் போன்ற மாணவர்களுக்கு பயன்தரும் எந்தநூலையும் இங்குகாண முடியவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதை கவனித்து மாணவர்கள் பயனடைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன் வருவார்களா?

அனீஸா-கல்பிட்டி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தலைநகர அரசியல் அரங்கில் காட்சி மாற்றங்கள் ஏற்படுமா?

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

சமீப வாரங்களில் தலைநகரில் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்ட விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சியும்- ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணையப் போகின்றன என்பது.

முன்னாள் ஜனாதிபதி திரு பிரேமதாசா மறைந்ததையடுத்து தலைநகர அரசியல் நிலவரம் அரசியல் விமர்சகர்களையே குழப்பத்தில் ஆழ்த்துவதாகவே மாறி யிருக்கிறது.

ஆளும்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மாகாணசபைத் தேர்தலின் பின்னர் தனது பலவீனங்களை களைவதில் முனைப்புக் காட்டுகிறது.

மாகாண சபைத் தேர்தலை நோக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உடைவு ஏற்படாமல் இருந்திருந்தால் எதிர்க்கட்சிகள் தமது வெற்றிபற்றி கனவுகூடக் கண்டிருக்க முடியாது.

எனினும் ஒரு புதிய போக்கு சமீபகாலத்தில் வெளிப்பட்டுள்ளது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா மீது எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட தீவிர எதிர்ப்பு நிலை புதிய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க விடயத்தில் அக்கட்சிகளால் மேற்கொள்ளப் படவில்லை.

புதிய ஜனாதிபதியும் அவ்வாறான எதிர்ப்பு நிலைகளை





ரனில் விக்ரமசிங்கே



உருவாக்காத வகையில் நடந்துகொள்ளவே விரும்புகிறார் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

எனினும் பிரதமர் திரு.ரணில் எதிர்க் கட்சிகள் மீது சாட்டை தொடுப்பதிலும் தமது கட்சியின் தளத்தை ஸ்திரப் படுத்துவதிலும் தீவிரம் கொண்டுள்ளார்.

இளம் பிரதமர் என்ற வகையில் அவரது அரசியல் எதிர்காலம் பிரகாச மானதாக இருக்கிறது.

இளைய தலைமுறையின் கரங்களில் இலங்கையின் அரசியல் தலைமைத்துவம் வந்து சேர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

திரு. காமினி திசாநாயக்க, திருமதி சந்திரிக்கா குமாரனதுங்க, திரு. அநுரா பண்டாரநாயக்க ஆகியோரையும், திரு.ரணில் விக்கிரமசிங்கவையும் தென்னிலங்கை அரசியல் முன்னால் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

எதிர்காலத்தில் தென்னிலங்கை அரசியல் அரங்கின் பிரதான போட்டி யாளர்களாக மூன்றுபேர் முதன்நிலையில் உள்ளனர்.

பிரதமர் ரணில், திரு.காமினி, திருமதி சந்திரிக்கா ஆகியோர் மத்தியில்தான் மும்முனைப் போட்டி.

சாதகம் அதிகமாக இருப்பது பிரதமர் ரணிலுக்கு என்பதே பொதுவான கணிப்பாகும்.

அடுத்ததாக திருமதி சந்திரிக்காவுக்கே சாதகம் அதிகம்.

இவ்வாறான நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியும்- ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்தால் பிரதமர் ரணில் உள்ளேயே ஒரு போட்டியாளரை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும்.

கருத்தொருமிப்பு- கசப்புக்களை மறப்பது என்று எவ்வாறு கூறிக்கொண்டாலும் கூட திரு. காமினி இணைப்பின் மூலமான அரசியல் ஆதாயத்தை தனக்கு சாதகமாக்கும் விவேகம் கொண்டவர் என்பதை மறத்த லாகாது.

இல்லை என்று அடித்துச் சொல்லப் பட்டாலும் கூட திரு. அத்துலத்முதலிக்கும்- திரு.காமினிக்கும் இடையே கூட அதிகாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் மன வேறுபாடுகள் நிலவின.

என்றாலும் கட்சி உறுப்பினர்களதும் வாக்காளர்களதும் அபிமானத்திற்குரிய வராக திரு.அத்துலத்முதலி இருந்த மையால் திரு.காமினி பொறுமையோ டிருந்தார்.

எனவே இணைப்பு ஏற்படுமானால் புதிய முரண்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்படக்கூடும்.

அதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் இணைப்பில் பெரிய ஆர்வம் காட்டவில்லை.

வேண்டுமானால் கட்சியைக் கலைத்து விட்டு வந்து சேரட்டும் என்றே அவர்கள் சொல்கிறார்கள்.

கட்சியைக் கலைப்பது என்பது திரு.காமினியால் மட்டுமே செய்யக் கூடிய காரியமல்ல.

அவரது கட்சிக்குள் உள்ள திரு. அத்துலத் முதலியின் ஆதரவாளர்கள் ஐ.தே கட்சியோடு இணைவதைக்கூட விரும்ப வில்லை என்றே தெரிகிறது. கலைப் பென்றால் அவர்கள் கிளர்ந்தெழுவார்கள்.

அது தவிர திரு. அத்துலத் முதலியின் பாரியார் திருமதி சிறிமாணியும் அரசியலில் குதித்து, முழுநேர அரசியல்வாதியாக மாறிவருவதால் அவரது கருத்துக்களையும் திரு. காமினி திசாநாயக்க கவனத்தில் கொள்ள வேண்டியவராக இருக்கிறார்.

திரு. அத்துலத் முதலியின் கொலையில் அரசாங்கத்திற்கு எவ்வித தொடர்புமில்லை என்று ஸ்கொட்லாண்ட் பொலிஸ் குழுவினர் வெளியிட்ட விசாரணை அறிக்கையை திருமதி சிறிமாணி வேகமாய் மறுத்துள்ளார். பதிலறிக்கையும் தயார் படுத்தியுள்ளார்.

அவரது வேகமான மறுப்பின் பின்னணியில் தனது கணவர் மீதான அபிமானம் மட்டுமல்லாமல், ஆழ்ந்த அரசியல் நோக்கும் இருக்கிறது என்றே கருதப்படுகிறது.

திரு. காமினி திசாநாயக்க தான் நினைத்தபடி காய்களை நகர்த்த முடியாது என்பதையே சிறிமாணியின் அரசியல் ஆர்வம் வெளிக்காட்டுகிறது.

எனவே சந்திப்புக்களை மட்டுமே வைத்து இணைப்பு இதோ வந்து விட்டது என்று கணிப்புக் கூற முடியாத நிலையே இருக்கிறது.

இன்னொரு பேச்சும் அடிபட்டது. அது சில பத்திரிகைகளிலும் பரபரப்பாக இடம்பிடித்துக் கொண்டது.

"தேசிய அரசாங்கம் அமையப் போகிறது." என்பதே அந்தப் பேச்சாகும்.

"தேசிய அரசாங்கமா? எனக்குத் தெரியாதே" என்று பிரதமர் ரணில் கூறியதோடு அந்தப் பேச்சு ஓய்ந்து போனது.

இதே நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிலும் சரி, அரசாங்கத்திலும் சரி பெரும்பாலானோருக்கு அடுத்து என்ன நடக்கப்போகிறது, என்ன நடக்கும் என்ற விபரங்கள் புதிராகவே இருப்பதுதான் சுவாரசியம்.

அவர்களே பத்திரிகையாளரிடம் கேட்டுத்தான் விசயங்களை அறிந்து கொள்ளும் நிலையில் இருக்கின்றனர். அந்தளவுக்கு அரசியல் நிலவரங்கள் அடிக்கடி மாறுகின்றன.

நாளை எதுவும் நடக்கலாம். எதிரி நண்பனாகலாம். நண்பன் எதிரியாகலாம் என்ற நிலையிலிருக்கும் போது சூடான அரசியல் மோதல்களும் இல்லாமல் போய் விட்டன.

யார் கண்டது. நாளை திரு. காமினி திசாநாயக்க பாதுகாப்பு அமைச்சரானால் இன்று திட்டித்தீர்த்தமைக்கான விளைவை ஏற்கவேண்டிவரலாம். அப்படி நடக்கி றதோ இல்லையோ நடந்தால் ஆச்சரிய மில்லை என்றளவில்தான் நிலமை இருக்கிறது.

தமது கட்சியில் ஏற்பட்ட உடைவை சீர்படுத்துவதன் மூலமாக எதிரணிகளுக்கு அடிகொடுத்து, தமது அரசியல் பலத்தை நிலை நிறுத்துவதே ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் எண்ணமாகும்.

அவர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே எதிரணிக் கோட்டைக்குள் உறவு முறிவு ஏற்பட்டு விட்டது.

எதிரணிக் கட்சிகளுக்கு தலைமை தாங்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தொடர்ந்து நிலவிய பிணக்குகள் இப்போது பிளவாக முடிந்திருக்கின்றன.

தனது சண்டைக்கார மகனுடன் திருமதி சிறிமாவோ ஒரேயடியாக உறவைத் துண்டித்துக் கொண்டார்.

ஆரம்பத்தில் இருந்தே திருமதி சிறிமாவோவுக்கு தனது மைந்தனின் அரசியல் சாணக்கியத்தில் நம்பிக்கை கிடையாது.

தனக்குப் பின்னர் கட்சியின் தலைமைத் துவத்தை விட்டுச் செல்ல நம்பிக்கைக்குரிய ஒருவரைத் தேடிய அம்மையார் இறுதியாக தனது புத்திசாலி மகளையே அதற்குத் தெரிவு செய்தார்.

சிறீலங்கா மக்கள் கட்சியில் இருந்து படிப்படியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகளை உள்வாங்கிக் கொண்டார்.

வெளிப்பார்வையில் குடும்பச் சண்டை யாகத் தெரிந்தாலும் திருமதி சிறிமாவோ திரு.அநுரா ஆகியோரை தவிர கட்சித் தலைமைக்கு வரக்கூடிய- போட்டியாளர்கள் வேறு யாரும் இல்லை.

திருமதி சந்திரிகாவின் வரவோடு புதிய போட்டியாளரை, அதுவும் ஜனரஞ்சகத் தன்மையுள்ள- இளைய போட்டியாளரை திரு. அநுரா எதிர் கொண்டார். பூசல்கள் ஏற் பட்ட போதும் சரியான நேரத்திற்காக திருமதி. சிறிமாவோ காத்திருந்தார் என்று இப்போது தெரிகிறது.

கட்சிக்குள் எம். பிக்கள் சிலரது ஆதரவு அநுராவுக்கு இருக்கும்போது கூட வெகுஜன ஆதரவைப் பெறும் தளம் ஒன்றை திருமதி சந்திரிக்கா பெற்றுக் கொண்டுள்ளார்.

மாகாணசபை அதிகாரம்தான் அந்தத் தளம். தன்னை அரசியலில் நன்கு இனம் காட்ட திருமதி சந்திரிக்காவுக்கு அந்தத் தளம் உதவும்.

திருமதி சந்திரிக்காவுக்கு அத்தகைய தளம் கிடைத்தவுடன் திருமதி சிறிமாவோ கட்சிக்குள் உள்ள சண்டைக்காரர்களோடு கணக்குத்தீர்க்கத் தொடங்கினார்.

முதலில் திரு. அநுராவின் நெருங்கிய ஆதரவாளர்கள் தூக்கி வெளியே போடப் பட்டனர்.

அது அநுராவுக்கு விடுக்கப்பட்ட மறைமுக எச்சரிக்கைதான்.

"உன்னை வெளியே தள்ளவும் நேரம் ஆகாது" என்ற சமிக்கைதான்.

ஆனால் அநுராவும் சண்டை போடு வதில் ஒன்றும் சளைத்தவரல்ல.

தலைமையை விமர்சித்தார். நேரடியா கவே சந்திரிக்காமீது சாட்டையை வீசினார்.

இனியும் அநுராவை கட்சிக்குள் வைத்தி ருந்தால் மகளின் அரசியல் முன்னேற்றம் பாதிக்கப்படும்.

உள்ளிருந்தே வரும் எதிர்ப்பை சமாளிப்பதில் கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டால் அவரால் வெளியரங்கில் பிரகாசிக்க முடியாமல் போகும்.

எனவே தனது மகனோடு அரசியல் கணக்கை முடிக்கும் தீர்மானத்தை சிறிமாவோ அம்மையார் எடுக்க வேண்டிய தாயிற்று.

எப்படியோ தனக்குப் பின் கட்சி பிளவுபடுவது உறுதி என்ற நிலையில் தான் இருக்கும் போதே பிளவை எதிர் கொண்டு விளைவைச் சந்தித்து உள் மோதல் இல்லாத கட்சியை மகளிடம் ஒப்படைக்க அவர் கருதியுள்ளார் என்றே தோன்றுகிறது.

எப்படியோ அரசாங்கத்திற்கு லாபம். எதிரணியின் பலம் ஏதோ ஒரு வகையில் பலவீனப்பட்டுள்ளது,

அநுரா வெளியேற்றப்பட்டதையும் அவர் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்கப் போகிறார் என்ற ஊகத்தையும் லேக்ஹவுஸ் பத்திரிகைகளான ஒப்சேவரும், சிலுமினவும், தினகரனும் தடித்த எழுத்தில் தலைப்புச் செய்தியாக்கின.

திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்கு சில எம்.பிகளும் ஆதரவளிப்பதால் அரசாங்கம் நம்பிக்கையோடிருக்கலாம். அவர்கள் அரசுக்கு எதிராக வாக்களிக்க மாட்டார்கள்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் குத்தான் நஸ்டம். முன்பு போல் நிபந்த னைகளை பட்டியல் போட்டு அரசோடு பேச முடியாது.

திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்கு எந்தளவுக்கு வெகுஜன செல்வாக்கு இருக்கிறது என்பது கேள்விக்குரிய - ஒன்றுதான்.

ஆனாலும் எதிரணிகளின் வாக்குகளை பிரிக்க அவரால் முடியும்.

இடதுசாரிகளோடு சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச் சேர்ந்ததை அவர் பகிரங்க மாகவே விமர்சித்தவர் என்பதால் எதிரணி களோடு அவர் சேரப் போவதில்லை. ஆகவே அரசாங்கத்திற்கு அவரது பிரிவு சாதகமான ஒன்றுதான்.

அநுராவின் வெளியேற்றமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களும் ஐ.தே.கட்சிக்கும் ஜ.ஐ.தேசிய முன்னணிக்கும் இடையிலான இணைப்பு- கலப்புப் பற்றிய பரபரப்பான எதிர்பார்ப்புக்களை தணித் திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

■

தலைநகர நிலவரத்தில் தமிழர் களை பாதிக்கும் முக்கிய பிரச்சனை கைதுகள்.

புலிகள் யார்? பொதுமக்கள் யார் என்று இனம் காண்பதில் பொலிஸ் துறையும் உளவு நிறுவனங்களும் குழம்பிப் போய் இருக்கின்றன.

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படும் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் விடுதலை செய்யப்படுவதற்கு உளவு அமைப்புக்களது அறிக்கைகள் எதிர்பார்க் கப்படுவதாக பொலிசார் கூறுகின்றனர்.

வடக்கு-கிழக்கில் புலிகளோடு இணை பவர்கள் புதியவர்கள். ஏற்கனவே பகிரங்கமாக அறியப்படாதவர்கள்.

அப்படியிருக்கும்போது உளவு அமைப் புக்களிடம் உள்ள விபரங்களை மட்டும் நம்பி, எவ்வளவு காலத்திற்கு தடுத்து வைக்க முடியும்.

தம்மிடம் உள்ள விபரங்கள் கூட சரியான வையா என்று சரிபார்ப்பதற்கான வழி முறையை வடக்கு-கிழக்கில் அரச உளவு நிறுவனங்களால் கைக்கொள்ள முடியுமா?

அப்படியானால் என்ன வழி?

புலிகளும் தென்னிலங்கையில்- தமிழர் கள் பாதிக்கப்பட வேண்டும். பட்டால்தான் புத்திவரும் என்கின்ற மனோபாவத்தோடு தான் நடந்து கொள்கிறார்கள்.

இதே சமயத்தில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களோடும் யுவதிகளோடும் கடுமையான அணுகுமுறைகள்- அவம திக்கும் போக்குகளை யார் மேற்கொண்டாலும் சரி பாதிக்கப்பட்டவர்கள் வெளியே செல்லும் போது புலிகள் செய்வது சரிதான் என்று சொல்லுகிற நிலையே ஏற்படுகிறது.

புலிகளால் பாதிக்கப்பட்டு வெறுப்புற்று வந்த சிலர்கூட அப்படிப் பேசிக் கொள்வதைக் காதாரக் கேட்க முடிகிறது.

தாம் பாதிக்கப்படும் போது எதுவும் செய்ய முடியாதவர்கள் ஒன்றில் கடவுளின் மேல் பாரத்தைப் போடுகிறார்கள். அல்லது பாதிப்புக்கு காரணமானவர்கள் மீது தாக்குவோரை பாராட்டிக் கொள்கிறார்கள். அநாதர வான நிலையில் மனித இயல்பு அதுதான்.

எனவே- தமது கடமை யைச் செய்யும் போது- தமிழர்கள் என்பதற்காகவே எல்லோரும் சந்தேகத்திற்குரியவர்கள் என்ற சந்தேகப் பார்வைகள், கடினமான போக்குகள் என்பவற்றைத் தடுக்க வேண்டியது முக்கியமான அதிகாரிகளின் முழு முதற் கடமையாகும்.

அரசும்- புலிகளும் யுத்தம் புரிகிறார்கள். புலிகள் கொழும்புக்குள் புகுந்து பலம் காட்ட முற்படுகிறார்கள்.

பிடியாதே நிறுத்து. விழிப்பாக இருக்க வேண்டாம் என்று எவரும் சொல்லவில்லை.

கொழும்பில் குண்டு வையாதே என்று புலிகளை தடுக்க முடியாத போது, எவரையும் பிடியாதே என்று அரசாங்கத்திடம் சொல்ல முடியாது.

ஆனால் அநாவசியத் தடுத்து வைத்தல்கள், அலட்சியங்கள், அவமதித்தல்கள், தமிழ் பேசினால் புலி என்ற கருதுகோள்கள் சட்டம் ஒழுங்கு அமைப்புக்கள் மத்தியில் இருந்து எழக்கூடாது என்பதே முக்கியமானது. ■

-நாரதர்-

## அதிரடி அய்யாத்துரை



வெளிநாட்டிலை போயும் எங்கட ஆக்கள் நாவடக்கத்தை கடைப்பிடிக்கிற விசயத்தில வீக்கா இருக்கினமாம். இலங்கைத் தமிழரைக் கூப்பிட்டு கனடாப் பொலிஸ் ஒரு மாநாடு நடத்தினவையாம். அதிகமாகும் குற்றச் செயலை தடுக்கிறது எப்படி? அதுதான் சப்ஜெக்ட். ஆனாப் பாருங்கோ எங்கட ஆக்கள் அங்க போய் யார் பெரிய வித்தகர் எண்டு மல்லுக்கட்டி ஒராள் ஒருமாதிரிப் பேசிக்கிழிக்க, கனடாப் பொலிசுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சுதாம்.

திருவிழாக்காலம் ஆரம்பமாகீட்டுது. ஆடிவேல் என்ன, கொடியேற்றங்கள் என்ன ஒரே பக்திமயம்தான். இந்தமுறை கைதுகள் கொஞ்சம் பலமா இருக்கிறதால கொழும்பில பயமயமும் மனசில ஒரு ஓரத்தில இருக்கத்தான் செய்யும். முருகன் தமிழ்க் கடவுள். கையிலே வேலும் உண்டு. சூரனையும் ஒரு பிடி பிடிச்சவர். எண்டாலும் பகைவனுக்கும் அருள் வாய் நெஞ்சே எண்டு சூரனையும் மன்னிச்சவர். ஆனா எங்கட ஆக்கள் தங்களுக்குள் உள்ள உறவுகளையும் பகையா மாத்துகினம். எங்கட இயக்கங்களுக்கு இடையே நடக்கிறது சூரன்போர் இல்லைப் பாருங்கோ. குருசேத்திரப் போர். ஆனால் இங்க எந்த அர்ச்சுனனும் சகோதரனைக் கொல்ல ஒரு நிமிசம் கூட யோசித்தது கிடையாது. அதுதான் எங்கட கஸ்ட காலம்.

யாழ்ப்பாணத்தில இரண்டெழுத்துக்காரர் நீதிமன்றம் துவங்கப் போயினமாம். சட்டப் புத்தகமும் எழுதப்படுதாம். சட்டத்தரணியள் இனி 'அ'வில இருந்து துவங்க வேணும்.

தாய்க்குலம் தான் ஈன்ற மகனை வெளியே தூக்கிப்போட்ட விசயத்தில அவசரப்பட்டுப் போனார். மகனாருக்கு பின்னால கணிசமான பிரதிநிதிகள் இருக்கிறதாய்க் கேள்வி. எப்படியிருந்தாலும் இனி சந்திரமானவருக்கு வசதியான மைதானம். திறமையைக் காட்டி ஆளுமை செய்ய தடையே இல்லைப் பாருங்கோ. அதுதான் சொல்லுறன்.

வைரமுத்து இருக்கிறாரே வைரமுத்து. தமிழ்நாட்டுக் கவிஞர். இன்றைய தமிழ்க் கவிஞர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர். இதுவரை நான் என்று ஒரு புத்தகம். கிட்டத்தட்ட சுயசரிதம். ஒரு இடத்தில சிலேடையால மனுசன் தூள்கிளப்பியிருக்கிறார் பாருங்கோ.

"மாடமதி போலும் மலையாளப் பெண்களுக்கு
மூடப்பழக்கம் இல்லை. முத்தான தம்மழகை
மூட, பழக்கம் இல்லை. முதியவரே! எனக்கும் தான்
பாடப்பழக்கமில்லை; பாடிவிட்டேன் போய்வரவா?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அழகு வேலனுக்கு ஆடித் திருவிழா

ஆடி மாதம் முழுவதும் சைவப் பெருமக்களுக்கு ஆனந்தத்தை அள்ளி வழங்கும் காலமாகும். ஆடி மாதம் முதலாம் திகதி ஆடிப்பிறப்பெனக் கொண்டாடப் படுகிறது. அன்று அனைவரது இல்லங்களிலும் கூழ் காய்ச்சிக் குடிப்பார்கள்.

ஆடி அமாவாசையன்று தமது முன்னோரை நினைத்து தான தருமங்களைச் செய்து ஆலய தீர்த்தோற்சவங்களிலும் பக்தி சிரத்தையுடன் கலந்து கொள்வார்கள்.

ஆடிப்பூரம் அம்மனுக்கு விழா எடுப்பார்கள். அடுத்து முக்கியத்துவம் பெறுவது ஆடிப் பௌர்ணமி தினமாகும். அன்றைய தினம் இலங்கையிலுள்ள சைவப் பெருமக்கள் மட்டுமல்ல, சகல இன, மொழி பேதங்களைக் கடந்து அனைத்து மக்களும் முருகப் பெருமானுக்கு எடுக்கும் விழாக்களில் பங்கேற்றுக் கொள்கிறார்கள்.

தென் இலங்கையிலுள்ள கதிர்காமக் கந்தப் பெருமான் அன்று மாணிக்க கங்கையில் தீர்த்தமாடுவார். பல்லாயிரக் கணக்கான மக்கள் 'அரோகரா' கோஷமிட்டு நீராடுவார்கள்.

முருகன் தமிழர்களின் முழு முதற் கடவுள். தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் குடியிருந்து அருள்பாலிக்கும் அழகன். கதிர்காமத்திலுள்ள கந்தனுக்கு சிங்களவர்களே பூசை செய்கின்றனர். இலட்சக் கணக்கில் சென்று அவர்கள் அந்த வேல் முருகனுக்கு எடுக்கும் விழாவில் கலந்து கொள்ளுகின்றனர். நேர்த்தி வைத்துக் காவடி எடுத்து வழிபாடு செய்கின்றனர்.

கதிர்காம சேத்திரம் சைவர்களுக்கும் பௌத்த சிங்களவர்களுக்கும் எவ்வளவு முக்கியமோ அதே அளவு முஸ்லிம் மக்களுக்கும் முக்கியமானது. மாணிக்க கங்கையைக் கடந்து முருகன் ஆலயத் துக்குச் செல்வதற்கு முன்னர் இஸ்லாமிய பள்ளிவாசலைத் தரிசித்து விட்டுத்தான் எவரும் செல்ல வேண்டும். கந்தன் கொடியேற்றத்துடன் தொடங்கும் விழா தீர்த்த தினத்தின் பின்னரே முடிவடைகிறது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து முஸ்லிம் மக்கள் இங்கு சென்று வழிபாடியற்றுவார்கள். நாட்டிலுள்ள மூன்று இன மக்களையும் ஒன்றிணைக்கும் தலமாக கதிர்காமம் விளங்குகிறது. கந்தன் திருவிழா பௌத்த சிங்களவர்களால் பெரஹரா எனப்படுகிறது. சைவத்தமிழர்கள் திருவிழா என்றழைக்கின்றனர். அத்தலத்தில் நிலவும் ஒருமைப்பாடு பண்டு தொட்டு இருந்து வந்த பேதமற்ற பெருநிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## ஆடிவேல் விழா

தலை நகராம் கொழும்பில் ஆடி மாதம் நடைபெறும் ஆனந்தத் திருவிழா ஆடிவேல் விழாவாகும். இலங்கையில் வாழும் சகல



இன மக்களும் ஒன்று பட்டுக் கூடும் தேசியத் திருவிழா.

கொழும்பு மாநகரில் வர்த்தகத் துறையில் மேன்மை கண்ட பல சமூகங்கள் முருகப் பெருமானுக்கு எடுக்கும் வேல் விழா ஓர் இணையற்ற விழாவாக இன்று பரிணமித்துள்ளது.

'செட்டியார்' என்று செல்லமாக அழைக்கப்படுபவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தவர். தென் கிழக்காசிய நாடுகளில் வர்த்தகத்துறையில் தன்னிக ரில்லாச் சிறப்புப் பெற்றவர்கள். "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற மூதுரைக்கு இலக்கணம் வகுத்தவர்கள். இவர்கள் சென்ற இடங்களில் திரவியத்தை மட்டும் தேடவில்லை. அந்தந்த நாடுகளில் அழியாப் பெருமையையும் நிலைநாட்டியவர்கள். சைவமும் தமிழும் வளர அரும்பாடுபட்டவர்கள். கல்வியும் கலைகளும் வளர அள்ளி அள்ளிக் கொடுத்தவர்கள். இந்த நகரத்தார் சமுகத்தவர்களின் ஏற்பாட்டில் எழுந்ததுதான் கொழும்பில் ஆடி தோறும் இடம்பெறும் ஆடிவேல் விழா.

சம்மாங்கோட்டார் எனப்படும் வாணிப சமூகத்தவரும் கொழும்பில் பல பிரபல வர்த்தக நிறுவனங்களை தொன்று தொட்டு நடத்திவருகின்றனர். ஆடிவேல் விழாவில் இவர்களுடைய பங்களிப்பும் மகத்தானது.

வேல்விழாவின் முதல் நாளன்று புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள முருகன் ஆலயத்திலிருந்து காவடி இரதம் புறப்பட்டு வெள்ளவத்தையிலுள்ள சம்மாங்கோட்டு பிள்ளையார் கோவிலைச் சென்றடையும், நாலாவது நாள் பிற்பகலில் புறப்பட்டு அடுத்த நாள் அதிகாலையில் முதலாம் குறுக்கிலுள்ள ஆலயத்தை காவடி ரதம் வந்தடையும்.

காவடி இரதம் புறப்படும் தினத்துக்கு அடுத்த நாளன்று காலையில் செட்டியார் தெரு கதிரேசன் கோவிலிலிருந்து வேல் இரதம் புறப்படும். அன்று மாலையில் பம்பலப்பிட்டி கதிர்வேலாயுதசாமி ஆலயத்தைச் சென்றடையும். மூன்று நாட்கள் அங்கே பக்தர்களுக்குத் தரிசனமளித்துவிட்டு நான்காம் நாள் பிற்பகல் புறப்பட்டு அடுத்தநாள் காலையில் வேல் ரதம் செட்டியார் தெருவிலுள்ள கோவிலை வந்தடையும்.

காவடியும் வேலும் வெள்ளவத்தையிலும் பம்பலப்பிட்டியிலும் தங்கியிருக்கும் மூன்று நாட்களிலும் இரு ஆலயங்களிலும் இலட்சோப இலட்சம் பக்தர்கள் கூடுவார்கள். அங்கு செல்வோர் எம்மதத்தைச் சேர்ந்தவராயினும் நெற்றியில் திருநீறும் சந்தணப் பொட்டும் வைத்துக் கொள்வார்கள். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். இவ்விருவிழாக்களையும் நடத்துபவர்கள் பெரும்பாலும் இந்திய வம்சாவளியினர்கள் என்பதனால் தமிழ் நாட்டிலிருந்து சிறந்த நாதஸ்வர வித்வான்களைத் தருவித்து இங்குள்ள இசைதாகம் கொண்டோருக்கு நல்விருந் தளிப்பார்கள்.

## வேல் விழா வரலாறு

கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பதற்காக தமிழ் நாட்டிலிருந்து அனேக பக்தர்கள் முன்பெல்லாம் வருவார்கள். கொழும்பிலும் தென் இலங்கையின் பல பாகங்களிலும் வர்த்தகர்களாகவிருந்த இந்திய வம்சாவளியினரின் உறவினரும் வருவதுண்டு. இவர்கள் கதிர்காமம் சென்று தீர்த்தமாடி விட்டு கொழும்பு திரும்புவார்கள். அவர்களுக்கும் கொழும்பு வேல் விழாவில் கலந்து கொள்வது ஒரு புதுக்களிப்பை ஊட்டும்.

பல வருடங்களுக்கு முன்னர் நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த சில பக்தர்கள் கதிர்காம உற்சவங்களில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து கால் நடையாக செல்வதுண்டு. அவர்கள் தங்களுடன் வேல் ஒன்றையும் கொண்டு செல்வார்கள். ஒரு தடவை அவ்வாறு வேலை எடுத்துக்கொண்டு பக்தி சிரத்தையுடன் சென்ற முதியவர் ஒருவர் பம்பலப்பிட்டி தாண்டிச் செல்லும் போது அவருக்கு ஓர் அசரீரி கேட்டுள்ளது. "வேலை அங்கேயே வைத்துப் பூசை செய்" என்ற ஒலி கேட்டு வேலினை அதே இடத்தில் நிலத்தில் பதித்து தினசரி பூசை செய்து வழிபட ஆரம்பித்துள்ளார். இந்த வேல் பதிக்கப்பட்ட இடமே இன்று பழைய கதிரேசன் கோவில் என்று போற்றப்படுகிறது.

ஆடிவேல் உற்சவம் பழைய-புதிய கதிரேசன் கோவில்கள் இரண்டிலும் வருடாவருடம் மாறி மாறி நடக்குமம். 1983ஆம் ஆண்டு ஆடி மாதம் வேல் விழா சிறப்பாக நடைபெற்ற காலத்தில் தான் துர்ப்பாக்கியமான பல சம்பவங்கள் தலையெடுத்தன. அதே ஆண்டு நிறுத்தப்பட்ட விழா கடந்த வருடம் மீண்டும் துவங்கியது. செட்டியார் தெருவிலுள்ள புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவிலிருந்து புறப்பட்ட வெள்ளி வேல்ரதம் வெள்ளவத்தை புதிய கதிர்வேலாயுதசாமி கோவிலைச் சென்றடைந்து மூன்று நாட்களின் பின்னர் செட்டித்தெரு திரும்பியது. வேல் விழா நடைபெறாத இடைக்காலத்தில் இவ்வாலயத்தின் தர்மகர்த்தா திரு. பழனியப்பன் செட்டியார் ஆலயத்தைப் புதுப் பொலிவு பெறச் செய்துவிட்டார்.

## தங்கரதம்

இந்த வருடம் ஜூலை 31ல் வேல் விழா ஆரம்பமாகின்றது. அன்று காலை காவடி இரதம் புறப்படுகிறது. செட்டியார் தெரு பழைய கதிர்வேலாயுதசுவாமி கோவிலிலிருந்து ஆகஸ்ட் முதலாம் திகதி காலை புறப்படும் தங்கரதம் அன்று மாலை பம்பலப்பிட்டி பழைய கதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தைச் சென்றடைகிறது. மூன்று நாட்கள் அங்கேயே தங்கிவிட்டு 4ம் திகதி பிற்பகல் புறப்பட்டு அடுத்த நாளன்று காலையில் செட்டியார் தெருக் கோவிலைச் சென்றடையும். இவ்வாலயத் தர்மகர்த்தா திரு. நாச்சியப்பன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

வேல் விழா என்றால், ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று கொழும்பையும் அந்நகரைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் சேர்ந்த மக்களுக்குப் பெருங் கொண்டாட்டம் தான். சுற்று வட்டாரத்திலிருந்தெல்லாம் மாட்டுவண்டிகளில் - குறிப்பாக இரட்டை மாடுகள் பூட்டிய கூடாரக் கரத்தைகளில் குடும்பம் குடும்பமாக மக்கள் வந்து காலி முகத்திடலில் விடுதிவிட்டிருப்பார்கள். அங்கேயே உணவு சமைத்து உண்டு; வேல் இரதம் அங்கு வந்து சேரும் வரை காத்திருப்பார்கள். இரவு 10.00 மணிக்கு மேல் இரதம் வந்து சேர்ந்ததும் அந்நாட்களில் வானவேடிக்கைகள் இடம் பெறுவதுண்டு. இவற்றையெல்லாம் கண்டு களித்துவிட்டு முருகனுக்கு அர்ச்சனை செய்து பிரசாதம் பெற்று அடுத்தநாள் காலையில் தத்தமது இடங்களுக்குச் செல்வார்கள்.

பல ஆண்டுகால இடைவெளிக்குப்பின் கடந்த-1992ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி திரு ஆர்பிரேமதாசாவின் தூண்டுதலினால் வேல் விழா மீண்டும் துவங்கியது. ஆனால் இரவு நேர விழாவுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இவ்வருடம் இரவுவேளையிலும் விழா நடைபெற அரசாங்கம் அனுமதி அளித்திருப்பது மகிழ்ச்சியே.

## ஜெயந்தி நகர்

வேல்விழா செட்டித்தெரு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தையுடன் முடிவதில்லை, ஜிந்துப்பிட்டி-ஜெயந்திநகர் சிவசுப்பிரமணியர் சுவாமி ஆலயத்திலும் வெகு சிறப்பாக திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. இதே போன்று நாட்டின் பல பாகங்களிலுமுள்ள முருகன் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசாமி கோவிலிலும் இக்காலத்தில் கொடியேறி திருவிழாக்கள் நடைபெறும். அடுத்து வரும் அமாவாசையில்தான் அங்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அழகு வடிவேலன் இனமத, மொழி வேறுபாடுகளைக் கடந்து எல்லோருக்கும் அருள் பாலிப்பவனாகிவிட்டமையினால் அவனுக்கு நடைபெறும் ஆடிவிழாவினை ஒரு தேசியத் திருவிழாவெனக் கொள்வது பொருத்தமாகிறது.

---

## உலக ரவுண்டப்

# அமெரிக்காவின் குணங்கள்

## அராஜகமும்- மேலாதிக்கமும்!

### சதாம் உசேன் பாய்ச்சல்

ஈராக் அதிபர் சதாம் உசேன் அமெரிக்கா மீது கடுமையான கண்டனம் தொடுத்திருக்கிறார்.

ஈராக் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக நாட்டு மக்களுக்கான உரையொன்றினை ஆற்றிய போதே தனது கடும் கண்டனத்தை முன்வைத்தார்.




"அராஜகமும், மேலாதிக்கமும் அமெரிக்காவின் ஒட்டிப் பிறந்த குணங்களாக உள்ளன. ஈராக்கை அடக்கி ஒடுக்கி விடலாம் என்று அமெரிக்கா நினைக்கிறது. எதேச்சாதிகாரமும் மேலாதிக்கமும் அதிக நாள் நீடிக்காது" என்று சதாம் தனது உரையின் போது தெரிவித்தார்.

ஈராக்மீது அமெரிக்கா எடுக்கும் முடிவுகளோடு ஐரோப்பாவும் ஜப்பானும் ஒத்துப் போகக் கூடாது. ஏனெனில் அவை பூகோள ரீதியாக அரபு உலகத்தை நெருங்கியவை என்றும் சதாம் உசேன் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பில் கிளின்ரன் பதவி ஏற்ற பின்னர் அமெரிக்காமீது சதாம் உசேன் தொடுத்த கடுமையான முதற் தாக்குதல் இதுவாகும்.

### மக்கள் தொகைப் பெருக்கம்! அமெரிக்காவிலும் கலக்கம்!!

சொந்தப் பொருளாதாரத்தை பலப்படுத்தும் உற்பத்திகளில் முன்னேற்றம் காணாத நாடுகளும் ஒரு விசயத்தில் மட்டும் முன்னேற்றம் கண்டுள்ளன.

அது மக்கள் தொகை உற்பத்திப் பெருக்கம்.

குடும்பக் கட்டுப்பாட்டு பிரச்சாரங்கள், நாம் இருவர் நமக்கிருவர் வாசகங்கள் எதுவும் பெரிய பலன்களை விளைவித்து விடவில்லை.

மக்கள் தொகைப் பெருக்கம் வளர்ந்து வரும் நாடுகளை பயமுறுத்திக் கொண்டிருக்கும் போதே வல்லரசு நாடான அமெரிக்காவையும் அச்சுறுத்தத் தொடங்கி விட்டது.

அங்கும் வேலை இல்லாத் திண்டாட்டமும் வறுமையும் தலைவிரித்தாடும் நிலமை ஏற்பட்டு வருகிறது.

இதே நேரத்தில் அமெரிக்காவில் உள்ள உலக உணவு கண்காணிப்பு மையத்தின் அறிக்கையின்படி கடந்த ஆண்டு உலக மக்கள் தொகை 9 கோடியே 10 இலட்சம் என்ற கணக்கில் அதிகரித்துள்ளது.

மக்கள் தொகை இதே வேகத்தில் போனால் உலகில் தனிமனிதன் பெறும் உணவு விகிதம் குறைவடையும் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

தனிமனிதனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அழித்திடலாம். ஜெகத்திற்கே உணவு இல்லையென்றால் என்ன செய்யலாம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தை குறைக்கலாம் என்கிறது உலக உணவு கண்காணிப்பு அமைப்பு. சாத்தியம்தானா?

### ஒப்பந்த ரத்தின் எதிரொலி! உறவு முறியும் அறிகுறி!!

இந்தியாவும்- ரஷியாவும் உற்ற நண்பர்களாக இருந்தகாலம் பழையகதை.

கொர்ப்பச்சேவ் காலத்தோடு சோவியத்தில் கம்யுனிசம் முடிவடைந்தது. சோவியத்தும் வெட்டப்பட்ட கேக் துண்டுகளாக பிளவு பட்டுப்போனது.

இப்போது ரஷியாவுக்கு அமெரிக்கா சொல்வதை தட்டமுடியாத சூழ்நிலை.

இந்தியாவுக்கு ரசியா தொடர்ந்து உதவும் என்று ரசிய அதிபர் யெல்ட்சின் சமீபத்தில் கூறியிருந்தார்.

கூறியதோடு சரி. செயல்படுத்த வேண்டுமானால் அமெரிக்கா தலையாட்ட வேண்டும். அமெரிக்கா தலையாட்டவில்லை.

இந்தியாவுக்கு ராக்கெட் இஞ்சின் அளிப்பது தொடர்பான ஒப்பந்தத்தை ரசியா இப்போது ரத்துச் செய்துவிட்டது.

விண்வெளி ஆய்விலும், ஏவுகணை தயாரிப்பிலும் இந்தியா முன்னேறுவதை அமெரிக்கா விரும்பவில்லை.

இந்தியா மட்டுமல்ல வேறெந்த நாடும் அவற்றிலே முன்னேறுவதை அமெரிக்கா விரும்பாது.

அணு ஆயுதப் பரவல் என்ற பெயரில் ராக்கெட் ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு அமெரிக்கா கூறியதைக் கேட்டு ரசியாவும் செய்துவிட்டது.

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தால் ரசியா ஒப்பந்தத்தை ரத்துச் செய்தது தவறு என்று இந்தியாவில் உள்ள இடதுசாரிக் கட்சிகளும் கண்டித்துள்ளன.

ஒப்பந்தம் ரத்தானதால் பெரிய பாதிப்பு எதுவும் இல்லையென்று இந்தியா கூறியுள்ளது. என்றாலும் பாதிப்பு இருக்கத்தான் செய்யும்.

தனது புதிய நண்பனுக்காக பழைய நீண்டநாள் நண்பனை ரசியா கைவிட்டமை வருத்தமான விசயம்தான்.

### பெண்ணாசை கொண்ட டொல்பின்! அமெரிக்காவில் பரபரப்பு!!

இளம் பெண் ஒருவரோடு காதல்லீலை புரிய முற்பட்ட ஆண் டொல்பின் பற்றிய வீடியோ பதிவு நாடா அமெரிக்க பொலிசில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டொல்பின் மூளைத்திறன் கூடிய நீர்வாழ் பிராணியாகும்.

அமெரிக்காவின் ஃபுளொரிடா என்னும் மாநிலத்தில் டொல்பின் நீச்சல் குளம் இருக்கிறது. இங்கு நீச்சலடிக்க வந்த பெண் ஒருவரோடு ஆண்டொல்பின் நெருங்கிச் சென்று காமலீலையில் ஈடுபட முயற்சிக்கிறது. அந்தப் பெண் அஞ்சவில்லை. சிரிக்கிறாள். சில நிமிடங்களில் அவள் நீச்சல் குளத்தைவிட்டு வெளியேறுகிறாள். ஆனால் டொல்பின் அவளை தடுத்து வளைக்கிறது. இப்படி வீடியோவில் காட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

டொல்பின் கிளப் உரிமையாளர் லாயிட் பொறோஸ் அந்த வீடியோ 5 வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்டது என்று. கூறியுள்ளார்.

போன்சி என்ற பெயர் கொண்ட 7 அடி நீளமான டொல்பின்தான் இளம் பெண்ணோடு தகாத முறையில் நடந்தது. 'விசயம் அறிந்து ஊழியர்களை கண்டித்தேன்.' நீச்சலுக்காக யாரும் வந்தால் டொல்பினை வெளியேற்றுமாறு கூறியிருக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

டொல்பின் சங்கத் தலைவரான ரஸ் டெக்கர் அந்த வீடியோ இரு வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்டதாக கூறுகிறார். பார்வையாளர் ஒருவரே அதை எடுத்ததாகவும் கூறியுள்ளார்.

பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

மீன் வளத்துறைக்கு புதிய தலையிடி. அந்தக் கிளப்பில் நீச்சலிட்ட வேறு சில பெண்களுக்கும் அந்த டொல்பினால் தாக்கம் ஏற்பட்டிருக்கும் என்று மீன் வளத்துறை கூறுகிறது.

ஆண்டொல்பின்கள் பெண்களிடம் மட்டுமே தவறாக நடந்து கொள்ள வாய்ப்புண்டா என்று விஞ்ஞானிகளும் ஆராய்ந்து வருகின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை மீண்டும் வெஸ்ட்மின்ஸ்டர் முறையை நாடிச் செல்கின்றதா?

**அலசுவது — இராஜதந்திரி**

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா தற்போது தாம் பங்குகொண்டு வரும் வைபவங்களி லெல்லாம் நகைச் சுவையான உரை நிகழ்த்துவதையே வழக்கமாகக் கொண்டு வருகின்றார்.

திரு. ஜயவர்த்தனா இலங்கை அரசியலில் பெற்றிருந்த முக்கியத்துவம், மிகவும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

முடி,கொடி, குடை, ஆல வட்டம், சிம்மாசனம் என்பவற்றுடன் பண்டைய மன்னர்களைப் போன்று 'ஆட்சி செலுத்தாவிடினும், அம்மன்னர்கள் கொண்டிருந்த அதிகாரங்களைப் போன்றே அனைத்தையும் தீர்மானிக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சியாளராக திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா இலங்கையை நிர்வகித்திருந்தார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவர்களில் திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனாவே கூடுதல் அதிகாரங்களைக் கொண்டிருந்தார். அத்துடன் கூடுதலான காலம்வரை ஆட்சியிலும் இருந்தார்.

1977ம் ஆண்டு பிரதமராகவும், பின்னர் 1978ம் ஆண்டிலிருந்து 1988ம் ஆண்டுவரை இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் திரு. ஜயவர்த்தனா பதவி வகித்திருந்தார்.

திரு. ஜயவர்த்தனா தமது ஆட்சியை நிறைவேற்று அதிகாரம் கொண்டதாக மாற்றியமைக்கும் பொருட்டு அறிமுகப் படுத்திய அரசியல் அமைப்பே, இன்று கேள்விக்குரியதொன்றாக மாறி யிருப்பதுடன், அரசியல் மற்றும் புத்திஜீவிகள் வட்டாரத்திலும் வாதப்பிரதிவாதங் களுக்குரியதாக விளங்கி நிற்கின்றது.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திர மடைந்ததிலிருந்து இன்று வரை இரு தடவைகள் இலங்கையின் அரசியல் அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப் பட்டுள்ளன.

1972ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் காலனித்துவ பாரம்பரியங்களுடன் இருந்த இலங்கையின் அரசியலமைப்பை மாற்றியமைத்திருந்தது.

1948ம் ஆண்டிலிருந்து 1972ம் ஆண்டுவரை சுதந்திர இலங்கையின் அரசியலமைப்பு பிரித்தானியாவின் பாராளுமன்ற ஆட்சி முறையான 'வெஸ்ட் மின்ஸ்டர்' (Westminister) ஆட்சியைப் பெரிதும் தழுவியதாகவே காணப் பட்டிருந்தது.

அப்போது தேசாதிபதிப் பதவி வெறுமனே சம்பிரதாயபூர்வமானதாகவே விளங்கியிருந்தது. பாராளுமன்றமே நாட்டின் பிரதான நிர்வாகபீடமாக இருந்ததுடன், பிரதம மந்திரியே பாராளுமன்ற அதிகாரங்களுக்கமைவாக நிர்வாகப் பொறுப்புக்களையும் கொண்டிருந்தார்.

1972ம் ஆண்டு இலங்கை ஒரு பூரணகுடியரசாக மாற்றமடைந்த நிலையில் தோன்றிய புதிய அரசியல் அமைப்பு, புதிய அம்சங்கள் சிலவற்றைக் கொண்டிருந்தது. ஆயினும் வெஸ்ட்மின்ஸ்டர் முறையிலிருந்தும் பூரணமாக விடுபடாத தாகவே அந்த அரசியல் அமைப்பு விளங்கியிருந்தது.

1977ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய தையடுத்தே இலங்கையின் அரசியல் அமைப்பில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருந்தது.

அம்மாற்றம் பாராளுமன்றத்தைவிட, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை நிர்வாக விடயங்களில் முக்கியப்படுத்தி விட்டிருந்ததோடு பாராளுமன்ற ஆட்சிமுறையுடன், ஜனாதிபதி ஆட்சி முறையையும் இலங்கையில் அறிமுகப்படுத்திவிட்டிருந்தது.

திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனாவே இப்புதிய அரசியலமைப்பின் சூத்திரதாரியாக விளங்கியிருந்தார். கூடவே பிரித்தானிய பாரம்பரியங்களுடன் பன்னெடுங்காலமாக இயங்கிவந்த பழமைச் சிறப்புமிக்க பாராளுமன்றக் கட்டிடத்தையும் அவர் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செயலகமாகவும் மாற்றியமைத்திருந்தார்.

பாரம்பரிய பாராளுமன்றக் கட்டிடம் ஜனாதிபதியின் செயலகமாக மாற்றம் பெற்றதையடுத்து, புதிய பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியொன்றையும் திரு. ஜயவர்த்தனா கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் கட்டி எழுப்பியிருந்தார்.

திரு. ஜயவர்த்தனாவின் இந்த நடவடிக்கைகள் இருவேறு நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்திவிட்டிருந்ததுடன், ஜனாதிபதி ஆட்சியையும் நாட்டில் வேரூன்றச் செய்திருந்தது.

திரு.ஜயவர்த்தனா அறிமுகப்படுத்தியிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த விடயங்களில் ஜனாதிபதிக்கு விரைவான முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரங்களை வழங்கியிருந்த அதேவேளை, சர்ச்சைக்குரிய அரசியல் விடயங்களில் இருந்து ஒதுங்கியிருப்பதற்கான வாய்ப்பினையும் வழங்குவதாக அமைந்திருந்தது.

> “அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் தத்துவார்த்த மற்றும் புத்திஜீவித்தனமான அணுகுமுறைகளைவிட, மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளே முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. ஓர் அரசியல் அமைப்பை உருவாக்குவதிலும் மக்களின் மனப்போக்கே முக்கியமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். ஓர் அரசியல் அமைப்பானது உடலில் அணியும் ஆடையைப் போன்றது. அழகாக மட்டும் இருந்தால் போதாது; அது நல்ல அளவானதாகவும் இருக்க வேண்டும்.”
>
> -இந்திய அரசியல் அமைப்பின் தந்தை-
> டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார்.

## புதிய அரசியலமைப்பு ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்குமானால் அது வரவேற்கப்படவேண்டியதே!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பாராளுமன்ற அங்குரார்ப்பணக் கூட்டத் தொடரை ஆரம்பிக்க மட்டுமே பாராளுமன்றம் வந்திருந்தாரே தவிர, அங்கு இடம்பெற்ற சர்ச்சைக்குரிய விவாதங்கள் மற்றும் வாக்கெடுப்புக்களிலிருந்தும் அவர் வெகுதூரம் ஒதுங்கியிருந்தார்.

பாராளுமன்றம் வெறுமனே வாதப் பிரதிவாதங்களுக்குரிய அரங்காக மட்டும் விளங்கியிருந்ததே தவிர, முக்கிய விடயங்கள் பலவும் ஜனாதிபதியினாலேயே தீர்மானிக் கப்பட்டிருந்தன.

எனவே 1978ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட அரசியல் அமைப்பே இன்றுவரை அமுலில் இருக்கின்றது. அத்துடன் நாட்டின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவிருந்த திரு.ஆர். பிரேமதாசா கொலையுண்டதையடுத்து, பிரதமராகவிருந்த திரு.டி.பி விஜேதுங்காவையும் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இந்த அரசியலமைப்பு மாற்றிவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்த்தனா அண்மையில் இலங்கை சோனகர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோது, தம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி ஆட்சிமுறையுடன் கூடிய அரசியலமைப்பு, இலங்கையில் தொடர்ந்து அமுல்படுத்தப் படக்கூடியதே என்று குறிப்பிட்டிருந்ததுடன், அவசரப்பட்டு அந்த ஆட்சிமுறையில் மாற்றங்களைக் கொண்டுவரக் கூடாது என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் இக்கருத்தரங்கில் உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தற்போதைய அரசியல் அமைப்பின் தன்மையை நன்கு ஆராய்ந்ததுடன், இலங்கையில் இருவேறு நிர்வாக இயந்திரங்களாக பாராளுமன்றமும், ஜனாதிபதி ஆட்சி முறையும் இருப்பது நிர்வாகச் சிக்கல்களையே ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் தனி ஒருவரிடம் அதிகாரங்கள் குவிந்திருக்கும் போது, ஒரு பரிபூரணமான ஜனநாயக ஆட்சி முறையினையும் நாட்டில் எதிர்பார்க்க முடியாது எனவும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் கருத்து சிந்தனைக்குரியதொன்றாக இருப்பதுடன், இலங்கையின் அரசியலமைப்பில் மாற்றம் ஒன்று கொண்டுவரப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்துவதாக இருக்கின்றது.

இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரமடைந்தவேளை சுதந்திர இலங்கையின் அரசியலமைப்பை பிரித்தானியாவின் 'வெஸ்ட் மினிஸ்டர்' ஆட்சிமுறையின் பாணியில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் அன்றைய துணை வேந்தரான சேர்.ஐவர் ஜென்னிங்ஸ் (Sir Ivor Jennings) என்பவரே தயாரித்திருந்தார்.

இன்றைய கொழும்பு பல்கலைக் கழகமே அன்று இலங்கைப் பல்கலைக் கழகமென்றிருந்தது. எனவே கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் சேர்.ஐவர் ஜென்னிங்ஸின் வாரிசுமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கூறியிருப்பவை அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படும் பட்சத்தில் அரசியலுக் கப்பால் உள்ள அறிஞர்களும் அம்மாற்றத்தை உருவாக்குவதில் அவர்களது பங்களிப்பை வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகவே காணப்படுகின்றது.

இந்திய அரசியல் அமைப்பின் தந்தை என வர்ணிக்கப்படும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் அரசியல் அமைப்பொன்றைத் தயாரிப்பது பற்றிக் கருத்து வெளியிட்ட போது இப்படிக் கூறியிருந்தார்: “அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் தத்துவார்த்த மற்றும் புத்திஜீவித்தனமான அணுகுமுறைகளை விட, மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளே முக்கியமானவைகளாகக் கருதப்பட வேண்டும். ஓர் அரசியல் அமைப்பை உருவாக்குவதிலும் மக்களின் மனஉணர்வுகளே முக்கியமானவையாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். ஓர் அரசியல் அமைப்பானது உடலில் அணியும் ஆடையைப் போன்றது. அழகாக மட்டும் இருந்தால் போதாது; அது நல்ல அளவானதாகவும் இருக்க வேண்டும்"

எனவே டாக்டர் அம்பேத்கார் கூறியதை நோக்கும்போது ஒரு நாட்டின் அரசியல் அமைப்பானது அந்த நாட்டு மக்கள் அனைவரினதும் நலனையும், உணர்வுகளையும் கருத்தில் கொண்டதாகவே அமைய வேண்டுமென்பதனை வலியுறுத்துவதாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையின் அரசியல் அமைப்பும் கூடுதலான ஜனநாயக நடைமுறைகளைக் கொண்டதாக அமைய வேண்டியது மிகவும் அவசியமானதாகின்றது.

இலங்கையில் அமுலில் இருந்த அரசியல் அமைப்புக்களை நோக்கும்போது, சுதந்திரமடைந்த 1948ம் ஆண்டு முதல் குடியரசாக மாற்ற மடைந்த 1972ம் ஆண்டுவரை நிலவிய 'வெஸ்ட்மின்ஸ்டர்' பாணியிலான அரசியலமைப்பு இலங்கை அரசியலில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தியிருந்தது.

பாராளுமன்ற நடைமுறைகள் சிறப்புற்றிருந்ததுடன், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் அரசியல் ரீதியாக நன்கு முக்கியத்துவம் பெற்றிருந்தனர்.

ஆனால் 1972ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட அரசியலமைப்பு வெஸ்ட்மின்ஸ்டர் அமைப்பிலிருந்தும் சற்று விலகியதாக சோஷலிஸச் சிந்தனைகளையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது.

தொடர்ந்து 1978ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட திரு.ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் அரசியலமைப்பானது பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு மறைமுகமான கால்கட்டைப் போடுவதாக விளங்கியதுடன் தன்னிச்சையான தனிநபர் ஆட்சியை வலுப்படுத்துவதாகவும் காணப்பட்டது.

இலங்கையின் அரசியல் அமைப்புகளுடன் சிறுபான்மை மக்களினது அரசியல் நிலைப்பாடு கொண்டிருந்த தொடர்புகளை ஒப்பிட்டுப்பார்க்கையில், 1978ம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனப்பிரதிநிதிகளின் குரல் பலமாகவே ஒலித்திருந்தது.


வடக்கு கிழக்குப் பிரதேச தமிழ்பேசும் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தனர்.

ஆயினும் அரசியலமைப்பின் மூலமாக இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைக் கட்டிக்காப்பதிலும், அரசியல் உறுதிப்பாட்டைப் பேணுவதிலும் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் அக்கறையற்றவர்களாகவே காணப்பட்டனர்.

1978ம் ஆண்டில் ஜே.ஆர். ஜயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பு நிலைமையை மேலும் மோசமடையச் செய்திருந்தது.

வடக்கு-கிழக்கு அரசியலாளர்களின் நிலை அஸ்த்தமனத்துக்குள்ளாகியிருந்ததுடன் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் பிரதிநிதிகளின் எதிர்காலமும் சூன்யமடைந்திருந்தது.

எனவே இலங்கையில் நடைமுறைக்கு வந்த எந்தவொரு அரசியலமைப்பும் இலங்கையின் முக்கிய பிரச்சனையாக இருந்து வரும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகள் குறித்த விடயத்தில் புறம்போக்கான நிலையையே கொண்டிருந்தன.




இந்நிலையில் இலங்கையில் தற்போது அரசியலமைப்பு ரீதியிலான மாற்றங்களைக் கொண்டு வருவது பற்றியே பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. பிரபல சட்டத்தரணியான திரு.கே.என். சொக்ஸி அரசியல் அமைப்பு அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படுவதாயின் இலங்கையின் தமிழர் பிரச்சனைக்கு முக்கியமளித்துத் தீர்வொன்றைக் காணுவதாகவும், தனிநபர் ஆட்சி முறையிலிருந்தும் விலகி பரந்துபட்ட ஜனநாயக நடைமுறைக்கு வழியமைப்பதாகவும் அந்த அரசியலமைப்பு அமைய வேண்டும்.

இதன்மூலமே ஒரு புதிய அரசியல் யுகத்துக்கு வழியமைப்பதுடன் இனங்களிடையேயான ஒற்றுமைக்கும், புரிந்துணர்வுக்கும், மேலும் அந்த இனங்களின் தனித்துவத்தைப் பேணுவதற்கான வழிமுறைகளுக்கும் வாய்ப்பளிக்க முடியுமெனக் கருதலாம்.

www.padippakam.com



# லேடீஸ் ஸ்பெசல்

# இனிதான வாழ்க்கையில் அழகாக இருக்க சில குறிப்புக்கள்!

### உதடுகள்



கவர்ச்சிகரமான உதடுகள் அமைய லிப்ஸ்டிக் பூச்சு மட்டுமே போதாது. உதடுகளின் சருமம் பிரத்தியேகமானது.

அதற்கு ஈரப்பசையும் தேவையான அளவு எண்ணெய் பசையும் அவசியம்.

ஒரு நாளைக்கு இரு முறை நெய் அல்லது வெண்ணெயைத் தேவையான அளவு இரண்டு உதடுகளிலும் பூசிக்கொண்டு அரைமணி நேரம் அப்படியே விட்டுவிடுங்கள். பிறகு வாய் கொப்பளிக்கலாம்.

நேரடியான சூரிய வெளிச்சம் உதடுகளுக்கு ஏற்றதில்லை. ஆகவே வெளியில் செல்லும் பெண்கள் நிச்சயம் வெண்ணெய் அல்லது நெய் கொஞ்சமாவது பூசிக்கொண்டே ஆக வேண்டும்.

### கன்னம்

டீன் ஏஜ் பெண்களுக்குக் கன்னத்தில் முகப்பரு ஒரு பெரிய பிரச்சனை. அதிகப்படியான எண்ணெய் சுரக்கும் சுரப்பிகள் தான் இதற்குக் காரணம். முகப்பருவும், கரும்புள்ளிகளும் இல்லாத கன்னம் அப்பிள் போல அழகாகவும் பளபளப்பாகவும் தோன்றும்



கடைகளில் கிடைக்கும் கிறீம்களைவிட நீடித்த பலனடைய, சூடான நீர் கொண்டு அல்லது பாலாவி கொண்டு வேடு பிடிக்க வேண்டும்.

நன்றாக வியர்த்தவுடன் பஞ்சு கொண்டு கன்னங்களைத் துடைத்துக் கொள்ள வேண்டும்.

வாசனைப்பொருட்கள், எண்ணெய்ப் பட்சணங்கள் ஆகியவற்றை உணவில் விலக்கி, நிறைய காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### மூக்கு



சுவாசக் கோளாறுகள், தடிமன் இல்லாமல் பார்த்துக் கொண்டால் மூக்கின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

மூக்கின் வடிவம், அழகு ஆகியவற்றை மாற்றி அமைக்க வேண்டுமானால், செயற்கையான பிளாஸ்டிக் அறுவைதான் ஒரே வழி.

மூக்குப் பாலத்திலும், மூக்கின் இருபுறமும் தேவைக்கேற்றபடி அழுத்தமான அல்லது வெளிர் நிற பவுண்டேஷனைத் தடவுவதன் மூலம் ஓரளவு அகன்ற மூக்கை குறுகலாகத் தோன்றவும், குறுகலான மூக்கை நீளமாகத்தோன்றவும் செய்யலாம்.

### கண்கள்

அழகான, ஆரோக்கியமான விழிகள் அமைய முறையான ஆகாரம் தேவை. தினமும் உணவில் பழங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக உலர்ந்த பழங்கள் கண்களுக்கு நல்லது. முறையான தூக்கமும், இரும்புச்சத்தும், விற்றமின் 'ஏ'யும் விழிகளின் இளமையைப் பாதுகாக்கும்.

வெள்ளரிக்காய்ச் சாற்றை குளிர்ந்த பாலுடன் கலந்து கண்களைச் சுற்றிலும் தடவிக் கொண்டு பத்து நிமிடம் கழித்து, குளிர் நீரில் கழுவுங்கள். கண்களைச் சுற்றியுள்ள கருவளையங்கள் மறைந்து போகும். இமைகளும் எழிலுடன் பளபளக்கும்.

### முகம்

முகத்தை மூன்று முறை தினந்தோறும் பால் கொண்டு கழுவுங்கள். வெறும் சோப், சருமத்தை உலர வைத்து அதன் ஜொலி ஜொலிப்பை மங்க வைத்து விடும். ஆனால் விற்றமின் 'ஈ' அடங்கிய சோப் ஒரு விதிவிலக்கு. அது பட்டுச் சருமத்தை மேலும் பளபளப்பாக்கும்.


இரவு படுக்கைக்குச் செல்லுமுன், இரண்டு தேக்கரண்டி உருளைக்கிழங்குச் சாற்றுடன், எலுமிச்சைச் சாறு ஒரு தேக்கரண்டியும், கோதுமைச் சோறு ஒரு தேக்கரண்டியும் கலந்து மென்மையாக முகமெங்கும் தடவுங்கள். கண்களைச் சுற்றிலும் உள்ள பகுதியை விட்டுவிடுங்கள். இருபது நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவி விடுங்கள் முகம் பட்டுப்போல் மின்னும்.

# சாறி பிளவுஸ்

**பின்பக்கம்**

13"த்தை நீளமாகவும் முன்பக்கத்திற்கு பாவிக்கப்பட்ட 9 1/2" த்தில் 1/4" கழுத்து வரும் அளவான 9 1/4" அகலமாகவும் கொண்ட நீள்சதுரத்தினை முன்பக்கம் போன்றே வரைந்து கொள்க. முன்பக்கம் போன்றே Aயில் Bயை கழுத்து அகலத்திற்காக 3" எடுக்கவும். அதற்கு E எனப் பெயரிடுக. கழுத்தாழத்திற்காக Aயில் இருந்து Cயை நோக்கி 1" எடுத்து Fஎனப் பெயரிடவும். E,F புள்ளிகளை வளை கோட்டால் இணைத்து கீறிக் கொள்ளவும். தோள் அளவு, தோள் சரிவு, கைவளைவு ஆகியவற்றை முன்பக்கம் போன்றே கீறவும்.

Fஇல் இருந்து Cயை நோக்கி 5"அளந்து 1 எனப் பெயரிடவும். 5" பதித்த குறுக்களவை (15")2 ஆல் வகுத்து வரும் அளவான




திருமதி
உமா மனோகரன்
(பாரீஸ் ஈழநாடு)

7 1/2"த்தையில் இருந்து A,Bக்குச் சமாந்தரமாக நேர்கோடு வரைந்து கைவளைவினைக் கீறிக் கொள்ளவும். முன்பக்கத்தினைப் போன்றே கீழ் டக்சினையும் வரையவும். கைவளைவின் கூடிய வளைவில் நேர்கோடுகளால் செங்கோணம் அமைத்து படத்தில் காட்டியவாறு டக்சினைக் கீறிக் கொள்ளவும். பின்பக்கத்தில் டக்ஸ் பாவிக்காததால் அதை மடித்து ஒட்டி விடவும்.

முன், பின் கழுத்தின்அகல, ஆழத்தினை எமது விருப்பத்திற்கேற்ப கூட்டி அமைத்துக் கொள்ளலாம்.

தையல் விடு வெளிக்காக முன்பக்கத்திற்கு போன்றே இதற்கும் விடுதல் வேண்டும் அடிப்பக்கத்திற்கு 1 1/2" விடுதல் அவசியம்.


# நீங்களும் தைக்கலாம்

சாறி பிளவுசின் கை

(உதாரணத்திற்கு இவ் அளவுகளை பாவிக்கவும்)

தேவையான அளவுகள்:

| | |
|---|---|
| 1. முழு நீளம் | 12" |
| 2. கைச்சுற்றளவு | 13" |
| 3. நுனிக்கைச்சுற்றளவு | 10" |
| 4. அடிப்பொருத்து | 5 1/2" |




**வரையும் முறை:**

நேர்கோடு ஒன்று வரைந்து A,B எனப் பெயரிடுக. A,B நேர் கோட்டிற்கு செங்குத்தாக ஓர் கோடு வரைந்து Cஎனப் பெயரிடவும்.

கைச்சுற்றளவோடு (13") 1"த்தை கூட்டி 2ஆல் பிரித்து வரும் அளவான 7"த்தை Eயில் இருந்து Aயிற்கும் அளந்து F,G எனப் பெயரிடவும். அடிப்பொருத்தில் (5 1/2") இருந்து 1/4"கழித்து வரும் அளவான 5 1/4"த்தினை Eயில் இருந்து Dயை நோக்கி அளந்து Hஎனப் பெயரிடவும். A,Bக்குச் சமாந்திரமாக H யினூடாக A,Bக்குச் சமாந்தரக் கோடு வரைந்து I,J எனப் பெயரிடவும். நுனிக்கைச் சுற்றளவோடு (10") + 1/2" கூட்டி வரும் அளவை 2ஆல் பிரித்து வரும் அளவான 5 1/4"த்தினை Hஇல் இருந்து Iற்கும், Hஇல் இருந்து Jஇற்கும் அளந்து முறையே K,L எனப் பெயரிட்டுக் கொள்ளவும். பின் சாறி புளவுசின் தோள் மூட்டினை அளவை (4") அளவு நாடாவால் அளந்து இவ் அளவையும், அடிப்பொருத்தின் அளவையும் கூட்டி வரும் அளவை முழு நீளத்திலிருந்து (12") கழித்தால் வரும் அளவான 2 3/4"த்தினை Eயில் இருந்து Cயை நோக்கி அளந்து M எனப் பெயரிடவும். பின்னர் A,M புள்ளிகளை நேர்கோட்டினால் இணைக்கவும். அதைப் போன்றே B,M புள்ளிகளையும் இணைக்கவும். இவை போன்றே A,K,B,L புள்ளிகளையும் நேர்கோடுகளால் இணைக்கவும். A,M நேர்கோட்டின் சம அளவைப் பிரித்து N எனப் பெயரிடவும். A,N.N,M புள்ளிகளிற்கிடையிலான சம அளவுகளையும் பிரித்து முறையே O,Pஎனப் பெயரிடவும். இதைப் போன்றே B,M நேர்கோட்டையும் சம அளவுகளாகப் பிரித்து N2, O2, P2 எனக் குறியிட்டுக் கொள்ளவும். O வில் இருந்து உள்நோக்கி 1/2"யும் P2இல் இருந்து வெளிநோக்கி 1.4" மும் Oவில் இருந்து வெளிநோக்கி 1/2"மும் P2இல் இருந்து உள்நோக்கி 1/4"முன் இது கையின் பின் பக்கம்) அளந்து புள்ளியிட்டு வளைகோட்டினால் இணைத்து கையின் மாதிரி உருவை வரையவும். தையல் விடு வெளியாக பக்கப் பொருத்தத்திற்கு 3/4"மும் நுனிக் கை மடிப்பதற்காக 11/2"யும் மிகுதி யாவற்றிற்கும் 1/2"மும் விடுதல் அவசியம்.

## குட்டிக் கதை

# சலனம்

-ஷர்மிளா இஸ்மாயில்-

"சலனம்" - நிமிஷத்தில் மின்சார அலைகளைத் தோற்றுவித்து, இதயத்தை இறுக்கிப் பிடித்து நிற்குமே அது தான் சலனம். பெண்ணை விட ஆண் மகன்தான் இந்தச் சலனத்தின் அடிமையாகும் சந்தர்ப்பம் அதிகம் என்பாள் சுரேகா. தன் காதலன் ரகுவிடம் அடிக்கடி தர்க்கிப்பாள். "உங்களைக் கூட நம்பமுடியாது. நான் பக்கத்திலில்லாத நேரங்களில் உங்க மனசு எங்கெங்க அலை பாயுதோ? யார் கண்டா?" அவன் கோபிக்க மாட்டான். மறுக்கவும் மாட்டான். நீ சொல்வது சரிதான் என்கிறானா இல்லை உன்னுடன் தர்க்கிப்பதில் அர்த்தமில்லை என்று சும்மாயிருக்கிறானா என்று அவளுக்குப் புரிவதேயில்லை.

பஸ் தரிப்பில் அலைமோதிய தலைகளை பஸ்ஸுக்குள் ஜன்னலோர கடைசி வரிசை சீட்டிலிருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள் சுரே.... ரகுவின் தலையைக் கண்டவுடன் மனசு பொங்கி நுரை வழிய ஓட்டோமெடிக்காக புன்னகைத்துக் கொண்டாள்.

சரியான நெருக்கம். சன நெருக்கத்தில் அவன் மறைந்து போனான். மீண்டும் தெரிந்த போது முன்வரிசையில் உட்கார்ந்திருந்தான். நிச்சயம் அவன் தன்னைக் காணவில்லை என்பதை புரிந்து கொண்டாள். பஸ்ஸில் ஏறினால் கொஞ்சம் தேடிப் பார்க்கத் தெரியாதா என்ற ஆதங்கம் எழுந்தது. பயணம் தொடர மீண்டும் சன நெருக்கம். அதிகம் பேர் ஏற இறங்கியவர் சிலரே. எல்லோரையும் விட வேறுபட்டு உயர்ந்து தெரிந்த ரகுவின் தலையைக்குறி வைத்த பார்வையை சுரே திருப்பவில்லை. எதேச்சையாக அவன் தலை உயர்ந்ததையும் பக்கத்தில் நிற்கும் யாரையோ ஊன்றி கவனிப்பதும் புரிந்தது. தலையை மடித்து இவளும் பார்த்தாள். ஆ! அழகான இளம் பெண். விழிகளிலே நட்சத்திரம் மினுங்க நின்றாள். ஓ....இவளைத்தான் பார்க்கிறானோ? மனதில் பூகம்பம், எரிமலை, பட்டாசு எல்லாம் வெடிக்க ஆரம்பித்தன.



சட்டென எழுந்தவன் அந்த அழகிக்கு இடம் கொடுக்கவே! திகைப்பின் எல்லையில் சுரே. சலனம்..... சலனம்.... அவன் முகத்தில் புன்னகை. அவளைப் பார்த்து தான். நிச்சயம் அவள் உறவினப் பெண்ணல்லள். அவனது நண்பனின் சகோதரிகளுமல்லள். இத்தனை அழகியப் பெண் எப்படி தனக்குத் தெரியாமல் அவனுக்கு பரிச்சயமானாள்? கேள்விக் குறி மலையாய் மனதை அழுத்தியது. சரி இறங்கட்டும் பதில் தெரியும். சமாதானப்பட்டுக் கொண்டாள். இறங்கினான். இப்போதும் சுரேயை அவன் காணவில்லை என்பது நிதர்சனம். வழமையாக அவளுக்காக காத்திருக்கும் இடத்தை நோக்கி நடந்தவனை எட்டிப்போய் தட்டினாள். அடிக்காத குறை. வேகமாகத் திரும்பி மலர்ந்தான். முறைத்தாள். வினவினான். கடுகடுத்தாள்.

"சலனம்...தப்ப முடியல்ல இல்ல. பாவம் நீங்க இடங்கொடுக்காட்டி அந்த அழகான கால்கள் வலிச்சிருக்குமில்ல." நக்கலடித்தாள். புரிந்து கொண்டான். "ஓ...நீயும் அதே பஸ்ஸிலா வந்தே. நான் காணலியே?" கண்டிருந்தா..... இடங்கொடுத்திருக்க மாட்டீங்க....நல்ல வேளையா வந்தேன். இல்லாம போனா உங்க குணத்த தெரிஞ்சுக்காம போயிருப்பேன். ஆப்டரோல் நீங்களும் ஒரு சாதாரண சராசரி தான். வித்தியாசமா தேடி கடைசியில ஏமாந்தது தான் மிச்சம். சலனப்படுற சந்தர்ப்பங்கள் எனக்கும் வாய்ச்சிருக்கு அந்த மாதிரி நேரங்கள்ல எல்லாம் உங்க முகத்த நெஞ்சில நிறுத்தி மனச அடக்கி வச்சுப்பேன். என்னப் போலவே நீங்களும் இருப்பீங்கன்னு எதிர் பார்த்தேன். ஏமாற்றம் தான். என்னால தாங்கிக்க முடியல." அவள் தொடர அவன் வெட்டினான்.

"முடிச்சிட்டியா. இல்ல இன்னம் இருக்கா?" அவள் வெறித்தாள். "இனிமே இருந்தா என்ன இல்லாமல் போனாத் தான் என்ன," காரமாகக் கேட்டாள்.

அவன் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மெலிதாய் முறுவலித்தான். அமைதியாய் அடித் தொனியில் "அவசரப்பட்டுட்டே சுரே.... அவளுக்கு நான் இடங்கொடுத்தது சலனத்துக்கு அடிமையாகின்னு சொல்லிவிட்டே. பரவாயில்லை. அதுக்காக என் காரணத்தையும் கேட்டுக்க. அந்தப் பொண்ணு ஒரு கைல அஞ்சு விரலும் இல்லாம இருக்கிறவ. பக்டரில ஒரு மெஷின்ல துரதிஷ்டமா கைய மாட்டிக்கிட்டவ. ரெண்டு வாரமா இந்த பஸ்ல வாறா. என் ப்ரெண்ட் ஒருத்தன்ட பக்டரில தான் வேல பார்க்கிறா. சாதாரணமாகவே நம்மால இந்த பஸ்கள்ல பயணம் போக கஷ்டம். விரல்களை இழந்த பரிதாப நிலைல இந்தப் பொண்ணு... பாவமில்லை.... உன்கிட்ட இவளைப் பத்தி மறந்து, சொல்லாம விட்டது என் தப்புத் தான்...ம்..." மெதுவாய்க் கூறி முடித்தான்.

"ஓ....ரகு...." சுரே அவன் கைகளைப் பிடித்து நின்றாள். "ஐ'ம் ஸோ ஸொரின்னு சொல்லப் போறே... அது வேணாம்..... இனிமே இப்படி அவசர முடிவு எடுக்க மாட்டேன்னு சொல்லிடு. அது போதும்" அவன் கூற அவள் அந்தக் கைகளை இறுக்கிப் பிடித்தாள். மனம் லேசாய்த் தளர்ந்து பின் மலர்ந்தது. இப்போது அவன் கண்களில் நட்சத்திரம் கண்டாள் அவள்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்குகொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் (கடந்தவார முரசு) வரப்போகும் 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## கூச்சமா? அளவோடு போதும்!




குடும்பப் பெண்களுக்கு தமது கணவரோடு பழகும்போது கூச்சமும் நாணமும் ஓரளவு கவர்ச்சியைத் தோற்றுவிக்கும் என்பது உண்மைதான்.

அதற்காக எப்போதுமே கூச்சத்துடன் ஒதுங்கியிருப்பது என்பதும் சரியல்ல.


எதுவும் அளவோடு இருப்பதே வாழ்க்கைக்கு நல்லது.

## வீட்டுக் குறிப்பு

குளியல் சோப் கரைந்து போய், கையில் பிடிக்க முடியாத அளவுக்கு போய்விட்டதா? இப்படி மீதியாகி போன சோப்பு துண்டுகளை எல்லாம் ஒரு பிளாஸ்டிக் கிண்ணத்தில் போட்டு சமையலறை தொட்டியின் அருகே வைத்துவிடுங்கள். அவ்வப்போது கைகளை சுத்தம் செய்து கொள்ள உதவும்.



வெண்ணை, சீஸ் போன்றவற்றை வாங்கிக் கொண்டு வந்தவுடன், அதை சுற்றியுள்ள பிளாஸ்டிக்தாளை நீக்கிவிட்டு, பாத்திரம் எதிலாவது போட்டு, பிரிட்ஜில் வைத்து விடுங்கள். பிளாஸ்டிக், அலுமீனிய தாள்களில் நீண்டநாட்களுக்கு வைத்திருந்தால் உள்ளே இருக்கும் வெண்ணை, சீஸ் போன்றவை சுவை மாற வாய்ப்புள்ளது. இப்பொருட்களை எல்லாம் நீண்ட நாட்களுக்கு வைத்திருக்காமல் கூடுமான வரை வாங்கின உடனேயே உபயோகித்து விடுவது நல்லது.



அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## மின்சார ஏணி நசுக்கியது தலையை! வியத்தகு சிகிச்சை உயிர் காத்தது!!




பழுதடைந்த ஒரு மின்சார ஏணியைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்த ஜோனிலேயின் முகம் சப்பளிந்து போய் விட்டது. அவருடைய முகத்தைச் சீராக்குவதற்கு மருத்துவர்கள் மேற்கொண்ட சிகிச்சை முறை மகத்தான சாத்னையைப் புரிந்தது.

தன்னுடைய தலையின் நொருங்கிப்போன எலும்புகளைத் தேடி எடுத்துப் பொருத்துவதற்கு மருத்துவர்கள் எடுத்துக் கொண்ட அசாத்தியமான முயற்சிகளுக்கு 43 வயதான ஜோனி நன்றி கூறுகிறார்.

அமெரிக்காவிலுள்ள கன்சாஸ் நகர்- சென் லூக்ஸ் மருத்துவமனை மருத்துவர்கள் இந்த சத்திர சிகிச்சைக்கு 12 மணித்தியாலங்களை எடுத்துக் கொண்டனர். "அவர்களுக்கு எனது எலும்புத் துண்டுகளைப் பொருத்து வதற்கு 150 ஸ்குறு ஆணிகளும் 25 உலோகத் தகடுகளும் தேவைப்பட்டன" என்று ஜோனி கூறுகிறார். இத்தகையதொரு தாக்குதலின் பின்னர் ஒருவர் உயிருடன் இருப்பது நம்பமுடியாது என்று மருத்துவர்கள் அப்போது தெரிவித்தனராம். அந்த நேரத்திலும் அந்த வேதனையையும் தாங்கிக் கொண்டு அறிவு மயங்காமல் அவர் காணப்பட்டார். அது மருத்துவ நிபுணர்களுக்கு ஒரு சவாலாக இருந்தமையினால் அவர்கள் துணிந்து சிகிச்சை செய்ய முற்பட்டனர்.

ஜோனி மின் ஏணியைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் போது 300 இறாத்தல் எடையுள்ள ஏணியின் தளம் கீழ் நோக்கி நேராக ஜோனியின் தலையில் விழுந்தது. பெரும் வெடி விபத்துப் போல் அது இருந்ததாகக் கூறுகிறார். தனது தலையில் வேகமாக அதுவிழுந்ததும் கீழே விழுந்த அவருடைய உடலிலிருந்து தலைவேறாகவே துண்டிக்கப்பட்டுவிட்டது என்ற நிலை ஏற்பட்டதோ என்றிருந்ததாம். இவருடன் பணியாற்றிய நண்பர்கள் ஓடோடிவந்து பெரும்பாடுபட்டு இவருடைய தலையின் மீது விழுந்து கிடந்த அந்தப் பகுதியை உயர்த்தி அவரை வெளியே எடுத்தனர். இருப்பினும் அவர் உயிர் பிரிந்துவிடும் என்றே கருதினர். முகமும் தலையும் சுக்குநூறாக சிதைவடைந்திருந்தது. வெறும் இறைச்சித்துண்டுகளாகவே முகம் உருமாறிருந்ததாக அவர் நண்பர்கள் கூறுகின்றனர். அரை அங்குல விட்டமுள்ள உலோகத்துண்டு ஒன்று தலையை உடைத்து உட்புகுந்திருந்தது. மூளையிலிருந்து அரை அங்குலம் தூரம் வரை இடைவெளியில் அந்த உலோகத்துண்டு நின்று விட்டது. அந்த அரை அங்குலத்தையும் தாண்டி மூளையை அத்துண்டு தொட்டிருந்தாலே ஜோனி உடனடியாக இறந்திருப்பார்.

"வேதனை மிகக் கடுமையாக இருந்தது. ஆனால் நான் நம்பிக்கையை இழக்கவில்லை. 'அதிர்ச்சியில் நான் அறிவை இழந்திருந்தால் நிச்சயமாக நான் அப்போதே உயிரிழந்திருப்பேன்" என்றார் ஜோனி. "என்னுடைய இடது கண்ணும் காதும் துண்டிக்கப் பட்டு விட்டது. எனது முகம் முழுவதும் துண்டுகளாகச் சிதைந்து தொங்கியதையும் நான் உணர்ந்தேன்."

பெரிய வெடி போன்ற சப்தத்தைக் கேட்ட குளோரியா தில்மன் என்ற மருத்துவமாது உடனடியாக ஓடிவந்து முதலுதவிகளைச் செய்துள்ளார். இதனாலேயே தான் பிழைக்க முடிந்தது" என்று நன்றியுடன் அவர் கூறுகிறார்.

"அவர் இருமிக்கொண்டும் அவருடைய குருதியிலேயே குளித்துக் கொண்டும் இருந்தார். அவருடைய தலையை நிமிர்த்தி இயன்ற அளவு துண்டுகளைப் பொருத்த முயன்றேன். இரத்தப் பெருக்கை கட்டுப்படுத்த கழுத்தின் பின்புற இரத்த நாளங்களில் அமுக்கம் கொடுத்துத் தடையை ஏற்படுத்தினேன்" என்று மருத்துவ மாது கூறினார். அம்புலன்ஸ் வண்டி வந்ததும் அதில் அவர் மருத்துவ மனைக்கு விரையப்பட்டார். இத்தனை நடந்தும் அவர் சுயநினைவினை இழக்காமைதான் அனைவருக்கும் வியப்பை அளித்தது. சத்திர சிகிச்சை செய்யும் போது அவருக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. மயக்கம் கொஞ்சம் தெளிந்ததும் அவர் உடனடியாகக் கேட்டது- தன்னுடைய முகத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடி தான்.

## பதுங்கியிருந்து தாக்குதல்!

எய்ட்ஸ் நோய்க்குக் காரணமான எச்.ஐ.வி. வைரஸ் ஒருவருக்குத் தொற்றியவுடன் அவருக்கு நோய் வந்து விட்டதற்கான அடையாளங்கள் எதுவும் காணப்படமாட்டாது. கிருமி உடலில் சேர்ந்து கணிசமான காலத்தின் பின்னர்தான் நோய்க்கான அறிகுறிகள் தென்படும்.

இக்கிருமிகள் ஒரு மனிதனின் உடலைப் பற்றியதும் அவை நேராக நிணநீர்ச் சுரபியை நாடிச் சென்று விடுகின்றன. அங்கேயே இவை பல்கிப் பெருகுகின்றன. சில நாட்கள் இவை அங்கேயே அடக்கமாக இருந்து மெல்ல வெளிப்பட்டு வெண்குருதி சிறுதுணிக்கைகளைத் தாக்கத் தொடங்குகின்றன. அப்போது தான் நோய் தொற்றி விட்டதனை பரிசோதனைகளின் மூலம் காண முடிகிறது.

## நெட்டி முறிப்பவரா நீங்கள்?

அடிக்கடி நெட்டி முறிப்பது நல்லதல்ல. கை, கால், சிறு எலும்பு மூட்டுக்களில் உராய்வு அதிகமாகி அழற்சிக்கு வழி வகுக்கும். அதனால் மூட்டுவலி, வீக்கம், இயக்கமின்மை போன்ற தொந்தரவுகள் தொடரும்.

## நோய்க்கு தடுப்பாகும் பருப்பு!

- தினசரி 84 கிறாம் வாதுமைப் பருப்பு உண்பவர் இருதய நோய்த் தாக்கம் பெறுவது குறைவு என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.
- கொழுப்புச்சத்துள்ள உணவை உண்ணும்போது வாதுமைப் பருப்பையும் ஓரளவு சேர்த்துக் கொண்டால் 10 சதவிகிதமான கொழுப்பு கரைந்து விடுகிறது.
- வாதுமைப் பருப்பிலுள்ள கலோரிகளில் 80 சதவிகிதம் கொழுப்பிலிருந்துதான் உருவாகிறது, எனினும் இதனால் உடல் பாதிப்பு ஏற்படுவதில்லை.
- பொதுவாக விதைகளும் பருப்பு வகைகளும் இருதயக் கோளாறுகளிலுமிருந்து உடலைக் காக்கின்றன. அண்மைக்கால ஆய்வுகளின்படி எந்த வகையான விதைகளை உண்டாலும் இருதயக் கோளாறிலிருந்து 50 சதவிகிதம் தப்பித்துக் கொள்ள வாய்ப்புண்டு என்று தெரிய வருகிறது.

## வெண்ணெய் வேண்டாம் என்று

வெண்ணெய் உண்பதை விடுத்து மார்ஜரின் உண்ண ஆரம்பிப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மார்ஜரினில் அதிக அளவு கொழுப்பு இருப்பதனால் இருதய நோய் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக புதிய ஆய்வுகள் கூறுகின்றன. ஹாவாட் மருத்துவப் பள்ளி அண்மையில் 85,000 பெண்களை வைத்து நடத்திய ஆய்வின் முடிவு இதனைத் தெரிவிக்கிறது. கூடுதலான மார்ஜரினை உட்கொள்ளும் பெண்களுக்கு இருதய நோய் ஏற்படும் அபாயம் அதிகமாகிறது என்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. மார்ஜரின், காய்கறிகள் மற்றும் மீன் ஆகியவற்றை திரவ வடிவாக்கித் தயாரிக்கப்படுகிறது.

பின்னர் இது நீரகச் செறிவூட்டப் படுகிறது. இவ்வேளையில் கொழுப்புத் தன்மை அதிகரிக்கிறது. கூட்டுச் சமநிலை ஏற்படுத்தப்படும் போது 5 முதல் 30 சதவிகிதமான கொழுப்பு மார்ஜரினில் இணைகிறது. கேக் மற்றும் வெள்ளை பாண் ஆகியவற்றிலும் கணிசமான அளவு கொழுப்புத்தன்மை உள்ளது.

## நீரிழிவை கட்டுப்படுத்த எளிய முறைகள்

பயிற்சியில்லா உடலையும்
நீரிழிவு தேடி வரும்.



அன்றாட வாழ்க்கையில் நாம் எத்தனையோ வகையான நோய்களுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். அவற்றை அப்போதைக்கப்போது கட்டுப்படுத்தக் கூடிய பல வகையான மருந்துகளையும் சாப்பிட்டு வருகிறோம். இதற்குக் காலமும் ஒரு வகையில் நம்மை மாற்றியதே காரணம் என்று கூடச் சொல்லலாம். எத்தனையோ நோய்கள் தீர்க்கப் படாமலும், மருத்துவர்களுக்கு சவால் விடும் வகையிலும் அமைந்து இருக்கின்றன. இருப்பினும் எளிய முறையில் சில மருத்துவ முறைகள் நம் பழக்க வழக்கங்களில் கலந்திருந்தாலும் அவற்றை நாம் உதாசீனப் படுத்தி வருகிறோம். அதன் அடிப்படையில் நாளும் பயந்து, நோயின் தன்மைக்கேற்ப வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டு தினமும் மருந்து சாப்பிட்டால் தான் சரிப்பட்டு வரும் என்ற நிலையில் வாழ்பவர்கள் பலர்.

நம்முடைய வாழ்க்கையில் நம்மை சஞ்சலப்படுத்தும் வியாதிகளில் "நீரிழிவு" என்ற நோயும் ஒன்று. இதற்கு மேனாட்டு மருத்துவ முறையில் 'டயாபடீஸ்' என்று சொல்லுவர். இந்த நோயை மேனாட்டார் இரண்டு வகையாகப் பிரித்திருக்கின்றனர். ஒன்று டயாபடீஸ் மெலிட்டஸ், இரண்டாவது டயாபடீஸ் இன்ஸிபிடஸ். இந்த நோய் இன்சுலின் என்ற திரவம் நம் உடலில் குறைந்து போவதால் வருவது என்று மேனாட்டு மருத்துவர்கள் கருத்து தெரிவித்து அதற்காக பல மருந்துகளையும் கொடுத்து வருகின்றனர். இருப்பினும், ஊசி மூலம் இன்சுலின் செலுத்துவது என்ற முறையை இன்றும் கையாண்டு வருகின்றனர். அதைப் பின்பற்றியே டயாபடீஸ் (சர்க்கரை நோய்) உள்ளவர்கள் ஊசி மூலம் இன்சுலின் செலுத்திக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இந்நோய் அவர்களுக்கு பெரும் பிரச்சனையாகவே இருந்து வருகின்றது. "டயாபடீஸ்" நோயை நமது தமிழ் மருத்துவ முறையில் நீரிழிவு, என்று பெயரிட்டு அழைத்து வருகின்றனர். இது மேக நோயில் தொடர்புடையதால் இதை மதுமேகம் என்றே அழைப்பது பொருத்தம். இன்சுலின் குறைவால் சர்க்கரை நோய் கண்டவர்கள் இனிப்பையே தொடக்கூடாது என்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நோய் வருவதற்கு முக்கிய காரணமே வாய் அடக்கம் இன்மையே. அதாவது வாயை கட்டுப்படுத்தாமல் செரிப்பதற்கு முன்பே ஏதாவது வயிற்றில் போட்டு அடைப்பது. செரித்தும் செரிக்காமல் உண்பதுடன், வேலை ஏதும் செய்யாமல் உடலுக்கு எந்த விதமான பயிற்சியும் கொடுக்காமல் உட்கார்ந்த இடத்தில் இருந்தே வேலை செய்வதாலும் இந்நோய் வருகிறது. மற்றும் பெற்றோர்களுக்கு சர்க்கரை நோய் இருந்தால் பிள்ளைகளையும் அது தொடர்ந்து வரும். மேலும் அதிக அளவில் உடலுறவில் ஈடுபடுபவர்களுக்கும் இந்நோய் வருகிறது. இதனால் இந்நோய் கண்டவர்கள் சர்க்கரை, மாவு பண்டங்கள் மற்றும் அரிசி சோறு உண்ணக்கூடாது என்ற கட்டுப் பாட்டுக்குள் தள்ளப்படுகிறார்கள்.

நம் உடலில் நாம் தோன்றிய போதே தோன்றிய உறுப்புக்கள் இன்சுலினை சுரந்து நமக்கு நல்ல ஆரோக்கியமான நிலையை கொடுத்து வந்தாலும், இடையிலே நின்றுபோய் நமக்கு சர்க்கரைநோய் ஏற்படக் காரணமாகவும் அமைந்து விடுகின்றது. பணக்காரர்களுக்கே பெரும்பாலும் வருகின்ற இந்த நோய் இப்போது ஏழைகளின் இல்லங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

ஊசி மூலம் இன்சுலினைப் பெறுகின்றவர்கள் ஊசி அல்லாமல் இன்சுலினைப் பெற ஒரு முறை நம் தமிழ் மருத்துவத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "நெல்லிக்காய்" இன்சுலினை சுரக்க வைக்கும் மகத்தான சக்தி உடையது. நெல்லிக்காயை கற்ப மூலிகையாகவும் பண்டைய மக்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இதன் பெருமை உணர்ந்த அதியமான், நெல்லிக்கனியை அவ்வைக்குக் கொடுத்த வரலாற்றுச் சான்றுகளின் மூலம் அறிய முடிகிறது.

இந்த நெல்லிக்காய் எப்போதும் பசுமையாக கிடைப்பது இல்லை. பசுமையான காயை இடித்து சாறு பிழிந்து ஒரு அவுன்சு வீதம் தினமும் உட்கொண்டு வந்தால் இன்சுலின் சுரக்கும். பசுமையாக கிடைக்காத காலத்தில் நெல்லி வற்றலைப் பயன்படுத்தலாம். நெல்லிவற்றல் கடைகளில் கிடைக்கக்கூடியது. நெல்லி வற்றலை கடையிலிருந்து வாங்கி வந்து வெயிலில் நன்றாக காய வைத்து அதிலிருக்கும் கொட்டை தூசுகளை நீக்கி நன்றாக இடித்து சலித்த தூள் எடுத்துக் கொண்டு அதற்கு 10க்கு 1 என்ற வீதத்தில் (100கிராமுக்கு 10 கிராம்) மிளகுத் தூள் சேர்த்து இரண்டு தூளையும் கலந்து கண்ணாடி புட்டியில் பத்திரப் படுத்தவும். இந்தத் தூளைகாலை மாலை இரண்டு வேளையும் ஒரு டீஸ்பூன் வீதம் சாப்பிட்டு வெந்நீர் குடித்து வந்தால் இன்சுலின் தாராளமாகச் சுரக்கும். இது ஒரு எளிமையான முறை. இதனால் அதிக நன்மை கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதை உண்டு அனுபவத்தில் பலன் கண்டவர்கள் சர்க்கரை நோயில் இருந்து விடுபட்டிருக்கிறார்கள்.

இது எளிமையான முறையாக இருந்தாலும் கூட நீண்ட நாட்கள் சாப்பிடுவதால் அறவே சர்க்கரை நோயில் இருந்து விடுபடலாம்.

இந்த நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் இங்கே குறிப்பிடும் மருந்தை தாங்களே செய்து சாப்பிடுவதின் மூலம் சர்க்கரை நோயில் இருந்து விடுபடலாம். நாவல் மரத்தின்பட்டை, எட்டி மரத்தின் பட்டை, இவைகளைக் கொண்டு வந்து வெயிலில் நன்றாக காய வைத்து தனித்தனியே இடித்து சலித்துக் கொண்டு இரண்டு பட்டையின் தூளையும் சம அளவு எடுத்து கலந்து கண்ணாடி புட்டியில் பத்திரப் படுத்தவும். சர்க்கரை நோயின் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்ட வர்கள் இரவு படுக்கப் போகும் முன், இந்த தூளில் ஒரு டீஸ்பூன் அளவு எடுத்து 1 டம்ளர் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து கொதித்த பின் இறக்கி வைத்து மூடி வைக்கவும். காலையில் தூங்கி எழுந்த உடன் இரவு கொதிக்க வைத்து பத்திரப்படுத்திய இந்த நீரை வடிகட்டி ஒரு அவுன்சு வீதம் காலையில் குடிக்கவும். இப்படி தினமும் காலையில் இந்த தூள் போட்டு கொதிக்க வைத்த நீரை 24 நாட்கள் குடித்துவந்தால் சர்க்கரை நோயின் கடுமையான பாதிப்பிலிருந்து முழுவதுமாக விடுபடலாம். இதைச் சாப்பிடும் போது கசப்புச் சுவை இருக்கும். அதைப் பொருட்படுத்தாமல் இம் மருந்தை உட்கொள்வதால், அதிக அளவில் வெளியேறும் மூத்திரம் கட்டுப்படும். அதிக அளவில் இருக்கும் நீர் வேட்கை தணியும் என்பதில் சந்தேகமே இல்லை.

இதனோடு கொஞ்சம் நாக்கைக் கட்டுப்படுத்திக் கொண்டு அளவான உணவை உட்கொள்ள வேண்டியது அவசியம். பசித்த பின் சாப்பிடுவது நல்லது. காய்கறிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட "சூப்" சாப்பிட்டு வருவது நல்ல பலன் கொடுக்கும். தினமும் ஏதாவது ஒரு கீரை சாப்பிட்டு வருவது நலம். முருங்கைக் கீரை சாப்பிடுவது விசேஷபலன் கொடுக்கும். இந்த மருந்தை பயன்படுத்துபவர்கள் அவசியம் சிறுகீரை, பாகற்காயை நீக்க வேண்டும். ஏனெனில் இவை இரண்டும் இந்த மருந்தை முறிக்கும் தன்மை வாய்ந்தவை.

www.padippakam.com









# சினி கசிட்

## கவர்ச்சி ஆட்டம் ஏன்? கேட்டால் பதில் ரெடி!

ஒரு சில ஆண்டுகளிற்கு முன்னர் பிரபலமாக இருந்த கதாநாயகி நடிகைகள், தற்போது படவாய்ப்புக் களின்றி சில படங்களில் கவர்ச்சி நடனம் ஆடி வருகின்றனர்.

சூரியனில் விஜிரும், உழைப்பாளியில் ரூபினி, பல்லவியும், ஜென்டில்மேனில் சௌதமியும் கவர்ச்சி நடனமாடியுள்ளனர்.

மார்க்கட் இல்லாததால் தானே கவர்ச்சி நடனமாடுகிறீர்கள் என்று கேட்டால் தயாராக உள்ள பதில் இதுதான். "அப்படி எதுவுமில்லை அந்தப்படத்தின் இயக்குநர் எம்மை அறிமுகப்படுத்தியவர். அந்தப் படத்தின் பிரபல கதாநாயகன் நடிப்பதால் ஒப்புக்கொண்டோம். இனி இப்படி நடிக்க மாட்டோம்" என்று சொல்கிறார்கள். (அட அதுவும்... அப்படி யோ!)

இப்போது உழைப்பாளியில் விஜி நடனமாடினார். அதிரடிப்படையில் ரூபினியும், ஐ லவ் இந்தியாவில் பல்லவியும் நடனமாடுகின்றனர்.

## சுகன்யா யோசிக்கிறார்

"சர்க்கரைத் தேவன் படத்தில் விஜயகாந்த் உடன் நெருக்கமாக நடிக்க மறுக்கவில்லை. சேற்றில் விழுந்து நடிக்கவே மறுத்தேன். சேறு என்றால் எனக்கு அலர்ஜி" என்று சுகன்யா அறிக்கை விட்டு சமாளித்தார். மீண்டும் சர்க்கரைத் தேவனில் நடித்து முடித்தார். படமும் வந்துவிட்டது.

ரோஜாவின் அதிரடி கவர்ச்சியும்- பானுப்பிரியாவின் சான்ஸ் தேடும் வித்தியாச அணுகுமுறைகளும்- உச்சபட்ச கவர்ச்சி காட்டலும் சுகன்யாவை யோசிக்கவைத்துள்ளன.

ஜலவர்யாவும் போதுமா இது என்று கேட்காத குறையாக துணி இழந்து கொண்டிருக்கிறார். ஒரு முழம் துணி போதும் அவருக்கு.

சுகன்யா இப்போது தன் கொள்கைகளை மாற்றிக்கொண்டு ஆடை ஒப்பனைப்புக்கு தயாராக வேண்டிய நேரம். ஏனென்றால் போட்டி அதிகம்.

முன்னரே யோசித்திருந்தால் உள்ளே வெளியே படத்தில் நடித்துத் தொலைத்திருக்கலாம்தானே.



## இரு நாயகன்-இரு நாயகி!

இதுவரைக்கும், புரியாத புதிர், சேரன் போன்ற படங்களைத் தயாரித்த சுப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனம் அடுத்ததாக மூன்று கோடி ரூபாய் செலவில் தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் உருவாக்க உள்ளது. சரத்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். படத்திற்கு கப்டன் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதில் சரத்குமாருக்கு ஜோடியாக இருவர். ஒருவர் சுகன்யா. மற்றவர் ரஞ்சிதா. சினிமாஸ் கோப்பின் உருவாகும் இப்படத்தை இது தாண்டா போலீஸ்புகழ் கோடி ராமகிருஷ்ணா இயக்குகிறார். கோடியைக் கொட்டி படம் எடுப்பவர்கள் ஒரு ஜோடியைப் போடாமல் இரண்டு ஜோடியைப் போடுவது புதிய உத்தியாக வருகிறது.

## புத்திசாலி ராஜா

ஒரு படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்தவுடன்தான் அடுத்த படத்தில் நடிப்பது என்ற பழக்கத்தை ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்து வருவதனால்தான் கால்ஷீட் பிரச்சனை இல்லாத நடிகர் என்ற பெயரெடுத்திருக்கிறார் சத்தியராஜ்.

சத்தியராஜ் நடித்து அடுத்ததாக வெளிவரவுள்ள படங்கள் உடன்பிறப்பு, எயாபோர்ட். இவற்றை அடுத்து மணிவண்ணன் இயக்கத்தில் அமைதிப்படை படத்திலும், மனோஜ்குமார் இயக்கத்தில் புதிய படத்திலும் நடிக்கவுள்ளார்.

இவற்றுடன் ஆர்.வி. உதயகுமார் இயக்கப்போகும் படமொன்றிலும் நடிக்கப் போகிறார். தென்னவன் என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை திருப்பூர் கே. பியாலு தயாரிக்கிறார். பாலு சத்யராஜ் அபிமானி மற்றும் நண்பர்.

## மினி சினி

- ★ வருடம் ஒன்றிற்கு ஐந்து படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார் ரேவதியின் கணவர் சுரேஷ் மேனன். அவற்றில் ஒரு தெலுங்குப்படமும், ஒரு மலையாளப்படமும் அடக்கம்.
- ★ தற்போது தமிழில் குறைவாக நடித்து வரும் ஆனந்தபாபு, தெலுங்கில் மிகவும் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார்.
- ★ மருதநாயகம் மூலம் இயக்குநராக மாறிய கமலைத் தொடர்ந்து முன்னணி நடிகர்களான சத்தியராஜ், கார்த்திக் ஆகியோர் விரைவில் இயக்குநராகவுள்ளனர்.
- ★ ஜென்ரில் மன் படத்தை அடுத்து தயாரிப்பாளர் கே.டி. குஞ்சுமோனன் ஐந்து புதிய படங்களைத் தயாரிக்கப் போகிறார். அவற்றில் ஒன்றில் நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார்.
- ★ ராஜாதி ராஜ...... என்ற நீண்ட தலைப்பைக் கொண்ட படம் வசூலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பாட்டாளி என்னும் படத்தை நடித்துத் தயாரிக்கவுள்ளார் மன்சூர் அலிகான்.
- ★ நீண்ட நாட்களுக்குப்பின்னர் டி.ராஜேந்தர் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக கௌதமி நடிக்கிறார். கதை, திரைக்கதை, வசனம், இசை, பாடல்கள், இயக்கம் என்பவற்றை வழக்கம் போல செய்கிறார் ராஜேந்தர். தயாரிப்பு மட்டும் வேறொருவர்.
- ★ அர்ஜுன் இப்போது தான் இயக்கி நடிக்கும் படத்திற்கு அடுத்ததாக அண்ணாமலை புகழ் சுரேஷ் கிருஷ்ணாவின் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார்.
- ★ குங்குமப்பூ என்னும் வாரமலரின் ஆசிரியர் சரவணபவன் என்பவர் சின்னக்கிளி வண்ணக்கிளி என்னும் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். இதில் இவருக்கு ஜோடியாக "அமராவதி" சங்கவி நடிக்கிறார்.
- ★ பாரதிராஜாவிடம் உதவியாளராக இருந்த பின்னர் அன்னை வயல் திரைப்படத்தை இயக்கியவர் பொன்வண்ணன். பாரதிராஜாவின் அழைப்பின் பேரில் கிழக்கு சீமையிலே படத்திற்கு உதவி இயக்குநராகப் பணியாற்றவுள்ளார்.

www.padippakam.com

# பிடித்த நடிகரின் பேரைச் சொன்னால் பெரிய வம்பாம்- யுவராணி பேட்டி

ஜாதி மல்லிப் படம் பார்த்தவர்கள் அதில் வசீகரமான இளமை வாசனை வீசிய யுவராணியை மறந்திருப்பது சாத்தியமில்லை.

பாலசந்தர் என்னும் மோதிரக்கையால் குட்டுப்பட்டதால் இப்போது வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

யுவராணியை எமது தமிழக சினிமா நிருபர் அருணா சந்தித்தார். வினா தொடுத்து விடை பெற்று அனுப்பிவைத்தார். இதோ பேட்டி. நிஜமுாக சினி விசிட்டுக்காக யுவராணி தந்த பிரத்தியேகப் படங்களும் அருணாவின் கமரா உபயம்.

- உங்கள் குருநாதர் கே.பாலச்சந்தர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

யு: நிஜியால் அவரது படத்தில் நான் நடித்தேன் என்பதை விட அவரது படத்தில் என்னை நடிக்க வைத்தார் என்பதுதான் சரியாக இருக்கும். ஜாதிமல்லியை திரையில் பார்த்தபோது என்னை இவ்வளவு தூரம் நடிக்க வைத்திருக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டேன். அவரது படத்தில் அறிமுகம் ஆனதை இட்டு மிகவும் பெருமைப்படுகிறேன்.

- விருதுகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

யு: திறமைக்கு கிடைக்கும் கூலி அந்தக் கூலியை வாங்கியே தீருவேன்.

- எந்தமாதிரி கதாபாத்திரங்கள் பண்ணனுமுன்னு விரும்புறீங்க?

யு: கிராமத்துச்கட்டிப் பெண் பாத்திரத்தில் நடிக்கணுமுன்னு ஆசைப்படுறேன்.

- ஆறுமாதமாக நிலவிய சினிமா உலக ஸ்ரைக் உங்களை எந்த அளவில் பாதித்தது?

யு: அந்த இடைவெளியில் நான் தெலுங்கில் சில படங்கள் நடித்துக் கொண்டிருந்தேன். அதனால் தமிழில் நடைபெற்ற ஸ்ரைக் என்னை அதிக அளவில் பாதிக்கவில்லை.

- உங்களுக்கு பிடித்த நடிகர், நடிகை, இயக்குநர் யார்?

யு: நடிகர் சல்பென்ஸ். அப்புறம் கிசுகிசு ஆகிடும். நடிகை ஸ்ரீதேவி அத்தோடு ரேவதி டைரக்டர் எனது குருநாதர் கே. பாலச்சந்தர்.

- நடிகையானது எப்படி?

யு: சின்ன வயசில் இருந்தே நடிகையாக வேண்டும் என்ற ஆசை இருந்தது ஆனால் யாருக்கும் சொல்லவில்லை என்னோட மாமா எம்.ஆர்.பூபதி உதவி இயக்குநராக இருந்தார். அவரிடம் எனது ஆசையை தெரிவித்தேன். இப்போ நீ சின்னப் பொண்ணு மாதிரி இருக்கே எதுக்கும் இரண்டு வருஷம் பொறுத்துக்கோ என்றார். இரண்டு வருசம் காத்திருந்தேன் மாமாவுடன் புதுப்பாடகன் படப்பிடிப்பு பார்க்கச் சென்றிருந்தேன். என்னை பார்த்தவர்கள் நடிக்கிறாயா என்றனர் தலை அசைத்தேன். நடிகையானேன்.

- உங்களுக்கு வரும் ரசிகர் கடிதங்கள் எப்படி இருக்கும்?

யு: பெரும்பாலான கடிதங்கள் என்னை அவர்களின் சகோதரி போல் நினைத்து அறிவுரை கூறித்தான் எழுதுகிறார்கள். உதாரணமாக மின்மினிப்பூச்சிகள் படத்தில் வரும் குளியல் காட்சியில் நடித்ததை பல ரசிகர்களும் கண்டித்துத்தான் கடிதம் எழுதுகிறார்கள். ஏன்னா பாலச்சந்தர் சாரிடம் அறிமுகமான என்னை அந்த உடையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ரசிகர்கள் இல்லை என்றால் நாம் இல்லை. இனி வரும் படங்களில் இப்படியான காட்சிகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வேன்.







## ... சொல்லுகிறோம்

## ரோஜா யாருக்கு தூக்குவார் கூஜா?

சமீபகாலத்தில் திரையுலகை வலம் வந்துகொண்டிருக்கும் நடிகைகளில் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்து பெரும்பான்மை வாக்குகளை பெற்றுள்ளவர் ரோஜா.

தமிழ் திரையுலக ரசிகர்களுக்கு பிடித்தமான ரோஜாவுக்கு பிடித்த நடிகை யார் தெரியுமோ? என்னது ஜூஸ்பூவா? நீங்கள் ஒரு பக்கம் போட்டியே அவரோடுதானே?

சரி அப்ப யார்? அது நமம் 16வயது புகழ் தேவி ஸ்ரீதேவிதான். ஸ்ரீதேவி என்றால் அப்படி ஒரு பிரியம் ரோஜாவுக்கு இது அவரே சொன்னது.

ஸ்ரீதேவி என்ன நடிகைக்கு நடிகையே பொறாமைப் படும் பெரிய நடிகையோ?




## இது பம்பாய் நியூஸ்

## அவசியம் ஒரு துணை!

மனிஷா கொய்ராலா- இந்தித்திரையுலகின் போதை யுள்ள நடிகை. அதாகப்பட்டது படப்பிடிப்புக்குக் கூட நிறைபோதையோடு வந்து கலாட்டா செய்யும் துணிச்சல்கார(?) நடிகை.

மனிஷாவால் நஷ்டப்பட்ட தயாரிப்பாளர் சொன்னது இது- "அவளை அடக்கி ஆளக்கூடியவனை ஒன்று தேவை"

ஜாக்கி செராப்தான் அந்தக்காளையோ? படத்தில் ஜாக்கியின் பிடியில் மனிஷா இருப்பதை பார்த்தால் அப்படியும் சொல்லலாம்தான்.

## கண்ணிலே என்னடி காயம்?

பூஜா பட் மூன்று நாட்கள் படுக்கையிலிருந்தார். அவருடைய படப்பிடிப்புக்கான அட்டவணைகளெல்லாம் நிறுத்தப்பட்டன. கண்களில் கட்டுப்போட்டிருந்தார். ஏதாவது சத்திரசிகிச்சை கண்களுக்கு நடந்துள்ளதா என்று கேட்க வேண்டாம். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. "நான் கண்ணாடி போடாதிருந்த வேளை ஒப்பனை செய்யும் போது அந்தப் பொருட்களில் ஏதோ சிறுதுளிகள் விழுந்து விட்டன. என்னால் கண்ணாடி அணியாமல் இருக்க முடியாது. கண்ணாடி இல்லாவிட்டால் என்னால் பார்க்கவே முடியாது" என்று பூஜா முறையிட்டார். பேட்டியின் போது பொபி கூடவே இருந்து உதவி செய்தார். என்ன, பொபி யார் என்றா கேட்கிறீர்கள்? அவர்தான்...சீ...போங்க வெட்கமாய் இருக்கு.

## என்னைப் பார் என் அழகைப் பார்

அழகான இந்தப் பெண் கவர்ச்சியாக ஜொலிக்கிறார் அல்லவா. கனவுகள் வேண்டாம். இந்த சுந்தரா(ரி)வின் வேறு யாருமல்ல, ரிஷிகபூர்தான். வேசப் பொருத்தம் தானடி கண்ணு. ஜோதி. என்னமா.




## ராஜகுமாரன்



## ஜோடி இரண்டு-யோகம் நன்று!

மலையாள மெகா ஸ்டார் மம்முட்டி, மௌனம் சம்மதம், அழகன், தளபதி போன்ற நேரடித் தமிழ் திரைப்படங்களில் நடித்தவர். அவரது மொழிமாற்ற படங்கள் திரைப வந்தது வேறுவிசயம்.

தற்போது ஆர். கே. செல்வமணியின் இயக்கத்தில் மக்கள் ஆட்சி என்னும் தமிழ் படத்தில் நடிக்க வுள்ளார். இளையராஜா இசை அமைக்கிறார். ஒன்றுக்கு இரண்டு ஜோடிகள் ரோஜா, கஸ்தூரி. முக்கிய வேடமொன்றில் ஆனந்த ராஜ் நடிக்க இருக்கிறார்.

# சின்னுவின் பொறாமைத் தீ




காசி என்பவன் மிகவும் ஏழை. அவன் பெரும் பணக்காரனாக வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

அவனுக்கு உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் சிறிது கூட இல்லை.

கடவுளின் முன் சென்று தன் நிலையைத் தெரிவித்தால், அவர் தனக்குப் பொன்னும், பொருளும் தருவார் என்று நினைத்து, ஊருக்கு வெளியே இருக்கும் ஒரு கோயிலுக்குப் போனான்.

குளத்தின் கரையில் அந்தக் கோயில் இருந்தது.

அவன் மேற்குத் திசையில் அமர்ந்து தனக்குப் பொன்னும் பொருளும் வேண்டித் தவம் செய்ய ஆரம்பித்தான்.

இதைக் கவனித்துவிட்ட காசியின் பக்கத்து வீட்டுக்காரன் சின்னு என்பவன், குளத்தின் கிழக்கு திசையில் அமர்ந்து தனக்கும் பொன்னும், பொருளும் வேண்டி தவம் செய்ய ஆரம்பித்தான்.

சில நாட்கள் கழித்து, மேற்கு திசையில் தவமிருக்கும் காசியின் முன் கடவுள் தோன்றினார்.

"பக்தனே! உனக்கு என்ன வேண்டும் கேள்?" என்று கேட்டார். காசிக்கு, தன் மேல் பொறாமைப்பட்டுத் தவம் செய்து கொண்டிருக்கும் சின்னுவையும் தெரியும்.

"எனக்குப் போட்டியாக கிழக்கு திசையில் அமர்ந்திருப்பவன் என்ன கேட்கிறானோ, அதைப் போல் இரண்டு பங்கு எனக்கு வேண்டும்." என்று கேட்டுக்கொண்டான் காசி.

"அப்படியா" என்று சொல்லி விட்டு கிழக்குத் திசைக்குச் சென்று சின்னுவின் முன்னால் கடவுள் தோன்றினார்.

"பக்தா!உனக்கு என்ன வேண்டும் கேள்?" என்றார் கடவுள்.

"கடவுளே, மேற்குத் திசையில் இருக்கும் காசியை நீர் சந்தித்தீரா?" என்று கேட்டான் சின்னு.

"ஆமாம்" என்றார் கடவுள்.

அவன் உம்மிடம் என்ன கேட்டான்?" என்று வினவினான் சின்னு.

"நீ கோபத்தில் இரண்டு மடங்கு தனக்கு வேண்டும் என்று கேட்டான்" என்று சொன்னார் கடவுள்.

சின்னுவின் மனம் உடனே பொறாமையால் துடித்தது.

தன்னைக் காட்டிலும் அதிகமாக அவனுக்குப் பொன்னும், பொருளும் கிடைப்பதா என்ற பொறாமையால், "கடவுளே! எனக்கு ஒரு கண் கெட்டுப்போக வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான் சின்னு.

"அப்படியே" என்றார் கடவுள் புன்னகைத்தபடியே. இதனால் சின்னுவிற்கு ஒரு கண் கெட்டது. அவனைவிட இரண்டு மடங்கு கேட்ட காசிக்கு இரண்டு கண்களும் கெட்டது.

குழந்தைகளே! பேராசையால் ஏற்பட்ட துன்பத்தைப் பார்த்தீர்களா? நாம் உழைத்து முன்னேறுவோம் என்ற தத்துவத்தை இந்தக் கதை நமக்கு உணர்த்துகிறதல்லவா? மேலும், தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை மற்றவனுக்கு இரண்டு கண்ணும் போக வேண்டும், என்று நினைக்கும் கேவலமான பிறவிகள் சிலர் இன்றும் தான் உள்ளனர். அவர்களை ஒதுக்கி நீங்கள் நல்ல வழியில், நேர்வழியில் செல்ல கற்றுக் கொள்ளுங்கள். செய்வீர்களா?

## முரசு



### "கல்வியே கண்"

உறங்கிக் கொண்டிருப்பதென்ன–தம்பி
உலகமுனை நம்பியிருக்கு
கண்ணைப் போலானக் கல்வி–உனை
கரை சேர்க்கக் காத்திருக்கு!

வம்பு செய்துத் திரிவதாலே–தம்பி
உலகமுனை உயர்த்திடாது
கஸ்டப்பட்டுக் கல்விக் கற்றால்–நீ
அறிவிலென்றும் உயர்ந்து நிற்பாய்!

அழியும் பணத்தை நாடியென்ன–தம்பி
அழியாக் கல்வியை தேடப் பழகு
உறங்கும் போது
உணர்விலெல்லாம்–காக்கும்
கல்வியை போற்றி வாழு!

அழுது நீ திரிவதாலே–தம்பி
கல்வி உன்னைத் தேடி வரா
ஏந்து நூலை இன்றே இப்போ–நீ
நாட்டிலுயர்ந்து வாழ வேண்டும்!

அப்புத்தளையூர்
எப். லெனாட்குமார்

## நவ விடயங்கள் மூன்று!

நவதானியங்கள்
1. நெல்
2. கோதுமை
3. துவரை
4. உழுந்து
5. பயறு
6. மொச்சை
7. கடலை
8. எள்ளு
9. கொள்ளு

நவரத்தினங்கள்
1. முத்து
2. பவளம்
3. புஷ்பராகம்
4. நீலம்
5. மரகதம்
6. மாணிக்கம்
7. கோமேதகம்
8. வைடூரியம்.
9. வைரம்

நவலோகங்கள்
1. ஈயம்
2. வெள்ளி
3. துத்தநாகம்
4. பொன்
5. இரும்பு
6. தாமிரம்
7. நாகம்
8. கஞ்சம்
9. பித்தளை

ஏ.எல். உனைஸ்
ஆண்டு 10 -ஈ
அக்கரைப்பற்று தேசியபாடசாலை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசுதரும் எண்ணம்

ஜுலை முரசில் இடம்பெற்ற வர்ணம் தீட்டும் போட்டியில் வெற்றிபெறும் ஒருவருக்கு பரிசு என்று சொல்லியிருந்தோம். அதனை இருவருக்காக்கியிருக்கிறோம். என்ன, சந்தோசம்தானே.

### பரிசு பெறும் இருவர்

ஏ.சீ.எம். பஃமிதா
திகழி அரசினர் மு.வி.
திகழி ஏத்தாலை.

பா. அஸ்வினி
முகாந்திரம் வீதி
கொழும்பு-3

### பாராட்டுப் பெறுவோர்

முஹமட் மனாஸ்
வகமல்கொல்லாவ
அநுராதபுரம்.

கே.ரெங்கராஜ்
பதுளை.

செ. நகுலேந்திரன்
திருகோணமலை.

ஏ.நலிபா
நாவலப்பிட்டிய.

ராசியா பர்வின்
மாத்தளை ஆமினா பெண்கள் கல்லூரி.

கணேசன் சத்தியாதேவி
தலத்து ஓயா.

ஆர். நிசாகரன்
ப. பூனாகலை.

பா. மங்கள கௌரி
நுவரெலியா.

எம்.எல்.எம். சிகான்
அக்குறணை.

டில்சாப்
ச.மு. வித்தியாலயம்
சிலாபம்.

டி. சிவகுமார்
ரி.20 தோட்டம்.

லோகாசினி சங்கையா
பாக்கியம் மகாவித்தியாலயம்
மாத்தளை.

வசீம் மொஹம்மட்
குருனாகல்.

எம். சுப்பிரமணியம்
கிருலப்பனை றோ.க.த.க.வித்தியாலயம்
பாமன்கட
கொழும்பு-6

தி.தவக்குமரன்
அப்புத்தளை.

ஏ.எல். பஸ்லி
கல்முனை.

பஸ்லா பைசர்
தர்ஹா நகர்.

கே. அகல்யா
புஸ்ஸல்லாவ.

ந. சந்திரசேகரன்
தலவாக்கொல.

சால்ஸ் இரத்தினவேலு
வத்தளை.

செல்வி எஸ். மௌசியா
திருகோணமலை.

செல்வி. எஸ். தேன்மொழி
ஜிந்துப்பிட்டி வீதி
கொழும்பு-13.

செல்வன் அ. மன்சூர்
புத்தளம்.

தி. ஜெகன்
தெஹியோவிற்ற.

ஏ.றிஹானா
கெகிராவ.

கே. தவச்செல்வன்
கொழும்பு இந்துக் கல்லூரி.



## சர்வதேச குறியீடுகள்

ஒலிவ் மரத்தின் இலை- சமாதானம்
புறா- சமாதானம்
சக்கரம்- வளர்ச்சியைக் குறிக்கும்
கையில், சட்டையில் கறுப்பு துணி- துக்கம்
கறுப்பு கொடி- எதிர்ப்பு
எலும்பு நடுவில் மண்டையோடு- ஆபத்து
சிவப்பு விளக்கு- ஆபத்து/நிறுத்து
கையில் தராசு ஏந்திக் கண்கட்டப்பட்ட பெண்- நீதி
சிவப்பு கொடி- புரட்சி/உலக தொழிலாளர் சங்க அமைப்புகளால் சிவப்புகொடி பயன்படுத்தப்படும்.
அரைக்கம்பத்தில் கொடி- இரங்கல்
தலைகீழாக கொடி- துக்கம்

டி.கோணேஸ்வரன்
பண்டாரவளை.

## ராஜ நாகம்

விஷப் பாம்புகளிலேயே மிகவும் நீளமானது ராஜநாகம். தென்கிழக்கு ஆசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளில் இவை உள்ளன. இவற்றின் நீளம் 15 அடி. இவற்றின் விஞ்ஞானப் பெயர் ஒபியோபேகஸ் ஹன்னர்.



## நீ...ள......மா......ன பாம்பு!

தென் அமெரிக்காவில் காணப்படும் அனகோண்டா எனப்படும் மலைப்பாம்பு மிகவும் கனமானது. நன்கு வளர்ந்த பாம்பு 126 கிலோ எடையுள்ளதாகவும், 5.46மீ- 6.09மீ. நீளமானதாகவும் இருக்கும்.



## விடுகதைகளும் விடைகளும்

1. பகலில் சுருண்டிடுவான் இரவில் விரிந்திடுவான் அவன் யார்?
2. கையுண்டு, கால் இல்லை. உடம்புண்டு உயிரில்லை, கழுத்துண்டு தலை இல்லை அது என்ன?
3. ஓகோ மரமே உயர்ந்தமரமே ஒரு கொத்து இலைக்கும் வழியற்ற மரமே அது என்ன?
4. தச்சன் செய்யாத பெட்டி கொட்ட கொட்ட நிரம்பாத பெட்டி அது என்ன?
5. ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி அது என்ன?
6. தோலில் முள்ளிருக்கும் பிலாக்காயும் அல்ல உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயும் அல்ல, உருக்கினால் நெய் வடியும் வெண்ணெயும் அல்ல அது என்ன?

விடைகள்
1. பாய்
2. சட்டை
3. கொடிமரம்
4. வயிறு
5. வானம்
6 ஆமணக்கு

த.திவாகரன்
பதுளை.

## சுருக்க குறியீடுகள்

1. உ.சு.நி- உலக சுகாதார நிறுவனம்
2. மே.நோ- மேக நோய்
3. கி.சே- கிராம சேவகர்
4. மா.ச.உ- மாநகர சபை உறுப்பினர்
5. தொ.ஸ்- தொண்டர் ஸ்தாபனம்
6. பி.ச.உ- பிரதேச சபை உறுப்பினர்
7. பா.உ- பாராளுமன்ற உறுப்பினர்
8. மா.வை.அ- மாவட்ட வைத்திய அதிகாரி
9. க.ப- கல்வி பணிப்பாளர்
10. ச.தொ.நி- சர்வதேச தொழிலாளர் நிறுவனம்
11. கி.அ- கிராம அதிகாரி
12. கா.பி- காரியாலய பிரதி
13. த.ம.பா- தயவு செய்து மறுபக்கம் பார்க்க
14. பெ.பி- பெரிய பிரித்தானியா
15. இ.வி.தி- இரகசிய விசாரணைத் திணைக்கலம்.

ராஜகோபால்
ஆண்டு-8, ரம்புக்எல தாஹா வித்தியாலயம்,
விலானகம்.

## சிறுகதை

# நேர்த்திக் கடன்

-புத்தளம் புல்கி-

பரீதா அந்தப் பார்சலை அவசரம் அவசரமாக எடுத்து காருக்குள் வைத்து மறைத்துக் கொண்டார்ள்.

அவளது கணவனான ராசீக்குக்குத் தெரியாமல் அந்தப் பார்சலை எடுத்து வைத்துக் கொண்டதில் பரீதாவுக்கு பெரும் நிம்மதி.

பரீதாவும், ராசிக்கும் கொழும்பில் நடக்கவிருக்கும் திருமணமொன்றுக்கு செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் போதே கணவனுக்குத் தெரியாமல் பரீதா அந்தப் பார்சலை காருக்குள் வைத்தாள்.

ராசிக் ஓர் அப்பட்ட நாஸ்த்திகன். இறைவன், ஆண்டவன் என்ற நம்பிக்கை ராசிக்கிடம் அறவே கிடையாது. எல்லாம் இயற்கையின் செயலே என மார்தட்டி வாதாடுபவன்.

பரீதாவோ இவனுக்கு நேர் மாறானவள். பயபக்தி, இறை நம்பிக்கையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவள். மார்க்க விடயத்தில் இருவரும் எதிரும் புதிருமாய் இருந்தாலும் வாழ்க்கை என்ற வண்டி ஓடிக்கொண்டுதான் இருந்தது.

ஆறு மாதங்களுக்கு முன்பு வியாபார விடயமாய் கொழும்புக்குச் சென்று நள்ளிரவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் ராசிக். நள்ளிரவு நேரமானதால் தூக்கம் கண்களை மிரட்டிக் கொண்டிருந்தபோது எதிரே வந்து கொண்டிருந்த லொறிமீது ராசிக்கின் கார் மோதியதால் காருக்கு பலத்த சேதமேற்பட்டதுடன் ராசிக்கின் ஒரு காலும், ஒரு கையும் முறிந்தது.

இந்த விபத்தை அறிந்த பரீதா துடிதுடித்துப் போனாள். தனது கணவன் பூரண சுகம் அடைய வேண்டுமென இறைவனை தினமும் வேண்டிக்கொள்வாள். பல நாட்கள் நோன்பு நோற்று தனது கணவனின் சுகத்திற்காக ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்தாள்.

பழையபடி தனது கணவனின் உடல் பூரண சுகம் பெற வேண்டுமெனவும் சுகம் கிடைத்ததும் கீரியங்கள்ளி பள்ளிவாசலுக்கு காணிக்கை கொடுப்பதாகவும் வேண்டிக்கொண்டாள்.

நாளடைவில் ராசிக்கும் பூரண சுகம் பெற்றான். பழையபடி தனது வியாபாரத்தை சுறுசுறுப்பாக கவனிக்க ஆரம்பித்தான்.

கணவனுக்குத் தெரியாமல் வேண்டிக்கொண்ட இந்த காணிக்கையைக் கொடுப்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள் பரீதா. இப்போதுதான் அதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

புத்தளமிருந்து கொழும்பு போகும் வழியில் தான் கீரியங்கள்ளி பள்ளிவாசல் உள்ளது. எனவே எப்படியும் இந்த காணிக்கையை அங்கே கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கையிலேதான் அந்த காணிக்கை பொருட்கள் நிரம்பிய பார்சலை காருக்குள் எடுத்து மறைத்துக் கொண்டாள் பரீதா.

புத்தளத்திலிருந்து இவர்களது காரும் கொழும்பு நோக்கி புறப்பட்டது. இருவரும் பேசாது மௌனமாகவே இருந்தனர். சிறிது நேரமௌனத்தை கலைத்தான் ராசிக்.

"என்ன பரீதா.....? ஒன்னுமே பேசாம இருக்கிறே..?

"ம்.....! மனசுக்கு சரியில்லை......!"

"மனசுக்கு சரியில்லையா....? அப்ப...திரும்பி போய் விடுவோமா..?" ராசிக் கேட்டான்.

"இல்ல...! இல்ல.....!! கட்டாயம் கல்யாணத்திற்கு போகத்தான் வேணும்...!"

எப்படியும் இந்த காணிக்கையை கொடுத்தே முடிப்பது என மனதுக்குள் கங்கணம் கட்டிக் கொண்டாள்.

கீரியங்கள்ளி பள்ளிவாசலும் நெருங்கிக் கொண்டிருந்தது.

பரீதாவின் மனம் பன்மடங்கு அடித்துக் கொண்டது. பள்ளிவாசல் சமீபமாக கார் வந்து கொண்டிருந்த போது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பரீதா பேசினாள்.

"என்னங்க...கொஞ்சம் காரை நிப்பாட்டுங்களேன்...."

"ஏன்?" ராசிக் விழிகளை உயர்த்தினான்.

"ஒண்ணுமில்லைங்க..!" பரீதாவுக்கு வார்த்தைகள் வர மறுத்தன.

"அப்படின்னா ஏன் காரை நிப்பாட்டச் சொல்றே..." சீறினான் ராசிக்.

"அதுங்க...! அதுங்க...!!"

"என்ன உளறுறே..."

"கொஞ்சம் நிப்பாட்டுங்களேன்....!" கெஞ்சினாள் பரீதா.

தொல்லை தாங்க முடியாத



"அப்ப ஏன் முகத்தை உம்மென்னு வைச்சிக்கிட்டு இருக்கிறே...?" ராசிக் மீண்டும் கேட்டான்.

"இல்ல...! ஒண்ணுமில்ல...!!" பரீதா மழுப்பிக் கொண்டாள்.

பரீதாவின் மனம் திக்....திக்...கென அடித்துக் கொண்டிருந்தது.

ராசிக் காரை நிறுத்தினான்.

"அக்ஷிடன் பட்ட உங்க உடம்பு மறுபடியும் சுகமா போனா...?"

"போனா....."

"பள்ளிவாசலுக்கு நேர்த்திக் கடன் கொடுக்கிறதா..... வேண்டிக்.... கிட்டேன்...!"

"அடச்சீ.....!! எனக்குத்தான் இதெல்லாம் பிடிக்காதென்று உனக்குத் தெரியும் தானே!"

சீறிப்பாய்ந்தான் ராசிக்.

"இல்லீங்க.... ரெண்டே ரெண்டு நிமிடத்துக்குள்ளே இந்தக் காணிக்கையை கொடுத்துவிட்டு ஓடிவந்திடுவேனுங்க.....!"

என்று கெஞ்சிக் கொண்டே அந்தக் காணிக்கை பார்சலை கையிலெடுத்துக் கொண்டு காரைவிட்டிறங்கினாள் பரீதா.

பொறுமை இழந்த ராசிக் அசுர வேகத்தில் காரை விட்டிறங்கி பரீதாவின் கையிலிருந்த பார்சலை பறித்தான்.

பரீதா கதற கதற அதனைப் பறித்தெடுத்த ராசிக் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்து அந்த பார்சலை தூக்கியெறிந்தான்.

அந்தப் பார்சல் விழும் இடத்தையே வெறிக்க வெறிக்க பார்த்துக் கொண்டிருந்தாள் பரீதா.

சிறு நிமிடங்களுக்குள் பரீதாவின் முகம் மலர்ந்தது. ஆனால் ராசிக்கின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

சிறிது தூரத்தில் பாதை ஓரமாக அமர்ந்து கொண்டிருந்த வயது முதிர்ந்த பிச்சைக்கார தம்பதிகளின் முன்னே அந்தக் காணிக்கை அடங்கிய பார்சல் விழுந்தது.

திடுக்குற்ற அந்த வயோதிப பிச்சைக்காரன் அவசரம் அவசரமாக அந்தப் பார்சலை பிரித்தான்.

சுளையாக இரண்டாயிரம் ரூபாய் பணமும், கொஞ்சம் சாம்பிராணியும், சில ஊதுபத்தி கட்டுகளும் அந்தப் பிச்சைக் காரனைப் பார்த்து சிரித்து கொண்டிருந்தது.

தான் வைத்த நேர்த்திக் கடன் எப்படியும் நிறைவேறியே விட்டது என்ற பூரிப்பில் பரீதா காரில் ஏறி புறப்பட்டாள்.

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ முரசு 10ல் இருந்து முரசு 29 வரை ரஜினி நடித்த படங்களின் காட்சிகள் வெளியிடப்படும்.
★ குறிப்பிட்ட படங்கள் சம்மந்தமான விடைகளைக் கீழ்வரும் கூப்பனில் நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஜம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.

போட்டிக்குத் தயாரா நீங்கள்?

20ம் பக்கத்திற்குச் செல்லுங்கள். அங்கு பிரசுரமாகியுள்ள ரஜினியின் படத்தைப் பாருங்கள். பார்த்து விட்டீர்களா? நல்லது. கீழேயுள்ள கூப்பனை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இலக்கம்-01
சுப்பர் ஸ்டார் சந்திப்பு
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-.................................
படத்தின் இயக்குநர் பெயர்:-.................................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-.................................
இப்படம் வெளியான ஆண்டு:-.................................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(01.08.93 முதல் 07.8.93 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன்
சிம்மம் - செவ்வாய்
கன்னி - வியாழன்
விருட்சிகம் - இராகு
மகரம் - சனி
இடபம் - கேது
மிதுனம் - புதன், வெள்ளி

2.8.93இல் கன்னியில் செவ்வாய் பிரவேசம். தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் சந்திரன் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன மகிழ்ச்சி, பெரியோர் நட்பு | பகல் 2 மணி |
| திங்கள்- | கௌரவம், புகழ், காாரியசித்தி | காலை 11 மணி |
| செவ்வாய்- | இடப்பெயர்வு, வெளிவட்டாரப்பழக்கம் | காலை 9 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, இனசன மகிழ்ச்சி | பகல் 12 மணி |
| வியாழன்- | பணவரவு, யோசனை மிகுதி | பகல் 1 மணி |
| வெள்ளி- | தூரஇடப்பிரயாணம், செலவு மிகுதி | பகல் 3 மணி |
| சனி- | காரியசித்தி, தருமச் செய்கை | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப்பிரயாணம், உல்லாச வாழ்க்கை | காலை 9 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, வீண்பிரயாசம் | பகல் 3 மணி |
| செவ்வாய்- | சரீர நோய் நீங்கல், இடமாற்றம் | பகல் 2 மணி |
| புதன்- | எடுத்த காரியம் முடிவுறல், இல்லமகிழ்ச்சி | பகல் 12 மணி |
| வியாழன்- | குடும்பத்தில் வீண் பிரச்சனை, உறவினர் சஞ்சலம். | காலை 11 மணி |
| வெள்ளி- | துன்பங்கள் மறைதல், அமைதியான வாழ்க்கை | காலை 9 மணி |
| சனி- | காரியசித்தி, பணவரவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அரசவிரோதம், தேகசுகமேன்மை. | காலை 10 மணி |
| திங்கள்- | பொன்பொருள் சேர்க்கை, புதியோர் சகவாசம். | பகல் 2 மணி |
| செவ்வாய்- | கௌரவம், புகழ், மேன்மை காரியஈடுபாடு. | பகல் 1 மணி |
| புதன்- | மனப்யம், வீண் பிரயாசம். | பகல் 12 மணி |
| வியாழன்- | பலவித நன்மை, காரியசித்தி | பி.ப 3 மணி |
| வெள்ளி- | எதிர்பார்ப்புக்கள் வெற்றி உறவினர் வருகை | காலை் 11 மணி |
| சனி- | செலவு மிகுதி கடன்படல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | குடும்ப மகிழ்ச்சி, சத்துருவால் வெற்றி. | பகல் 2 மணி |
| திங்கள்- | இல்லத்தில் செலவினங்கள், வீண் பிரயாசம். | பகல் 3 மணி |
| செவ்வாய்- | வாக்குக் கலகம், சரீர பலக்குறைவு. | பகல் 1 மணி |
| புதன்- | காரியசித்தி, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| வியாழன்- | உறவினர்பகை, வீண்சஞ்சலம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வெளியிடப்பிரயாணம், செலவுமிகுதி. | காலை 11 மணி |
| சனி- | உல்லாசப்பேறு, ஊரார் போற்றல். | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியானுகூலம், கௌரவம். | காலை 10 மணி |
| திங்கள்- | பகைதீரல் கடன்பயம் தோன்றல். | காலை 11 மணி |
| செவ்வாய்- | முக்கிய காரியம் தடைப்படல், கவலை. | காலை 10 மணி |
| புதன்- | பெண்களால் தொல்லை, வீண்பழி கேட்டல். | காலை 9 மணி |
| வியாழன்- | புகழ்,கீர்த்தி, செல்வாக்கு அதிகரித்தல் | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கல், தூரச் செய்தியால் நன்மை. | காலை 10 மணி |
| சனி- | செலவு கட்டுக்கடங்கல், வீண் யோசனை. | பகல் 2 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூசம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உஷ்ணமிகுதி தேகத்தில், பொருள்வரவு | காலை 9 மணி |
| திங்கள்- | மனைவியால் சஞ்சலம், குடும்பத்தில் செலவு மிகுதி | காலை 11 மணி |
| செவ்வாய்- | வீண்பழிகேட்டல், அகால போசனம் | காலை 7 மணி |
| புதன்- | கௌரவம், புகழ், உயர்வு, காரியசித்தி. | பகல் 1 மணி |
| வியாழன்- | கல்வி விருத்தி, காரியத்தில் தடைகள். | பகள் 12 மணி |
| வெள்ளி- | வெளியிடப்பிரயாணம், வீண் செலவு. | பகல் 2 மணி |
| சனி- | சமாதான வாழ்வு, தாரசுகம் | பகல் 1 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரியங்களில் தடை | காலை 9 மணி |
| திங்கள்- | பதவி உயர்வு, பாராட்டு | பகல் 1 மணி |
| செவ்வாய்- | அன்னியர் நட்பு, காரியசித்தி | பகல் 2 மணி |
| புதன்- | உறவினர் வருகை, செலவு மிகதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | தூரஇடப் பிரயாணம், வீண் அலைச்சல் | காலை 10 மணி |
| வெள்ளி- | குடும்ப மகிழ்ச்சி, ஆரோக்கியம். | காலை 9 மணி |
| சனி- | செலவினால் மனக் குழப்பம், வீண் சகவாசம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-8

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப்பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நன்மைகள் சேரல், தெய்வதரிசனம். | காலை 10 மணி |
| திங்கள்- | இல்ல மகிழ்ச்சி, காணி,பூமி, பிரவேசம் | காலை 9 மணி |
| செவ்வாய்- | வெளிவட்டாரப்பழக்கம், காரியசித்தி | பகல் 2 மணி |
| புதன்- | மனக்கவலை நீங்கல்,மறைமுக எதிர்ப்பு. | பகல் 1 மணி |
| வியாழன்- | துன்பங்கள் வாட்டும், தூரச்செய்தியால் நன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- | தெய்வவழிபாடு, தீராத நோய் விலகல். | பகல் 12 மணி |
| சனி- | தேக மெலிவு வீண் அலைச்சல். | காலை 8 மணி |

அதிஷ்டநாள் - புதன் அதிஷ்ட இலக்கம்-9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், புகழ், காரியநன்மை. | காலை 8 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, புதியோர் நட்பு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | தனலாபம், வெளியிட உதவி. | பி.ப. 2 மணி |
| புதன்- | உயர்ச்சி, தேகசுகநன்மை. | பகல் 1 மணி |
| வியாழன்- | அறிஞர் நட்பு, ஆரோக்கியவாழ்வு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | உதவி சேரல், உபத்திரம் குறைவு. | காலை 11 மணி |
| சனி- | வெளியாரால் உதவி, வீண்பகை, மறைதல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், இல்ல மகிழ்ச்சி. | பகல் 2 மணி |
| திங்கள்- | பொருள்வரவு, இனசனக்கொண்டாட்டம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | தூரத்து உறவினர் ஒருவரால் தொல்லை, வீண்பயம். | காலை 10 மணி |
| புதன்- | எடுத்தகாரியம் வெற்றி, சினேக மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வியாழன்- | பாராட்டு, உத்தியோக மேன்மை | காலை 11 மணி |
| வெள்ளி- | குடும்ப மனஸ்தாபம், அன்னியரால் உதவி. | பகல் 1 மணி |
| சனி- | வீண்பிரயாசம், செலவுமிகுதி. | பகல் 2 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, உதவி. | பகல் 1 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியசித்தி. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- | எண்ணங்கள் மிகுதி, புதிய நன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- | வெளியாரால் தொல்லை, வீண்பிரயாசம் | காலை 10 மணி |
| வியாழன்- | பாராட்டு, பலவித பேறு கிடைத்தல். | காலை 11 மணி |
| வெள்ளி- | தூரஇடச்செய்தி நன்மை, துயர் நீங்கல். | காலை 9 மணி |
| சனி- | கடன்பயம் , காரியக்கேடு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உடல்சுகயீனங்கள், உள்ளத்தில் தெளிவு. | காலை 10 மணி |
| திங்கள்- | பணவரவு, காரியசித்தி | காலை 11 மணி |
| செவ்வாய்- | கௌரவம், புகழ், தேகசுகம் அதிகரிப்பு. | காலை 7 மணி |
| புதன்- | மறைமுக நோய் அதிகரிப்பு, பயம். | காலை 10 மணி |
| வியாழன்- | பாராட்டு, வெளியாரால் நன்மை. | காலை 9 மணி |
| வெள்ளி- | அன்னியர் உதவி, மனப்பயம் நீங்கல். | காலை 11 மணி |
| சனி- | செலவுமிகிதி, குறைகேட்டல். | பகல் 2 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நம்மூர் மாதிரித்தான் பாருங்கோ அமெரிக்காவிலும்!

அறிவியலில் இன்று உச்சாணிக் கொம்பிலிருக்கும் அமெரிக்கர்கள் கண்ணூறினால் ஏற்படும் விளைவுகளையிட்டு இன்றும் பயந்து நடுங்குகின்றனர். பிரபல மானிடவியல் ஆய்வாளரான டாக்டர் ஜோன் றொபேட்ஸ் என்பவர் "த ஈவில் ஐ" என்ற நூலில் கண்ணூறினால் ஏற்படும் சாபக்கேடுகளின் பயங்கர விளைவுகளையிட்டு விபரமாக எழுதியுள்ளார். "உலகளாவிய நிலையில் பெரும்பாலானவர்கள் கண்ணூறின் கொடுமை பற்றிப் பயந்துகொண்டுள்ளனர்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலியில் கொடிய கண்ணுள்ளவர்களின் பார்வை தங்கள் இல்லங்களை சாபத்துக்குள்ளாக்கி விடாதிருக்க வீடுகளின்மீது சிலுவை அடையாளமிட்டுள்ளனர். கிரேக்க நாட்டவர்கள் யன்னல்கள், கதவுகளுக்கு நீல வர்ணம் பூசிக்காத்துக் கொள்ளுகின்றனர். தங்கள் குழந்தைகள் மீது கொடிய கண்கள் பட்டுத் தீங்கு ஏற்படாதிருக்க பச்சை முட்டைக் கருவை குழந்தைகளின் கண்களுக்குத் தடவி மெக்சிக்கோ மக்கள் காத்துக்கொள்ளுகின்றனர். ரியுனீசிய மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு பழைய-அழுக்கான ஆடைகளையே அணிய வைக்கின்றனர். குழந்தைகள் அழகான புதிய ஆடைகளுடன் பவனி வந்தால் அவர்கள் மீது யாராவது கண் வைத்துவிடுவார்கள் என்று அஞ்சுகின்றனர். இத்தகவல்களை டாக்டர் றொபட்ஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.


இது ஒரு மூடநம்பிக்கை என்று கருதப்பட்டாலும் படித்தவர்கள் கூட இதில் நம்பிக்கை வைத்துள்ளனர். நல்ல அழகான வீட்டையோ, சிறப்பான வியாபாரம் நடைபெறும் வர்த்தக நிலையத்தையோ கண்டு பொறாமைப்படும் ஒருவரால் பெரும்பாதிப்பு ஏற்படும் என்ற நம்பிக்கை சர்வசாதாரணமாக எல்லாரிடமும் இருக்கவே செய்கிறது.

இக்கருத்தினை டாக்டர் கிளெறன்ஸ் மெலோனி கூறுகிறார். "மெக்சிக்கோவிலும் பிலிப்பைன்சிலும் சிறுவர்களே கொடியோரின் கண்களால் சாபத்துக்குள்ளாகின்றனர். மத்திய தரைக்கடல் பிராந்திய நாடுகளிலுள்ளவர்கள், குழந்தைகள் மட்டுமல்லாமல், சகல வயதினருமே கண்ணூறு சாபத்துக்குட்படுகின்றனர் என்று நம்புகின்றனர். குறிப்பாக வசதியான செல்வந்தர்கள், அழகானவர்களைக் காணும் பலர் பொறாமைத் தீயினால் வேகும்போது அவர்களுடைய கண்களில் ஏற்படும் பொல்லாத வீச்சு, தீய விளைவுகளை தாக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தி விடுகிறது" என்கிறார் அவர்.

மற்றுமொரு மானிடவியல் வல்லுநரான டாக்டர் வில்லா அப்பெல், "கெட்ட பார்வையால் தாக்குறும் பலர் சில சமயங்களில் தலைவலியை அனுபவிக்கின்றனர். பலர் சோர்ந்து தளர்ந்து விடுகின்றனர்" என்கிறார்.

வயல்களிலும் தோட்டங்களிலும் சோளக் கொல்லைப் பொம்மைகள் ஆரம்பக்காலத்தில் வைப்பது கெட்ட கண்ணூறிலிருந்து தங்கள் பயிர்களைக் காப்பதற்கே என்று கூறும்டாக்டர் றொபட்ஸ் பறவைகளையோ மிருகங்களையோ, பயிரைப் பாழடிக்காமல் பார்த்துக் கொள்வதற்காக அல்ல என்று தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆனை முகம் அல்ல ஆணிமுகம்!



முகம் தலை முழுவதும் ஆணி குத்திக்கொண்டு தோன்றுகின்ற விசித்திரமான பாத்திரம் ஆங்கிலப்படமொன்றில் வருகிறதாம்.

தந்திரக் காட்சியுமில்லை. தலையைச் சுத்தும் வேலையும் இல்லை. உண்மையாகவே தனது முகத்திலும் தலையிலும் பல ஆணிகளை அடித்துக் கொண்டு நடித்தாராம் ஒரு நடிகர். பெயர் ஹக் டக் பிராலி. இரும்பு மனிதனோ அல்லது பலகை மனிதனோ? என்றாலும் கலையார்வத்துக்கு ஒரு சபாஷ் போடலாம்.

## வ்ரவ்.வாவ்.வாவ்
## ஒன்றரைக் கோடியில் ஒரு புத்தகம்!

ஓல்ட் இஸ் கோல்ட்.
புராதனமான பொருட்களுக்கு பெறுமதி அதிகம்.
கி.பி 13ம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட பைபிள் புத்தகம் ஒன்றை பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் வாங்கியுள்ளார்.
இலண்டனில் வாங்கப்பட்ட அந்த பைபிள் புத்தகத்திற்கு அவர் கொடுத்த பணம் அவரைப் பொறுத்தவரை அதிகமில்லை. ஆக ஒரு ஒன்றரைக்கோடி ரூபாய்கள் தான்!
பழையனவற்றை சேகரிப்பது அவரது பொழுது போக்கு. அது சரி பணம் போற போக்கைப் பாருங்கோ.

அமெரிக்க ஜனாதிபதிகளில் புதிய சாதனை படைத்திருப்பவர் கிளின்டன். பதவி ஏற்ற ஐந்து மாதங்களில் அவருக்கு குவிந்துள்ள கடிதங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமோ? வாயைப் பிளக்க வேண்டாம். 35 இலட்சம். மட்டுமல்ல அவர் செல்லமாக வளர்க்கும் செல்சியா-காளில் என்ற இரு பூனைகளுக்கும் கடிதங்கள் வருகிறதாம்.

பூனைகள் பாவம் பதில் போட முடியாதவை என்பதால் அவற்றின் புகைப்படங்களை பதிலாக

## நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும்

தினவ்ரவு 26 ஆயிரம் கடிதங்கள்.

பதில் போடுவதற்கென்றே வெள்ளை மாளிகையில் 200 எழுத்தாளர்கள் ஊதியம் கொடுத்து அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இதில் உள்ள ஆச்சரிய விசயம் என்னவென்றால்-கிளின்டனுக்கு அனுப்பி வைக்கிறார்களாம்.

பூனைகளுக்கும் யோகம்தான். இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சவுக்கியமே. கருடன் மட்டுமல்ல கிளின்டனின் மாளிகையும் அப்படித்தான் சொல்கிறது.

## தகவல் பெட்டி

## கானக வாசிகள்தான்-ஆனால் கணக்கியலில் நிபுணர்கள்!

பிறேஸில் நாட்டின் மேற்குப் பிரதேசத்திலுள்ள காடுகளில் வாழும் ஒரு வகை இன மக்கள் நவீன உலகத் தொடர்பு எதுவு மற்றவர்களாக இருந்தபோதிலும் அறிவு மேம்பட்டவர்களாக இருக்கிறார்கள் என பிரசித்தி பெற்ற மானிடவியல் ஆய்வு நிபுணர் டாக்டர் பிலிப் ஜுனட் கூறுகிறார்.

கானகங்களில் வாழும் பெரும்பாலான மனிதர்கள் மொழி அறிவற்றவர்களாக இருந்த போதிலும் பிரேஸிலில் காணப்படும் இத்தகைய மனித வர்க்கத்தினர் சிறந்த அறிவாளிகளாக இருப்பதாக டாக்டர் பிலிப் கூறுகிறார். தங்களுக்கென மொழியையும் ஏற்படுத்திக் கொண்டுள்ள இவர்களில் எழுத்தாளர்களும் பெரும் அறிவாளிகளும் காணப்படுவதாக இவர் தெரிவிக்கிறார். கணக்கியலில் நிபுணர்களாகவும் உள்ளனராம்.

என்ன பேசாமல் நாமும் கானகத்திலேயே வாழலாம் என்று தோன்றுகிறதா? பொறாமைப் படாதீர்கள் - ஃபிளீஸ்.

## உபதேசம் மறந்து விபச்சாரம் செய்தார்
## போனது வேலை - வந்தது வெட்கம்!

அடர்த்தியான கூந்தல். குதியுயர்ந்த பாதணி. அங்கங்கள் தெரியும் சின்னதான சட்டை. உதட்டுச்சாயம், விழிகளுக்கு கருவர்ணம்- கண்டோரை கண்சிமிட்டி அழைத்துக் கொண்டிருந்தாள்.

பெயர் என்னவென்று கேட்டால் 'ஜிஞ்சர்' என்று சொன்னாள். பெயரே ஒரு மாதிரித்தான்.

திடீரென்று எங்கிருந்தோ தோன்றிய பொலிசார் அவளை மடக்கிப் பிடித்தனர்.

என்னே ஆச்சரியம்! அவள் அவனாகிவிட்டாள்.

பெண் வேடமிட்டுக்கொண்டு காளையருக்கு வலைவீசியவனை மாறுவேடமிட்டு வந்தே பொலிசார் மடக்கினர்.



ஜெஃப் மெக்கல்லியின் சொந்த் முகம் கீழே பெண் வேசம் தரித்த முகம் மேலே காணப்படுகிறது.

வேடம் போட்டு மோக வலை வீசியது யார் என்று அறிந்தால் கோபப்படுவீர்கள்.

அது ஒரு பயிருக்குள் வளர்ந்த களை.

மத போதகராக இருந்த சங்கைக்குரிய ஜெஃப் மெக்கெல்லி என்பவர்தான் அந்தக்களையாகும்.

தன்னை மடக்க மாற்றுடையில் வந்த பொலிசாரிடம் 150 டொலர் பேரம் பேசினாராம்.

31 வயதான அந்த போதகருக்கு இப்போது வேலை காலி.

அவர் போதனையைக் கேட்டு நேசித்தவர்கள் அவர் போன பாதையை அறிந்த பின் பரிகசிக்கிறார்கள். சபிக்கிறார்கள். தேவையா இது?

பயிர்களுக்குள் வளரும் களைகளால் நற்பயிர்களுக்கும் பாதிப்பு.

## இரத்தம் சிந்தும் பொம்மைகள்!

தைவான் பொம்மை தயாரிப்பாளர்கள் புதுமையான பொம்மைகளைத் தயாரிக்க ஆரம்பித்துள்ளனர். மோட்டார் விபத்தில் காயம்பட்ட பொம்மைகள்,

யுத்தத்தில் படுகாயமடைந்த பொம்மைகள், கத்திக்குத்து, துப்பாக்கிச் சூடு ஆகியவற்றால் காயமடைந்த பொம்மைகள் என்று பலரகமான பொம்மைகளை தைவானிலுள்ள சாங்வொண்டர் பொம்மை உற்பத்தியாளர்கள் விரைவில் சந்தைக்கு அனுப்பவுள்ளனர்.

இந்த பொம்மைகள் கண்களை மூடித்திறக்கவும் காயங்களால் இரத்தம் வடிவத்னால் வேதனைப்பட்டு இறக்கவும் செய்கின்றனவாம்.

இவற்றின் உயரம் 12அங்குலம்.

ஆண் பெண் என்று இருபாலிலும் பொம்மைகளுண்டு. இவற்றின் காயங்களில் வடியும் இரத்தப் பெருக்கை நிறுத்தி காயத்துக்குக் கட்டுப்போட்டு

சாகாமல் காக்க வேண்டிய பொறுப்பு இப்பொம்மைகளை வாங்குபவர்களைப் பொறுத்தது என்று இதன் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர்.

"வன்முறைச் சம்பவங்களை இன்றையச் சிறுவர்கள் தொலைக்காட்சிகளில் அன்றாடம் காண்கின்றனர். ஆகவே இப்பொம்மைகள் மீது அனுதாபம் காட்டி அவற்றைப் பாதுகாக்கவும் அவர்கள் வழி கண்டுகொள்ளட்டும்" என்று நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் கூறுகிறார்.

## 430 சிகரெட்டை ஒரே வாயில்!



430 சிகரெட்டுகளை வாயில் திணித்துள்ள ஸ்டீவன்ஸ்.


## முடியை வைத்து முகவரி காணலாம்!



உங்கள் தலை முடி ஒன்று உங்களைப் பற்றிய பல தகவல்களைத் தரவல்லது என்று ஒரு நிபுணர் கூறுகிறார். நியூட்ரோன் ஒளிக்கதிர் வீச்சினை ஒரு முடியின் மீது பாய்ச்சுவதன் மூலம் பின்வரும் தகவல்களைப் பெறமுடியும் என்று பிரான்சைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் டாக்டர் ஜீன் பிள்ளை கூறுகிறார்.

* நீங்கள் சுற்றாடல் மாசடையும் தன்மை அதிகம் உள்ள நகரத்தில் வசிப்பவரா அல்லது சாதாரண கிராமப்புறத்தவரா?
* உங்கள் உணவு எத்தகையது-துத்தநாகச் சத்து அதிகமாகக் கொண்ட உணவை அதிகமாக உண்ணுகிறீர்களா?
* ஒரு தொழிற்சாலையில் அல்லது ஒரு பெட்ரோல் குதத்தில் வேலை செய்கிறீர்களா? மற்றும் அசாதாரண பொருட்களுடன் தொடர்புடைய தொழிலைப் புரிகின்றீர்களா?
* நீங்கள் எத்தகைய சவர்க்காரம் அல்லது ஷாம்பூ தலைக்குப் பாவிக்கின்றீர்கள் என்பன போன்றவற்றையெல்லாம் இந்தப் பரிசோதனையில் கண்டுகொள்ள முடியும் என்கிறார் டாக்டர் பிள்ளை.

## இறக்குமதித் சிரிப்பு



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—5



-எழுதுவது ரசிகன்-

'குலாம்ஷா'

என்று குயில் குரலில் கூப்பிட்டவள் முகம் பார்த்து அதிர்ந்தார் குலாம்ஷா.

'இவள் ரம்யா'

குலாம்ஷாவின் மனத்திரையில் சுத்தமான பிரிண்டில் வர்ணக்கலரில் நேற்றுப் பார்த்த புகைப்படம் தெரிந்தது.

அது டி.ஐ.ஜி டென்சில் காட்டிய புகைப்படம்.

குற்ற உலகின் வித்தைகள் தெரிந்த ராணி என்று டி.ஐ.ஜியால் சொல்லப்பட்டவள். மடக்கப்பட்டே ஆக வேண்டியவள் என்று குறிக்கப்பட்டவள்.

பெயரைப் போலவே ரம்யா ரம்மிய மானவளாக இருந்தாள். ஒரு நொடிப் பார்வையில் மின்னலென வசீகரம் வீசினாள்.

"குறிவைக்க காத்திருந்த மான் வேடனைத் தேடி அருகில் வந்து அழகு காட்டி அழைக்கிறதென்றால் " குலாம்ஷா அதிர்ந்து பின் வியந்த நொடிகளில் தான் அந்த விபரீதம் நிகழ்ந்தது.

ஸீபா இன் நைற் கிளப்பின் விளக்குகள் அணைத்தும் அணைந்து போயின.

மெல்லிய இசையும் வாய்மூடிக் கொண்டது.

குலாம்ஷாவுக்குள் இருந்த மற்றொரு குலாம்ஷா உசாரானார்.

"விபரீதம் உணர். ஆயுதம் எடு. எதிரியை மடக்கு- சுவர் ஓரமாய் நகர்ந்து பாதுகாப்பான நிலை எடுத்து நில். எதிர்வரும் தாக்குதல் முறி" குலாம்ஷாவுக்குள்ளே சகல உணர்வுகளும் உயிர்கொண்டன.

ஜீன்சின் இடது புறமாய் செருகியிருந்த பிஸ்டலை உருவ குலாம்ஷாவின் வலக்கரம் செல்லவும்-

வேறு ஒரு கரம் அவரது பிஸ்டலை உருவவும் சரியாக இருந்தது. இருளில் குறிபார்த்து பக்கவாட்டில் கால் உயர்த்தி உதைத்தார். பட்டிருந்தால் எதிரே உள்ள ஆள் படுத்திருக்க வேண்டும். அப்படியொரு சைட்கிக். உபயம் கராத்தே பயிற்சி.

உதைத்த இடத்தில் யாரும் இல்லை. காற்றுத்தான் இருந்தது.

பெண் குரல் ஒன்று சிரித்தது. ரம்யாதான் அது என்று புரிந்தது. அவள் பேசினாள்.

"மிஸ்டர் குலாம்ஷா துள்ளாதீர்கள். களத்தில் துள்ளலாம். கட்டிலில் துள்ளலாம். பயன் உண்டு. இப்போது நான் சொல்வது கேட்டு நடந்தால் என் பிஸ்டல் சத்தம் போடாமல் இருக்கும். உபயோகமான ஒரு ஆண்மகனை விரயமாக்காமல் இருக்கும்" இருளில் முகம் தெரியாது போனாலும் அவள் சொன்னதில் தெரிந்த உறுதி புரிந்தது.

பணிவது புத்திசாலித்தனம். சிந்திக்கவும் செயல்படவும் அவகாசம் எடுத்துக் கொள்வது விவேகம்.

"என்ன செய்ய வேண்டும்" கேட்டார்.

"நேரத்தை வீணாக்காமல் நான் சொல்வது போல் நடக்க வேண்டும்."

"சொல்....அழகான பெண்ணே சொல். நான் என்ன செய்யவேண்டும்"

அபாயத்தின் மத்தியிலும் குலாம்ஷாவின் நிதானமும், பேச்சில் வந்த ரசனையும் ரம்யாவை ஆச்சரியப்படுத்தின.

"அப்படியே இடது புறம் திரும்பி வாயில் நோக்கிச் செல்லுங்கள். சாகசம் காட்டும் எண்ணங்களை மூட்டை கட்டி வையுங்கள். பின்னர் உபயோகப்படுத்தலாம்."

சொல்லிக் கொண்டே பிஸ்டலால் முதுகில் அழுத்தினாள். குலாம்ஷா முன்னே நகர......

'ஒரு நிமிஷம்' சொல்லிக் கொண்டே பின்புறமாய் நின்றபடி மறுகரத்தால் அவர் உடல் தடவி வேறு ஆயுதம் உண்டா என்று தேடினாள். அப்படித்தேடும் போது முதுகில் மெத்தென்று மோதிய இளமை உணர்ந்தார். கம்பீரமான மென்மை.

'சரி செல்லுங்கள்'

உத்தரவிட்டாள். அவர் முன்னால் செல்ல பிஸ்டலை முதுகை விட்டு எடுக்காமல் பின்னால் ஒட்டிய படியே ரம்யாவும் நகர்ந்தாள்.

வாயிலில் வாகனம் தயாராக இருந்தது. தெருவிளக்கின் ஒளியில் பளீரென்ற வெள்ளைநிற வான் தெரிந்தது.

'உள்ளே ஏறுங்கள்'

ஏறினார். ரம்யாவும் கூடவே ஏறி அவர் எதிரில் அமர்ந்தாள். கையில் பிஸ்டல் விழிப்போடு குறிபார்த்தபடி மின்னியது. 9 எம்.எம். பிஸ்டல். செக்கஸ் லோவிய தயாரிப்புத்தான். குலாம்ஷா குறிப்பெடுத்துக் கொண்டார்.

வான் சீறிக் கிளம்பியது. அடுத்தது என்ன- குலாம்ஷா காத்திருந்தார்.

பின்புறம் ரம்யா தவிர வேறு யாருமே இல்லை.

முன்புறம் ரைவிங் சீற்றில் அவன் அமர்ந்திருந்தான்.

கிளப்பின் உள்ளே நுழைவதற்கு முன்னர் சந்தேகமாய் அவர் பார்வையில் விழுந்தவன்.

தனது மூன்றாவது கண்ணை குலாம்ஷா பாராட்டிக்கொண்டார்.

அவனுக்கருகே கறுப்பு சேட் அணிந்து இருந்தவனின் முகம் தெரியவில்லை.

"என்னை அழைத்து வர இவளை மட்டும் நம்பி அனுப்பியிருக்கிறார்கள். சோ.....இவள் மீது....இவள் திறமைமீது அத்தனை நம்பிக்கை"

மனசுக்குள் நினைத்தபடி எதிரே இருந்த ரம்யாவை பார்வையால் அலசினார்.

ரம்யாவும் அவரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தாள்.

நீல நிற இறுக்கமான ஜீன்சில் வாழைத்தண்டுகள் இரண்டும் திணிக்கப்பட்டு சிக்கியிருந்தன. மெல்லிய நீலத்தில் ரீசேட் அணிந்திருந்தாள். இளமைகள் தாராளமாக விழிகளுக்கு விருந்து கொடுத்தன. மழை பெய்த்தமையால் உடைந்து போன பள்ளம் ஒன்றில் வாகனம் விழுந்து நிமிர அதற்கேற்றபடி அழகுகள் குலுங்கின. குலாம்ஷாவும் குலுங்கினார். வான் நின்றது. வந்த வழியை விழிகளுக்குள் வாங்கிக் கொண்டதில் நின்ற இடம் வெள்ளவத்தையின் கடற்கரைப்புறம் என்று புரிந்தது. சில்லென்ற காற்று எப்படியோ புகுந்து முகத்தில் முத்தமிட்டு சென்றது.

"இறங்குங்கள்" ரம்யா சொன்னாள்.

இறங்கினார்.

ஆள் நடமாட்டமே இல்லாத மயானம் போல் இருந்தது.

அவர் இறங்கவும் கறுப்புக்கார் ஒன்று அருகில் வந்து கிறீச்சிட்டு நின்றது.

பின் கதவு திறந்தது. குலாம்ஷாவின் முதுகில் கரம் பதித்து ரமயா உள்ளே தள்ளினாள். தானும் திணிந்தாள்.

■

மதுமிதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு புறம் சந்தோசமாகவும் இருந்தது.

இரவு முழுக்க தூங்கவில்லை. விடிந்ததும் விரைந்து காலைத் தினசரிகள் புரட்டினாள். பரபரப்பாய் தேடினாள்.

"ஹோட்டல் ராக்கியில் கொலை"

என்ற செய்தி இல்லவே இல்லை.

எப்படி இது? ஒருவேளை பிணத்தை அப்புறப்படுத்தியிருப்பார்களோ?"

"சாத்தியமா அது? ஹோட்டலில் இருந்து வெளியே பிணம் தூக்கிக் கொண்டு செல்வது சாத்தியமா?"

மனசுக்குள் குழம்பினாள். நேற்றைய மயக்கத்தில்-மதுமிதாவின் மார்பில் முகம் பதித்துக்கொண்ட கிறக்கத்தில் சந்தோஷ் தன் தனிப்பட்ட போன் இலக்கம் கொடுத்திருந்தான்.

விரைந்து போய் இலக்கம் அழுத்தி ரிசீவரை காதுக்கு கொடுத்து, மறுபுறம் ரிங்ரிங்போய்க் கொண்டிருக்க காத்திருந்தாள்.

தூக்கப்பட்டது மறுமுனை.

"ஹலோ யார் வேண்டும்"

பலவீனமாய் ஒரு பெண் குரல் கேட்டது.

"மிஸ்டர் சந்தோஷ்"

மறுமுனை சொன்ன பதிலால் மதுமிதா சிலையாய் நின்றாள்.

மதுமிதா சிலையாய் நின்ற நொடிகளில் -அவள் பின்புறமாய் அந்த உருவம் நகர்ந்து வந்தது.

மதுமிதாவுக்கு எந்தச் சந்தர்ப்பமும் கொடுக்காமல் குளோரபோம் நனைத்த கைக்குட்டையால் அவள் முகத்தைப் பொத்தியது. எதிர்பாராத மதுமிதா மயக்கமாய் சரிய- அவளை கைகளில் ஏந்தி ஒரு பொம்மையைப் போல் தூக்கிக் கொண்டு உள்ளே அறையில் தெரிந்த கட்டில் நோக்கி சென்றது.

அந்த நேரத்தில் ....

மதுமிதாவின் வீட்டு வாசலில் வந்து பொலிஸ் ஜீப் நின்றது.

டி.ஐ.ஜி டென்சில் கம்பீரமாய்- உயரமாய் இறங்கி வர- முன்னாள் நின்ற வாட்ச்மேன் பயமாய் மரியாதையாய் கேட் திறந்து விட்டான்.

டக்..டக்..டக்..சீரான நடை.

டி.ஐ.ஜி. மதுமிதாவின் வீட்டு வாயில் கதவில் சிவப்பாய் இருந்த கோலிங் பெல்லில் கட்டைவிரலால் அழுத்தினார்........

**இன்னும் வரும்.**

## அதிகமாய் பெண்களையே கவிஞர்கள் வர்ணிப்பதேன்?

### சிந்தியா பதில்கள்



மை டியர் சிந்தியா! மதுவுக்கும், மாதுவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

ச. ஸ்டிபன் ராஜ்
ஜா-எல.

*-ர-*

■

விஜயகாந்த் பற்றி சில குறிப்புக்கள்?

எப்.எம். பெனடிக்ற்
கிருலப்பனை.

*முன்னணி ஹீரோக்களில் ஒருவர். தமிழ் மீது காதல் கொண்ட மதுரைக்காரர்.*

■

டியர் சிந்தியா! நடிகை ராதா தற்போது திரைப்படங்களில் நடிக்கிறாரா?

செல்வி. நிர்மலா முருகையா
பண்டாரவளை.

*படிக்கிறார். குடும்பப் பாடம்.*

■

காவிரி நீர் பிரச்சனைக்காக உண்ணாவிரதம் இருந்த தமிழக முதல்வரின் வேண்டுகோள் நிறைவேறுமா?

கு. விக்கினேஸ்வரன்
ஹட்டன்.

*அப்படித் தெரியவில்லை. உடல் கொஞ்சம் குறைந்திருக்கிறதாம்.*

■

டியர் சிந்தியா! தமிழ் ஈழம் கிடைக்குமா? உமது கருத்தென்ன?

எம். சிவகுமார் திலிப்பன்ராஜ்
மாத்தளை.

*போகிற போக்கில் தமிழர்களே இருப்பார்களா என்று யோசனை வருகிறது. நீர் என்னடாவென்றால்.*

■

ஹலோ சிந்தியா! உங்களுக்கு காதல் அனுபவம் உண்டா?

இஸ்மாயில் பர்வீன்
கண்டி.

*எவ்வாறான பதிலை எதிர்பார்த்து இப்படியொரு கேள்வி பர்வீன்.*

■

மை டியர் சிந்தியா! பசுத்தோல் போர்த்திய மனிதர்களைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சரவணேஸ் டெயிசி
கலவான.

*அவர்களைப்பற்றி நினைப்பதை விட போர்த்தியுள்ள பசுத்தோல் அவர்களால் பாவப்படுகிறதே என்று நினைப்பேன்.*

■

டியர் சிந்தியா! கவிஞர்கள் ஏன் அதிகமாக பெண்களை வர்ணிக்கிறார்கள்?

ஹாரிஸ். மு. பாஹிர்
பேருவளை.

*வர்ணிக்க வசதியானவையும் - வசீகரமானவையும் உள்ள பக்கம்தானே உள்ளம் போகும்.*

■

எமது அடுத்த ஜனாதிபதி யார்?

எஸ். எம். பாய்தீன்
திரப்பளை.

*நிச்சயமாக நீர் இல்லை.*

■

கண்ணுக்கு மையழகு- கவிதைக்கு பொய்யழகு, கனவுக்கன்னி குஸ்பூவுக்கு எது அழகு?

செல்வி. சுல்பிகா ராசிக்
ராஜகிரிய.

*ஃபிளீஸ் வெயிட். வைரமுத்த அதை அறியாமல் விடமாட்டார். ஆராய்ச்சி நடக்கிறது. அமைதி. அமைதி.*

■

சமத்துவம் எங்கே காணப்படுகிறது?

என். ஹில்பாஸ்
கல்பிட்டி.

*எங்கே ஒருவர் மற்றவரை ஆதிக்கம் செய்யவில்லையோ அங்கே.*

■

சிந்தியா! உங்களுக்கு பிடித்தது எது? பிடிக்காதது எது?

செல்வி றிஸ்வானா ஏ. ஹமீட்
அக்குறணை.

*பிடித்தது உங்களைப் போன்றவர்கள் கேள்விகளுக்கு பதில் சொல்வது. பிடிக்காதது - நடிக- நடிகையரின் முகவரி தேடி சொல்லிக்கொண்டிருப்பது.*

■

பதில் சொல்ல முடியாதது எது?

வீ. ரஞ்சன்
கொழும்பு-6.

*பதில் தெரியாத கேள்வி.*

■


வாழ்வில் மிகவும் சிக்கலான விஷயங்கள் என்னென்ன சிந்தியா?

டபிள்யூ. எம். ஜவாஹிர்
ஹொரவபொதானை.

*வாழ்க்கையே ஒரு சிக்கலான விசயம்தானே ஜவாஹிர்.*

■

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஏ.எச்.எம்.பரீட்
வயது: 21
முகவரி: 64/44, போனா விஸ்டா
முகத்துவாரம்,
கொழும்பு-15.
பொழுதுபோக்கு: வாசிப்பது, விளையாட்டு, கடிதங்கள், சித்திரங்கள் வரைவது, பாடல் கேட்பது.



பெயர்: யோகநாதன் கலைவாணி
வயது: 22
முகவரி: 87/4, பீற்றர்மென்டிஸ் வீதி,
குடப்படுவ,
நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: ரி.வி. பார்த்தல், கதைப் புத்தகங்கள் வாசித்தல், வானொலி கேட்டல், செல்லப் பிராணியுடன் விளையாடுதல்.



பெயர்: எஸ். விஜயகுமார்
வயது: 26
முகவரி: 5ம் கட்டை, சைனாபே,
திருகோணமலை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை எழுதுதல்.



பெயர்: செல்வராஜா
வயது: 20
முகவரி: இல. 5, சென் லூர்து வீதி
சிலாபம்.
பொழுதுபோக்கு: கதை, கவிதை எழுதுவது.



பெயர்: செல்லையா தில்லைராஜா
வயது: 22
முகவரி: 21, பாத்திமா ரோட்,
பெரியமுல்லை,
நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

பெயர்: ஏ.ஆர்.எம். ரபீக்டீன்
வயது: 25
முகவரி: 78/1, மசூர் மாவத்தை,
தெம்பிளியாவத்தை,
தர்கா நகர்.
பொழுதுபோக்கு: ரீ.வி. பார்த்தல், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: ஜே. ஜீ. யாழினி
முகவரி: இல. 113/4, ஆறாமய வீதி
தெமட்டகொட
கொழும்பு-9.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: ஜோன்சன் கிருஸ்டி
வயது: 27
முகவரி: டயகம வெஸ்ட் எஸ்டேட்,
டயகம- ஹட்டன்.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, வீடியோ.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# போராட்டம்

அக்குறணை: செல்வி. ஊநீரா அனஸ்



அன்றுதான் அவள் விழித்துக் கொண்டதாய்... பூரணமாக உருவெடுத்துக்கொண்டதாய்..... பிறந்த பயனை அடைந்து கொண்டதாய்..... சந்தோஷித்துப் போனாள். இருண்ட நினைவுகள் எல்லாம் பூப்படைந்து விட்டதாய் மனதை நிறைத்துக்கொண்டு மகிழ்ந்தாள். அந்த மகிழ்ச்சியில் ஓடி ஓடி வீட்டு வேலைகளை எல்லாம் செய்தாள். உமையாவைக் கழுவி பவுடர் போட்டு ஓடிக்கொலோன் தடவி..... புதுச்சட்டை போட்டு அவளைத் தலைக்கு மேல் இரண்டு கைகளாலும் தூக்கிப் போட்டுக் கொஞ்சி-சிரிக்க வைத்தாள். உமையாவும் ப்ரேமாவின் மகிழ்வோடு இணைந்து கொண்டாள். "உமையாக் குஞ்சு... இண்டைக்கு உங்கடை ஆண்டிக்கு இவ்வளவு சந்தோஷம் ஏன் தெரியுமா...?"

ஒ எனக்கே தெரியாமல் இருக்கே... என்றபடி விக்கித்துக் கொண்டாள். அந்த வேகத்தில் உமையாவின் வாயில் "இச்" என்றொரு முத்தம் கொடுக்க அவ்ளது பூப் போன்ற உதடுகளில் ஏற்பட்ட இஸ்பரிஸத்தால் இன்னொரு முத்தம் கொடுத்தாள்.

உமையாவை சிறிய செயாரில் உட்கார வைத்துவிட்டுப் புதுப் பொலிவாய் வீட்டைக் கூட்டினாள். அடுப்பில் காஸைப் பற்றவைத்து அந்த தீச் சுவாலையாய் எரியும் அனைத்து பூர்வீகங்களையும் மறந்து உமையாவிற்கு ரீ தயாரித்தாள். அதில் தானும் கொஞ்சம் குடித்தாள்.

தலையைக் கொஞ்சம் வாரினால் என்னவென்று பட்டது. உடனே சீப்பை எடுத்துக் கொண்டு நிலைக் கண்ணாடிக்கு முன் போனாள். அப்பாடா.... தன் அழகைப் பார்த்து அவளே பொறாமைப் பட்டுக் கொண்டாள். அவளின் மெலிந்த இடைகளுக்கு மேலாக திரண்டு போயிருந்த மார்புச் செழிப்புகளை தனது புறங்கைகளினால் தூக்கிவிட்டு பிராவை இன்னும் சரிபடுத்திக் கூர்மையாக்கினாள். மீண்டும் ஒரு முறை அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தாள்.

"என் ப்ரேமா!

பிரிந்திருந்து வாடியது போதும். பொறுமையாய் இருவரும் அழுது பிரலாபித்தது போதும். நான் இன்னும் ஒரு கிழமையில் காற்றுத் தடவும் உன் மெல்லிடையில் முகம் புதைத்து உன்னைக் கிறங்கச் செய்யப் போகிறேன். ஆம் ப்ரேமா- நான் சுவிற்சர்லாந்திலிருந்து வந்து உன்னையும் இங்கு அழைத்துக் கொண்டு வந்துவிடப் போகிறேன். உன் அங்கிளுக்கு விடயத்தைப் பவ்வியமாக எடுத்துச் சொல்ல இருக்கிறேன். அவர் எங்கள் காதலைக் கட்டாயம் ஏற்றுக் கொள்வார். அது என் பொறுப்பு...."

சசியின் இந்த வரிகள் ப்ரேமாவின் உள்ளத்திலதான் எவ்வளவு கிளர்ச்சியைத் தந்தன.

"ப்ரேமா...."

"என்ன அங்கிள் கூப்பிட்டீங்களா" என்றபடி முன் விறாந்தைக்கு வந்தாள் ப்ரேமா.

"ப்ரேமா என்ன செய்கிறாய்?"

"கபேட்டில் உடுப்புகளை அடுக்குகிறேன் அங்கிள்"

"எந்தக் கபேட்டில் ப்ரேமா?"

"உங்கடை கபேட்டில்தான் அங்கிள்"

"ஓ அதிருக்க இப்ப என் உடுப்புகளிலை இரண்டை உடனடியா அயன்பண்ணிவை செல்லம், நான் கண்டிக்குப் போயிட்டு கொழும்பு வரைக்கும் போக வேணும்"

"சரி அங்கிள்"

அவளுக்கும் அங்கிலுக்கும் இருக்கும் பாசம்தான் எவ்வளவு? அது என்ன அப்படிப் பாசம்- அங்கிள் என்ன சொன்னாலும் ப்ரேமாவிற்கு விருப்பம். ப்ரேமா என்ன சொன்னாலும் அங்கிளுக்கு விருப்பம். அவரின் மனைவி சுவர்ணாவையும் விட அவரது சிறிய மகன் வேதாங்கனையும் விட....

ப்ரேமா... அங்கிளின் முழு இதயத்திலுமே இடம் பிடித்திருந்தாள். சொல்லப்போனால் அங்கிளின் முழு உடலிலும் ஓடும் இரத்த ஓட்டம் போல....ஒரு பிடிப்பு அவருக்கு. ப்ரேமாவும் அதே உணர்வுகளுடன் தான். இந்தப் ப்ரேமா சுந்தரம் அங்கிளோடு சேர்ந்ததே பெரிய கதை.

அன்று காலை அவசர அவசரமாக பயணம் ஒன்றுக்காக சுந்தரம் அங்கிள் வெளியாகிக் கொண்டு கொழும்பு பஸ் தரிப்பு நிலையத்திற்குச் சென்ற போது அந்த பஸ் ஹோல்ட்டில் அழுக்கடைந்த சுவர் ஓரமாக, எத்தனையோ நாள் வாரிவிடப்படாத பரட்டைத் தலையுடன் ஒரு பத்துவயதுச் சிறுமி மயக்கமாகப் படுத்திருந்தாள். ஏனோ தெரியாது சுந்தரம் அங்கிள் அவளைப் பார்த்தவுடனேயே நெஞ்சில் அவள் மேல் ஒரு இரக்கம் பிறந்தது. அவளின் பரிதாப நிலையின் மீது கவலை ஏற்பட்டது. உடனேயே கொழும்புப் பயணத்தை இரத்துச் செய்துவிட்டு அவளுக்கு அருகில்போய் "புள்ளை என்னம்மா...ஏன் இதிலை படுத்திருக்கிறாய்?" எனக் கேட்டார்.

இலேசாகக் கண்களைத் திறந்து "அங்கிள்...எனக்குப் பசிக்குது அங்கிள்" என்று முனகினாள். சுந்தரம் அங்கிளுக்கு இதயமெல்லாம் "சுரீர்" என்று வலித்தது. பசிமயக்கம்தான் அவளை வாட்டுகிறது என்றுணர்ந்தார்.

அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்து எழுப்பி பக்கத்தில் இருந்த தண்ணீர்ப் பைப்பில் கை முகம் கழுவச் செய்தார். கூடியிருந்த பிரயாணிகள் அவரைப் பார்த்து தமக்குள் ஏதோ பேசிக்கொண்டதை அவர் பொருட்படுத்தவே இல்லை. குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவியவுடன் புதுத் தெம்பு வந்தவளாய் "வாம்மா" என்று அழைத்த சுந்தரம் அங்கிளுக்குப் பின்னால் போனாள் அவள். அவளைக் கூட்டிக் கொண்டு போய் ஒரு ஹோட்டலில் உணவும் தண்ணீரும் கொடுத்து அவளுடைய பசியைப்போக்கிய பின் வீட்டிற்கு அழைத்துப் போனார் அவர்.

"என்னங்கோ நீங்கள் கொழும்புக்குப் போகேல்லையாங்கோ?" என்று ஆச்சரியத்துடம் கேட்ட சுவர்ணாவை-

"இரு சுவர்ணா வாறன்" என்று மட்டும் பதில் சொல்லிவிட்டு "இந்தப் பிள்ளைக்கு பாத்ரூமைக் கொஞ்சம் காட்டு முதல்லை நல்லாக் குளிச்சிட்டு உடுப்பை மாத்தட்டும்....." என உத்தரவு சொன்னார். சுவர்ணாவும் அவளை அழைத்து குளியலறையைக் காட்டி விட்டு வந்தாள். "டவல், சோப், பெட்டியிலை இருக்கிற நீ முந்திப் போட்ட உடுப்புகள் இருக்குதே அதிலையும் ஒரு உடுப்பைக் குடுத்திட்டு வா சுவர்ணா சொல்றன்"

குளியலறையில் சாமான்களைக் கொடுத்து விட்டுவந்த சுவர்ணாவிடம் இதுதான் நடந்தது என்று சொல்ல, அவருக்கிருந்த அருங்குணத்தைப் போல... வேதாங்கனை ஒப்பறேஷன் செய்து பெத்தெடுத்ததிற்குப் பின்னால் வேறு பிள்ளைகள் எதுவும் பெற்றுக் கொள்ளக்கூடாது என்ற டாக்டர்களின் உத்தரவு. ஒரு பெண்பிள்ளை இல்லை என்ற பெரிய கவலை. இதை எல்லாம் வைத்து சுவர்ணாவின் அன்பான இதயமும் அவளை உரிமையோடு தத்தெடுத்துக் கொண்டது.

குளித்து முழுகி அழகான ஆடை மாற்றி தேன் கலந்த லக்ஸ் சோப்பின் சுகந்தத்துடன் சுந்தரம் அங்கிளுக்கு முன்னால் வந்து நின்றாள் அவள். அந்தக் கணமே சுந்தரம் அங்கிளும் சுவர்ணாவும் மனம் மகிழ்ந்து போனார்கள். பூர்வீகம் தெரியாத அந்தக் குண்டுமணி இப்போது பெறுமதி தெரிந்தவர் கையில்....:

சந்தோஷத்தால் அழுதுவிட்டார்கள். அவளைக்கட்டி அணைத்து நெற்றியில் முகம் புதைத்துத் தலையைத் தடவி..... "சுவர்ணா, பிள்ளைக்குப் பிரேமா எண்ட பெயர் நல்லம்தானே..."

"ஓமப்பா ரொம்ப நல்லம்" என சுவர்ணாவும் ஆசைப்பட அன்றிலிருந்து ப்ரேமா...சுந்தரம் அங்கிளின் சொந்தப் பிள்ளை. மிகவும் உரிமையான.....உறவான பிள்ளை.

"ப்ரேமா... என்னம்மா இது...." கையில் கடிதமொன்றுடன் சுந்தரம் அங்கிள். முகத்தில் இனம் புரியாத ஒருவகை உணர்வு. அது தண்டிக்கும் உணர்வா அல்லது கோப உணர்வா?.... என்னவென்று தெரியாமல் விழித்துப் போனாள் ப்ரேமா.

"இந்தா ப்ரேமா பிடி!" கடிதத்தை ஆக்ரோஷமாக நீட்டினார் சுந்தரம் அங்கிள். கடிதத்தைக் கையில் வாங்கி அதனைக் கண்டவுடன் அவளது இதயத்தில் கொதிப்பாட்டிய. இரசம் கொஞ்சம் கொஞ்சமாய் இறங்கியதைப் போல் இருந்தது. "அங்கிள்... அது... வந்து... வந்து..."

"ப்ரேமா என்னம்மா செய்திட்டாய்.... எனக்கு என்னம்மா செய்திட்டாய்.....? ப்ரேமா.... உன்னை நான் எவ்வளவு பாசமா... எவ்வளவு ஆசையா வளர்த்தெடுத்தன் தெரியுமா? உன்னை என்ரை கண்போல அன்பு செலுத்தினேன். ப்ரேமா...என்னம்மா செய்திட்டாய்? எனக்கு என்னம்மா செய்திட்டாய்?

"இண்டைக்கு என்னை விட்டுட்டு யாரோ ஒருத்தனோடை.... என்ன ப்ரேமா உனக்கு என் மேலை பாசமே இல்லையா? என்மேல் இரக்கம் இல்லையா? உனக்கு இந்த அங்கிள் என்னம்மா குறை வைச்சன். நீ ஏனம்மா இப்பிடிப் பாசத்தை மதிக்காமை... உன்னோடை யார் பாசமில்லை...நான் பாசமில்லையா?.. அல்லது சுவர்ணா... பாசமில்லையா? ஏன் வேதாங்கன் உன்மீது பாசமில்லையா?.... இல்லாட்டி உமையாக்குட்டி? சொல்லு ப்ரேமா... சொல்லு...நீ ஏன் அவனைப் போய் காதலிக்கிறாய்...? அவன் யாரு...காதல் எண்டால் என்ன அன்பு, பாசம்.... இதுக்குப் போய் ஏன் இவ்வளவு நாளாய் எங்களை எல்லாம் ஏமாத்தினாய்? உன்னைப் பெறாத ஒரு குறையைக் கூட நாங்கள் உனக்குக் காட்டினோமா? சொல்லு ப்ரேமா...! சொல்லு...!! சரி-யாரோ ஒருத்தன் அவன் நல்லவனோ கெட்டவனோ அவனை நீ விரும்பு. எங்களை எல்லாம் வெறுத்து அவனோடை போ! எங்களிலை பாசமில்லாமல் வாழுறதைவிட.....அதுதான் உனக்குச் சரி....ப்ரேமா....." என கண்ணீருடன் கூறினார் சுந்தரம் அங்கிள்.

சுவர்ணா, சுவர் ஓரமாக ப்ரேமாவின் செயலை எண்ணியபடி கவலையுடன் நின்றுகொண்டிருந்தாள்.

"அங்கிள்... அப்பிடி எல்லாம் சொல்லாதேங்கோ... அங்கிள் நீங்கள் என்னை உயிர்... சத்தியமாய் உங்கடை அன்பை வேறு யாரோடையும் பங்கு போட மாட்டேன். எனக்கு வேறு யாரும்தேவையில்லை அங்கிள். எனக்கு நீங்கதான் வேணும். எனக்கு சுவர்ணா மாமிதான் வேணும்" ப்ரேமா....தான் செய்த மறுக்கவே முடியாத குற்றத்திற்காக மன்னிப்பு வேண்டி....சுந்தரம் அங்கிளின் மார்பில் முகம் புதைத்தபடி அழுது கொண்டிருந்தாள்.

"ப்ரேமாக்குட்டி நீ எங்களை விட்டுட்டு ஒரு இடமும் போகக்கூடாது. உன்னைப் பிரிஞ்சு எங்களாலை இருக்கவே முடியாதும்மா" சுந்தரம் அங்கிள் ப்ரேமாவின் தலையைக் கோதியபடியே...கூறிக்கொண்டிருந்தார்.

சுந்தரம் அங்கிளின் கண்களில் முட்டிய நீரைத் துடைத்து விட்டபடி.... ப்ரேமா...கேவினாள்.

இது இன்று நேற்றல்ல சுமார் 5 வருடங்களாக ப்ரேமா சசியை நேசிக்கிறாள். சசி-சுந்தரம் அங்கிள் வீட்டிற்குப் பால், பேப்பர் என்று கொண்டு வரும் காலத்தில் இருந்தே பழகுகிறாள். புத்திசாலித்தனமாக... காதலை சுந்தரம் அங்கிளுக்கோ சுவர்ணாவிற்கோ தெரியாமல் ஓடிவிட்ட காலங்களை அவள் இன்னும் நினைத்துப் பார்க்கிறாள்.

சசி- பிரேமாவிற்கு கடிதங்கள் அனுப்புவதோடு சரி...ப்ரேமா எழுதுவதில்லை. அவளுக்கு எழுதத் தெரியாது. அவன் தனக்குக் கொடுக்கும் எல்லாக் கடிதங்களையும் தனக்குத் தெரிந்தளவில் படித்துவிட்டு உடனேயே எரித்து விடுவாள். அதனால் இரகசியமான உறவாக வளர்ந்து போனது அது.

இப்போது ப்ரேமாவின் அலட்சியத்தினால் தான்இந்தக் கடிதம் சுந்தரம் அங்கிளின் கைக்குக் கிடைத்தது. இப்போது அவளிதயம் ஒரு பாசப் போராட்டம் நடத்தியது. தன்னை நேசிக்கிற சசியா....அல்லது தன்மேல் உயிரையே வைத்திருக்கிற சுந்தரம் அங்கிளா....ஒரு வேளை சுந்தரம் அங்கிளை விட்டு விட்டு சசியோடு ஓடிப்போனால்... அவளுக்கு நினைக்கவே நெஞ்சு உருகிப் போனது. இனமே புரியாத அவளுக்கு ஆதரவளித்து அன்பு செலுத்துக் காப்பாற்றிய உள்ளங்களை....தூக்கி வீசிவிட்டு இடையில் வந்த காதலனோடு...மகிழ்வாய் காலத்தைக் கழிக்கலாமா?

இன்றும் தபால்காரன் அந்தத் தந்தியை அவளிடம் தான் கொடுத்தான். அது கொழும்பில் இருந்து வந்திருந்தது. "ப்ரேமா...நான் கொழும்புக்கு இன்று வந்தேன். நாளைக் காலை பத்து மணியளவில் அங்கு வருவேன்"

சசி.

இறைவா!இது என்ன சோதனை. ப்ரேமாவின் மனம் பதறியது. இருதலைக் கொள்ளியெறும்பாய் .... துடித்துத்தான் போனாள். இன்று அவளுக்குள் ஒன்றுமே இயங்க வில்லை. ஓடிப்போய் ரூமில்கதவை மூடி கட்டிலில் விழுந்து கொண்டு அழத் தொடங்கினாள். அழுது அழுது கண்கள் சிவந்து வீங்கி விட்டிருந்தன. தேகம் நெருப்பாய்க் கொதித்தது.

சுந்தரம் அங்கிளும் சுவர்ணாவும் வேதாங்கனும்-ப்ரேமாவின் இந்த நிலையைக் கண்டு அழுதே விட்டார்கள். சுந்தரம் அங்கிள் ப்ரேமாவை விட்டுவிட்டுப் போக மனமில்லாமல் அவளின் பக்கத்திலேயே உட்கார்ந்து விட்டார். ப்ரேமாவைத் தூக்கி தன் மடி மீது வைத்து "ஏன் ப்ரேமாக்குட்டி உனக்கு என்னம்மா செய்யுது.... சொல்லம்மா... என்னர செல்வம் உனக்கு ஒண்டெண்டா என்னாலை எப்படிம்மா தாங்க முடியும்." ப்ரேமாவின் கொதிக்கும் தலைக்கு ஐஸ்பையை ஒற்றி ஒற்றி எடுத்தபடி சுந்தரம்அங்கிள் அவளின் சுகவீனத்தால் நிலை குலைந்துபோனார்.

இன்று என்ன விபரீதம் நடக்குமோ? சசி வீட்டிற்கு வருவாரோ, சுந்தரம் அங்கிளோடு பேசுவாரோ? சுந்தரம் அங்கிள் என்ன சொல்வாரோ... என்றெல்லாம்..... காய்ச்சலில் படுத்திருந்தவளுக்கு பல சிந்தனை மூட்டங்கள் வந்து மூடியது.

இன்று காலை வருவதென்று கூறிய சசி...மாலையாகியும் வராதது கண்டு ப்ரேமா கலங்கிப் போனாள்.

அடுத்த நாள் கேகாலை பெரியாஸ்ப்பத்திரியில் இருந்து அவளின் பெயருக்கொரு தந்தி.....

அதனைச் சுவர்ணாதான் வாங்கினாள்.

"சூர்யகுமார் சச்சிதானந்தம்.... ஆஸ்பத்திரி விபத்துப் பிரிவில் வைத்து இறந்து போனார் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்"

கொழும்பில் இருந்து வரும் போது பஸ் விபத்தில் இறந்து போனான் சசி. அவனின் டயறியில் விபத்து ஏதாவது நடைபெற்றால் அறிவிக்கும்படி கேட்கப்பட்டிருந்த இடத்தில் ப்ரேமாவின் விலாசத்தை எழுதி வைத்திருக்கிறான்.

அதனை வைத்து ஆஸ்பத்திரி இவளுக்கு அறிவித்திருக்கின்றது. சுவர்ணா-ஒன்றும் தெரியாமல் விழித்துப் போனாள்.

சுந்தரம் அங்கிள் இல்லாத நேரத்தில் அவளிடம் அன்று இரவு பத்து மணியளவில்.... இந்தத் தந்தியைக் கொடுத்தாள்.....

"ஐயோ! என்ரை சசி...." அவளின் மனம் வார்த்தைகளை வெளியில் தள்ளாமல் மௌனமாக ஓலமிட்டது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தனக்குத் தெரிந்த திருவாசக வசனங்களை ஓதத் தொடங்கினாள்.

"புல்லாகிப் பூடாய்- புழுவாய்- மரமாகி.... பல் மிருகமாகி... பறவையாய்ப் பாம்பாகி.... கல்லாய்... மனிதராய்...."

அவளின் உள்ளத்தில் இருந்த ஒரு பெரிய பாரம் பூமியில் இறக்கி வைக்கப்படுவதாய் உணர்ந்தாள்.

சுவர்ணாவை இறுக அணைத்தபடி அவளின் மடியில் மனச்சுமை தீருமட்டும் அழுது முடித்தாள்.

"பாம்பின் கால் பாம்பறியும்"

சுந்தரம் அங்கிள் பக்கத்து ரூமில் அயர்ந்து நிம்மதியாகத் தூங்குவதற்கு அடையாளமாய் குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிறுகதை

எஸ்தோனியக்கதை

# மனிதனின் நிழல்

ஃப்ரீட்பெர்ட் டக்ளஸ்
தமிழில்: சா. தேவதாஸ்

**ஒரு வயதானதாய் - போர் வீரனான அவளது மகன் - இரு மனங்களின் மூலமாய், அசுரயுத்தத்தின் பதிவுகள் தெரிகின்றன. யுத்தம் எல்லாவற்றையும் புரட்டிப்போட்டுவிடுகிறது. மனிதாபிமானத்தை-மனித உரிமைகளை- நாகரிகத்தை- குறைந்தபட்சமாக மனித உயிர்களுக்கான உத்தரவாதத்தைக் கூட அது விட்டுவைப்பதில்லை.**

**யுத்தம் இதயம் இல்லாத அரக்கனாக இருக்கலாம். ஆனால் யுத்தத்தின் இடையே வாழும் மனிதர்கள் இதயத்தை தொலைத்து விடுவதில்லை. யுத்தத்தின் ஊடே நகரும் வாழ்வில் நிகழ்ந்த கதைதான் இது. காலத்திற்கு பொருத்தம் எனக் கண்டு பிரசுரமாகிறது.**

**1991ல் எழுதப்பட்ட இக்கதையின் ஆசிரியர் ஃப்ரீட் பெர்ட் டக்ளஸ். சோவியத் குடியரசுகளில் ஒன்றாக முன்னர் இருந்த எஸ்டோனியாவை சேர்ந்தவர். தமிழில் இனிதாய் பதிவு செய்தது சா.தேவதாஸ்.**

மேரட் தூங்குவதென்பது மிகவும் சொற்பமே. அப்படியே சற்று ஆழ்ந்த தூக்கத்தில் இருந்துவிடும் அரிதான சமயங்களில், புலனுணர்வை இழந்து விடுவாள்.

ஒரே கனவையே காண்பாள்: இந்நீண்ட இரவுகளில், அவளின் மூளையில் ஒரே கனவின் நிழலானது ஆவி போலத் தோன்றும்.

தொலை தூரத்தில் இருக்கும் தன் மகனைப் பற்றியதாகவே அக்கனவு இருக்கும்.

வெறுமையின் ஆழத்திலிருந்து எழுவது போன்றிருக்கும் அவளது எண்ண ஓட்டம், இதே குடிலின் முன் அது தனது பயணத்தைத் தொடங்கும். இதே நதியைத் தொடர்ந்து செல்லும், இதே குன்றுகளைத் தாண்டிப்போகும்.

ஆற்றங்கரையின் குறுக்கும் நெடுக்குமாக ஆயிரக்கணக்கான மைல்கள் நடப்பாள். தூரம் செல்லச் செல்ல உலகு மிகவும் யதார்த்தமற்றதாகும். இடங்கள் பனி மேகங்களாகத் திரளும். மரங்கள் நீண்ட தூண்களாக உயர்ந்து நிற்கும். நதியானது தங்கப்பாளமாக ஒளிரும், மூடுபனியின் விசைப்படகுகள் வானில் அணிவகுக்கும். இம்மாய உலகத்திடையே அவளது மகன் மட்டுமே யதார்த்தமானவனாகத் தனித்து நிற்பான்.

அவன் ஒரு சாதாரண சிப்பாய் என்பதை அவள் அறிவாள்: இருந்தும் அவனைச் சுற்றியுள்ள அனைத்தும் அமானுஷ்யமாக, அளவில் பெரிதாகத் தெரியும். அவன் பழங்காலத்து இராணுவத்தலைவன் போல சிப்பாய்கள் மத்தியில் பீடு நடைபோடுவான். கைகளை நீட்டியதும் படை வீரர்களெல்லாம் கடல் அலைகளைப்போல பாய்வார்கள். பின்னர் அவன் வெற்றி பெற்றவனாக, ஸ்படிக காடுகள் போல சூரிய ஒளியில் பளபளக்கும் அந்நிய தேசங்களில் நுழைவான்.

இப்போர் நடக்கும் ஆண்டுகளில் அவன் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவது போல, மிகமிகப் பெரிதாகி வருவதாகத் தோன்றுவான். ஆனால் அவன் எவ்வளவு பெரியவனாகிறானோ, அவ்வளவு சிறியவளாகத் தன்னை அவள் உணர்வாள்.

எனினும் மேரட்டின் இதயத்தை வேதனையால் நிரப்பிடும் பெரிய பெரிய கவலைகளும் இருக்கவே செய்தன.

தனது மகன் காயம்பட்டு செத்துக் கொண்டிருப்பதாகக் கனவு கண்டாள். அந்நிய மண்ணில் நிராதரவாய் விடப்பட்டு, உதவி வேண்டிக் கூச்சலிட்டு, இரத்தம் கொட்டுவது நிற்காது மெல்ல மெல்ல செத்துக்கொண்டிருப்பதாகக் கண்டாள். விரைந்து செல்ல மேரட் விரும்பினாலும், அவள் பாதங்கள் அசையவில்லை. போராடினாள்; கூச்சலுடன் எழுவதுவரை அல்லாடினாள்.

தான் கேட்டது யாருடைய குரல் என்பதை அவள் எழுந்ததும் அறியவில்லை; அது அவளது மகன் ஜேகப்பினுடையதா? அவளுடையதா அல்லது நேரம் கழித்து வந்து, படகில் செல்வதற்காக, அக்கரையிலிருந்து கூப்பிடும் பயணியினுடையதா?

விரைந்தாள்; சந்தையிலிருந்து திரும்பும் ஒரு விவசாயி, யூதன் மற்றும் கிராமத்தானை ஆற்றங்கரையில் பார்த்தாள். ஆனால் எதிர்பார்த்தவனைக் காணாத விழிகள் அழுகையுடன் சுருங்கின.

இப்போது சிப்பாய்கள் ஆற்றைக் கடந்து வரத் தொடங்கினர். சமயங்களில் ஒரே நாளில் அநேகம் பேர் வந்தனர். சிலர் ஆற்றின் இப்பகுதியிலிருந்தும், சிலர் அப்பகுதியிலிருந்தும் வந்தனர். பெரும் பாலும் அவர்கள் தனித்தே வந்தனர். சில சமயந்தான் கூட்டமாக வந்தனர். சவரம்செய்து கொள்ளாமல், அழுக்கு உடைகளுடன் யுத்த களத்திலிருந்து அவர்கள் வந்தனர். சிலர் சபித்தனர், சிலர் பீற்றிக்கொண்டனர், சிலர் மௌனமாய் நம்பிக்கையிழந்தனர். சிலர் மூட்டை முடிச்சுகளை முதுகில் சுமந்து வந்தனர்; அல்லது பட்டு, கம்பளி மற்றும் இதர விலை உயர்வான பொருட்கள் கொண்ட மூட்டைகளை சுமக்கும் களைப்படைந்த குதிரைகளை நடத்திக் கொண்டு வந்தனர். மிகுந்த சிரத்தையுடன் தள்ளாடிக் கொண்டோ, விவசாயிகளின் வண்டிகளில் ஓட்டியபடி முனகிக் கொண்டோ, ஊன்று கோல்களைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டோ தலைக்கவசத்தை முகத்தில் தொங்கப் போட்டபடியோ வந்தனர்.

அவர்களது முகங்களிலிருந்து ரகசியம் ஒன்றை அறிந்துவிடத் துடிப்பவள் போல, அவள் எல்லோரையும் ஆவலுடன் கவனித்தாள். பின் ஆற்றின் கனத்த அலைகளின் ஊடாகப் படகைச் செலுத்தியபடி, யுத்தம் பற்றிய கேள்விகளை அவர்களிடம் தொடுத்தாள்.

முடிவு பெறாத சதுப்பு நிலங்களிலும், காடுகளிலும் எவ்வளவு நேரம் மூழ்கித் தவித்தோம் என்று சிலரும், ஆளரவமற்ற மலைகளிடையே வெறி கொண்டு சென்றோம் என்று சிலரும் கூறினார்கள். ஆனால் எல்லோரிடத்திலும் பொதுவாக இருந்தவை வெறுப்பு, எரிச்சல், கோபம்.

எல்லோருமே ஒன்றுபோல் போர் முனையை விட்டுக் கிளம்பியவர்கள் இறுதியாக, சிலர் ஆயுதங்களுடன் வந்தனர், வேறு சிலர் தூர எறிந்தனர், இன்னும் சிலரோ திருட்டுத்தனமாகத் தப்பி வந்தனர். சிலர் வழியில் கொஞ்சம் கொள்ளையடித்துக்கொண்டு வந்தனர்.

அவர்கள் இனி ஒருபோதும் யுத்தத்தைக் காண விரும்பவில்லை. போதும் போதும் என்றாகிவிட்டது. வீட்டில் கிடப்பவர்கள் போய் சண்டையிடட்டும், அவர்களுக்குப் போதும், போதும் என்றாகிவிட்டது.

மேரட் இவற்றையெல்லாம் கேட்டாள். அவளது இதயம் அச்சத்தால் நடுக்குற்றது.

தான் கேட்டதில் பலவற்றை அவளால் புரிந்து கொள்ள இயலவில்லை. யுத்தத்தின் போக்குகள் அவளுக்குப் பிடிபடவில்லை. ஒன்றுமட்டுமே பிடிபட்டது. ஆண்டுக்கணக்கில் நீடித்த யுத்தமானது இப்போது முடிவுக்கு வந்து கொண்டிருந்தது.

மற்றவர்களைப் போலவே திடுதிப்பென்று அந்நியமாகவும், அச்சத்துடனும் தன் மகனும் திரும்பிவரவேண்டும் என்று காத்திருக்கத் தொடங்கினாள்; ஆனால் தம் தாய்மாருக்கு அவர்கள் எவ்வளவு இனிமையானவர்களோ, அது போலவே அவள் மகனும் அவளுக்கு இனிமையானவனே.

ஆண்டுகளையும், மாதங்களையும், நாட்களையும் எண்ணினாள். மகன் போய் நிறைய நாட்களாகிவிட்டது. யுத்தத்திற்கும் நெடுநாள் முன்பே அவன் சென்றது; யுத்தமும் பல ஆண்டுகளாக நடந்திருந்தது. மீண்டும் ஆண்டுகளை எண்ணினாள். ஏழாண்டுகள் ஆகிவிட்டன. ஏழாண்டுகள்! பெருமூச்சு விட்டாள்; கண்களில் நீர் சுரந்தது.

ஒரு நாள் தீப்பட்ட காயங்களுடன் கூடிய வீரன் ஒருவனை படகில் ஏற்றி வந்தாள். வசைபாடிக்கொண்டும், சபித்துக்கொண்டும் வந்தவன் கடைசியில், அந்த ஆற்றின் பெயர் என்ன? படகின் பெயர் என்ன? அவளின் பெயர் என்ன என்று வினவினான். அவள் பெயரைக் கூறியவுடன் தனது கருத்த கையால் பைக்குள்ளிருந்து தோல்பர்ஸ் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"இதைப் பெற்றுக்கொள். உன் மகனிடமிருந்து இதைக்கொண்டு, வருகிறேன்"

மேரட்டின் முழங்கால்கள் நடுங்கத் தொடங்கின. "என் மகன்...மகன்...?" என்று முணுமுணுத்தாள்.

"இப்பகுதி வழியாகச் செல்லுமாறு கூறினான்."

"உயிரோடிருக்கிறானா? உயிரோடிருக்கிறானா?" மூச்சுத்திணறியது அவளுக்கு.

"உயிரோடுதான் இருக்கிறான். ஆனால் அவனுக்கு கெட்ட காலம். விஷகுண்டு ஒன்று அவன் முகத்தைத் தீய்த்துவிட்டது."

அந்நியனின் கைகளை மேரட் பற்றிக் கொண்டாள். "அவன் எங்கே? அவனை நீ எங்கே பார்த்தாய்? வீட்டுக்கு வருவானா?" கேள்விகள் அடுத்தடுத்து வெளிவந்தன.

அந்நியன் அவளை சற்று அமைதிப்படுத்த முயன்றான். "இப்போது அவன் திரும்பிக் கொண்டிருக்க வேண்டும். மருத்துவமனையில் எனக்கருகிலுள்ள படுக்கையில் கிடந்தான். அவனுக்கு ஒன்றுமில்லை. முகம் மட்டும் கருத்துவிட்டது புகையால். ஆனால் இந்தப் பர்ஸை பத்திரமாக வைத்துக் கொள், இதில் சிறிது பணம் இருக்கிறது"

அந்நியன் கரை மீது கால்வைத்தான்.

"பொறு, போகாதே, அவனை நீ எங்கே கண்டாய்?" மேரட் மன்றாடினாள்.

"எனக்கு நேரமில்லை. என்னுடைய ஜனங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நீண்ட தூரம் நான் செல்ல வேண்டும்."

பிரமை பிடித்தவளாக ஆற்றங்கரையில் மேரட் நின்றாள். கையில் பர்ஸைப் பிடித்தபடி, மலைப்பக்கமாக சென்று மறையும் அந்நியனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின், நடுங்கும் விரல்களால் பர்ஸைத் திறந்தாள். உள்நாட்டுப் பணம் சிறிதும்



வெளிநாட்டுப்பணம் சிறிதும் இருந்தது. உள்நாட்டுப்பணம் நோட்டுகளாகவும் வெளிநாட்டுப்பணம் தங்கமாகவும் இருந்தது. ஆனால் இதற்கு முன்னர் மேரட் இது போன்று பணத்தைக் கண்டதில்லை. அதன் மதிப்பும் அவளுக்குத் தெரியாது.

பர்ஸை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, ஏதோ மயக்கத்தில் வீட்டுக்கு நடந்தாள். மேசை மீது பர்ஸை வைத்து, தங்க நாணயங்களையும் பர்ஸையும் நோக்கினாள். பர்ஸ் நேர்த்தியுடன் செய்யப்பட்டிருந்தது. அவளால் கூட அதனைப் புரிந்து கொள்ள முடிந்தது. நடுங்கும் விரல்களால் அதனைத் தொட்டு எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

வீடு திரும்பும் அந்நியனிடம் இத்தகு புதையலை ஒப்படைத்து அனுப்பும் மகனிடம், நிறையப் பணமிருக்க வேண்டும் என திடீரென எண்ணிக் கொண்டாள். அவள் கொஞ்ச நாளாக எதிர்பார்ப்பதுபோல, அவன் பணக்காரனாகவும் கனவானாகவும் இருக்க வேண்டும்.

அன்றிலிருந்து பர்ஸானது மேரட்டின் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகிவிட்டது. அதில் இருந்த பணத்தைச் செலவிடவே இல்லை. மகன் திரும்பும்வரை அவற்றை பத்திரமாக வைத்திருக்க விரும்பினாள். பணத்தின் பொருட்டு அவள் அவனுக்காகக் காத்திருக்கவில்லையே: எந்தக் காசுபணமும் அவளது பாசத்துக்கு இணையாகாதே!

அவ்வப்போது பர்ஸை எடுத்து வருடிக் கொடுப்பாள். அது அவனின் அங்கமாக, அவனது செல்வம் மற்றும் சக்தியின் சின்னமாக விளங்கியது.

இப்போது அவளது கனவுகள் புதிராயின. ஆப்பிரிக்கர்களிடையே வாழ்பவள்போல கருத்த முகங்களையே கனவு கண்டாள். தான் கேள்விப்பட்டிருந்த கீழைத்தேயத்து மன்னர்கள் அந்நிய தேசங்களில் உலவுவது போல மகன் உலவுவதைக் கண்டாள். ஆப்பிரிக்காவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கொண்டு வரப்பட்ட மனிதர்கள் அவனுக்கு ஏவல் புரிந்தனர். நாடுகள் மாறின; பாலைவனங்களிலும் புல்வெளிகளிலும் ஒட்டகங்கள் சென்றன. அப்போது அவள் ஆற்றுப்பரப்பையும் தாழ்ந்த நாணலைக் கொண்ட கரைகள் சரிவதையும் கண்டாள். அவன் அசுரனைப்போல எழுந்தான்; விண்ணின் பாதியைக் கருப்பாக்கினான்; ஆற்றல்மிக்கவனாக உறுதியானவனாகத் தோற்றமளித்தான். கருத்த அவன் முகத்தின் விழிகள் மட்டுமே மென்மையானவையாக, விரும்பக்கூடியனவாக, ஒளிர்ந்தன......

மேரட் தூக்கத்தில் அழுதாள்........

2

அன்றிரவு, உதவி வேண்டும் தொலைதூரக் குரல் கேட்டு இரு முறை உசும்பினாள். பின் தூங்கிவிட்டாள். மூன்றாவது முறையும் ஈனஸ்வரத்தில் கேட்டது அந்தக் குரல். மனிதக் குரலாயில்லை; மிகவும் புதிதாயிருந்தது. மேரட் படகில் கிளம்பினாள். கரையில் ஆப்பிரிக்க தேசத்தவனின் முகம்போன்ற ஒன்று தென்பட்டது.

காலில் கட்டுக்களுடன் முனகிக் கொண்டிருந்தான். மேரட் கால்களை கவனித்தாள்; இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. "மகனே, ரொம்பவும் வலிக்கிறதா எப்படி இங்கே வர முடிந்தது? உன்னால் நடக்க முடியுமா?" என்று கேட்டுக்கொண்டே தோள் கொடுத்துத் தூக்கி படகில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தாள்.

கட்டை அவிழ்த்து வேறு துணிகள் சுற்றி போர்வையால் போர்த்திப் படுக்க வைத்தாள். அவன், தனது தோள்பை மட்டும் பக்கத்திலிருக்கிறதா என்று உஷார் படுத்திக் கொண்டான். அவளது கேள்விகளுக்கு ஓரிரு வார்த்தைகளில் பதிலளித்தான். சிறிது நேரம் வேதனையில் புரண்டுவிட்டுத் தூங்கிவிட்டான்.

அருகிலேயே மேரட் குழப்பத்திலும், வேதனையிலும் தவித்துக்கொண்டிருந்தாள்.

அவன் செல்வந்தனாகப் பெருமிதம் கொண்டவனாக அல்லது குறைந்தபட்சம் ஆரோக்கியமிக்கவனாக, உற்சாகம் கொண்டவனாக, அவன்போகும் போது இருந்தது போல வந்தால் போதும் என எதிர்பார்த்தாள். ஆனால் அவன் நொண்டியாக, ஏழையாக வறுமையுடன் வந்திருந்தான்.

அச்சந்தருபவனாகவும், பீதியளிப்பவனாகவும் தோன்றினான்.

மேரட்டின் விழிகளிலிருந்து நீர் பெருக்கெடுத்தது. மேசை மீது சிறு மெழுகு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுடரின் செம்பகுதி, ஆடியது. விடாது ஆடியது. தாயன்பு போல அணைக்க இயலாத வண்ணம் ஆடியது.

3

பொழுது புலர்ந்தது. அவள் தூங்கவேயில்லை. கண்கள் சொக்கினாலும் உதவிக்கு யாரை அழைக்கலாம் என்று யோசித்தாள். அவளுக்கென அங்கு யாரும் இல்லை. தொலைவில் காட்டில் இருக்கும் வனக்காவலர்தான் பரிச்சயமானவர். அவரையாவது பார்த்து வரலாம் என்று அவள் கிளம்பியபோது, அவரே தற்செயலாக, நாயுடனும் துப்பாக்கியுடனும் வந்து கொண்டிருந்தார்.

கிழவி கூறியதையெல்லாம் கேட்டு விட்டு வனக்காவலர் சொன்னார்:

"பூமியிலுள்ள கடைசி மனிதனும் செத்தொழியும்வரை அவர்கள் கொன்று கொண்டே இருப்பார்கள் என்று நான் கூறவில்லை? அப்புறம் நரிகளும் ஓநாய்களும்தான் மிஞ்சியிருக்கும். அப்போது நான் யுத்தத்தைத் தொடருவேன்.ஹா......ஹா....ஹா..."

வீட்டுக்குள் வந்து காயம்பட்டுக் கிடப்பவனை ஒரு கணம் அமைதியாக நோக்கினார். நாய் அவனை முகர்ந்துவிட்டுக் குரைத்தது. பின் கிளம்பி விட்டனர்.

கிழவி அருகிலேயே இருந்தாள்.

மறுநாள் ஜேக்கப் சீக்கிரமே எழுந்து விட்டான். ஜுரத்துடன் தவித்தான். நிறையப் பேசினான்: ஆனால் அது அவளுக்குப் புரியவில்லை.

திடீரென கண்களை விரித்து, "எனது பணம் எங்கே?" என்றான்.

"இங்கே இருக்கிறது மகனே" என்று பர்ஸைக் கொடுத்தாள்.

"எனது துணிமணிகள்?"

"இதோ படுக்கையின் மூலையில்"

"என்னிடம் கொடு"

"மகனே, எங்கே போகப் போகிறாய்?"

"இங்கிருந்து போக வேண்டும்."

"உனக்கு உடல் நலம் சரியில்லை. உன்னால் எங்கும் போக முடியாது. ஓய்வெடுத்துக்கொள். இப்போது உன்னால் அசைய முடியாது."

"ஒரு கணம் நினைவிழந்தவன், உடனே பீதியுடன் சுற்றுமுற்றும் பார்த்தான். "ஏதேனும் சொன்னேனா?"

"என்ன சொல்லவிருக்கிறாய் மகனே?"

"ஒன்றுமில்லை. சமயங்களில் ஜன்னி கண்டு பிதற்றுவேன். பயங்கரமான கனவுகள் வருகின்றன. எப்போதும் யுத்தம் தான்...பகலும் இரவுமாக..எப்போதும் கொலைதான்...இத்தகு கோர விஷயங்களை நான் கூறும்போது கவனிக்காதே."

......எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்த டாக்டர் ஒரு வழியாக வந்து மகனைப் பார்த்தார்.

"உங்கள் மகன் மிக மோசமான நிலையில் இருக்கிறான். அவனது காயங்களுக்கு மருந்து போடாமல் இருந்திருக்கிறான். இந்நிலையில் அவன் எப்படி வீட்டுக்கு வந்தான் என்பதே எனக்குப் பிடிபடவில்லை. நன்றாக கவனித்துக் கொண்டால் குணமாகிவிடுவான்."

"மருந்து ஏதும் எழுதித் தரவில்லையா?"

"நிச்சயமாக எழுதித்தருகிறேன்" ஞாபகப்படுத்தியவர்போல் கூறிவிட்டு, ஏதோ எழுதிக் கொடுத்துவிட்டு, கிளம்பி விட்டார்.

அவரைப் பார்த்தவாறே வாசற்படியில் சிறிது நேரம் மேரட் நின்றாள். அந்தி நெருங்கிவிட்டது. ஊதல் காற்று துளைத்துச் செல்வது போல வீச, அதில் மருந்துச் சீட்டு கிடந்து அடித்துக் கொண்டது.

4

அடுத்த நாள் மாலை-ஜேக்கப் இறந்துவிட்டான்.

இரவில் பிரேதத்தைக் குளிப்பாட்ட வனக்காவலரின் மனைவி வந்தாள். அவள் முன்கோபி. எனினும் தனது அண்டை வீட்டாருக்கு துயரத்தின்போது உதவ இப்போது வந்தாள்.

பின்னர் பிரேதத்தைக் கிடத்திவிட்டு இருவரும் சில பாசுரங்கள்-ஒருவர் உச்சஸ்தாயியிலும் மற்றவர் தாழ்ந்த ஸ்தாயியிலும் பாடினர். பிரேதத்தின் பாதத்தருகே நின்றிருந்த வனக்காவலர் சாவுபற்றியும் ஓநாய் வேட்டை பற்றியும் வோட்கா பற்றியும் எண்ணினார்.

அப்புறம் வனக்காவலரும் அவர் மனைவியும் சென்றுவிட, மேரட் மட்டும் மகனுடன் தனித்திருந்தாள்.

மகனின் முகத்தை வெறித்துப் பார்த்தாள்; ஊடுருவிச் செல்வது போல; அதன் தன்மைகளையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு தனது இதயத்தில் காலமெல்லாம் நீடிக்குமாறு பதித்துக் கொள்வது போல, இது அவளது பாசத்தின் வழிபாட்டிலுள்ள கடைசி நடவடிக்கையாக, இதுவரையிலும் நடந்தவற்றில் மிகவும் ஆழமானதாகவும் பீதியூட்டுவதாகவும் இருந்தது. மானுட அறிவுக்கும், அனுபவத்துக்கும் தாண்டியதாக இருந்தது.

அடுத்த நாள் வனக்காவலர் பிரேதத்தை அளந்து சவப்பெட்டி செய்தார். மறுநாள்-ஞாயிற்றுக்கிழமை படகில் தேவாலயம் சென்றனர் ஆன்மா சாந்தி பெறச் செய்வதற்காக.

அது முடிந்ததும் காவலரும் அவர் மனைவியும் சென்றுவிட்டனர். மேரட் சமாதி மேட்டில் விழுந்தாள். அழவுமில்லை, பெருமூச்சுவிடவுமில்லை. விரல்கள் மட்டும் மணலைத் துழாவ, அவள் முகம், வாய் மற்றும் விழிகள் ஈரமண்ணை முகர்ந்தன. பூமியின் ஆழத்திலிருந்து வருவதாகத் தோன்றிய மணத்தை சுவாசித்தாள். பெரிய சால்வையால் மூடிக்கொண்டு அச்சமாதி மேட்டில் வீழ்ந்து கிடக்கும் அவளோ, அதன் பகுதியாகவும், மண்ணாகவும் மாறிவிட்டதாகத் தோன்றினாள்.

அது தாயின் வேதனை, அது உலகின் வேறெந்த வேதனையையும் விடக் கடுமையானது. பூமியிலுள்ள வேறெதனையும்விட வேட்கை மிக்கதான தாயின் இதயத்தினின்றும் பாய்வது அது. அதனை விவரித்திட, வார்த்தைகளோ கண்ணீர்த் துளிகளோ போதாது.

அவள் தலையை உயர்த்தியபோது அருகிலுள்ள பெஞ்சில், சிப்பாயின் கோட்டை அணிந்திருக்கும் ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவனது முகம் மெழுகு போன்றும் மார்பு உட்குழிந்தும் இருந்தன. மேரட்டுக்கு அவனைத் தெரியாது. அவன் தாழ்ந்த கீச்சுக்குரலில் பேசினான்:

"அவன் இறந்துவிட்டான் எனக் கேள்விப்பட்டேன். மீண்டும் ஒருமுறை அவனைப் பார்க்க முடியும் என்று எண்ணினேன். நாங்கள் பிரிந்தபோது, எல்லாம் சரியாகிவிடும் என நம்பினோம். புதிய வாழ்க்கை தொடங்கிட விரும்பினோம்....ஆனால் இப்போதோ எல்லாம் முடிந்துவிட்டது. அவன் என்னை முந்தி விட்டான். இனந்தெரியாத நோயொன்று என்னை விஷம் போல தின்றுகொண்டிருக்கிறது. அவனுக்கு என்னாயிற்று?"

"காயங்களினாலா இறந்தான்"

"காயங்களினாலா? அவன் காயங்கள் எப்போதோ சரியாகி விட்டனவே! இடது கன்னத்தில் தீக்காயத் தழும்பு மட்டுமே சிறிது இருக்கும். அதுகூட சாதாரணமானதே.

மேரட், இப்போது பேசியவனைக் கண்டு கொண்டாள். அவளிடம் பர்ஸ் தந்தவனே அவன்.

"காலில்பட்ட காயத்திற்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்றா கூறுகிறாய்?"

"இல்லை, இல்லவே இல்லை."

"அவனது முகமெல்லாம் கருக்கவில்லையா?"

"கன்னத்திலும், செவித்தடத்திலும் சற்று வெளுத்திருக்கும், அவ்வளவே"

"ஓ தெய்வமே, இதற்கு என்ன அர்த்தம்? காயம்பட்ட அவன் கால்களும் தீய்ந்த முகமும் -அது எங்கே நேர்ந்திருக்கும்? யார் அவனைக் காயப்படுத்தியது?"

ஆனால், அந்த அந்நியன் பதிலேதும் கூறவில்லை. குனிந்தவாறு அமர்ந்திருந்தான். எலும்பும் தோலுமாக உள்ள கைகள் அசையவில்லை. தனக்குள் கூறிக் கொள்வது போல பேசினான்!

"மீண்டும் நான் உற்சாகத்துடன் வாழ்ந்திருக்க முடியும், ஆனால் இப்போதே எல்லாம் தாமதித்து விட்டது. மணமுடித்துக் கொள்ள ஆசைப்பட்டேன்; ஆனால் இப்போது வாழ்வதில் சந்தோஷமே இல்லாது போய்விட்டது. குழந்தைகளுக்காக ஆசை கொண்டிருந்தேன். ஆனால் இப்போது என்னிடம் சக்தியே இல்லை. எல்லாம் தாமதித்துவிட்டது."

நிறுத்தினான். அந்தி நெருங்கியது. மயான அமைதி. மீண்டும் அந்நியன் பேசத் தொடங்கினான்.

சமயங்களில் இறந்தவர்களைக் கூட்டங் கூட்டமாகப் பார்க்கிறேன். அவர்கள் ஒரு போதும் அசைவதில்லை. சிந்திப்பதில்லை. வருந்துவதில்லை. எல்லாம் மௌனம். எல்லாம் இருள், எல்லாம் முடிவுக்கு வந்திருக்கிறது. பின்னர் எதற்காக நான் போனேன். சண்டையிட்டேன். வருத்தப்பட்டேன் என்பதே புரியவில்லை"

ஒருகண நேர மௌனத்திற்குப் பிறகு சரியாகக் கேட்காத வகையில் கூறினான்;

"விழிப்பில்லாத, வரம்பற்றதான, மகத்தானதான சாவின் இரவு எப்படியும் வந்துவிடும்....அதன்பிறகு அவன் ஒன்றும் கூறவில்லை.

தேவாலய வாயிலைவிட்டுத் தள்ளாடியவாறு ஆற்றுக்கு வந்து படகில் ஏறினாள். ஆனால் துடுப்பை வலித்திடும் திராணி அவளது கரங்களில் இல்லாது போயிற்று. நீரோட்டத்தில் படகு எப்படி செல்கிறது என்று மட்டும் எண்ணியவாறு உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு ஒரே ஒரு எண்ணம். சில்லிட்ட, இயக்கமற்ற, கனத்த கல்லாக அது இருந்தது. அவ்வெண்ணத்தில் யுகங்களெல்லாம் கணங்களாக மாறி ஓடின. அது அர்த்தமற்றதான கேள்வி; நான் பாசம் கொண்டாடியது, நான் புதைத்தது, நான் துக்கம் கொண்டாடுவது யாருக்காக அவன் யார்?

ஆனால் மேரட்டுக்கு பதில் கிடைக்கவில்லை.

அவளது குரல் கடந்து செல்வதையும், மெதுவாக மறைவதையும் கண்டாள். ஆனால் அசையவில்லை. படகும் நீரும் அசைவற்றிருப்பதாகத் தோன்றியது. சன்னலுக்கு அருகே நிற்கும் வெற்று மரத்தடியிலான உறைவிடம் அழகாக மிதந்துபோவதுபோல் இருந்தது. சோம்பலின் வெறுமைக்குள் மேலும் மேலும் செல்வதாக....

பிறைநிலவு வானில் எழுந்தது. மூடுபனி சூழ்ந்த வெளிக்கு குளிர்ந்த பளபளப்பைத் தந்தது. எலும்புக்கூடுகள் வடிவம்கொண்ட புதர்கள் உயர்ந்திருக்கும் இடங்களிலுள்ள கரிய நீருக்கும், மண்ணுக்கும் அதன் வேதனைமிக்க ஒளி சோபை கூட்டியது. வானம் பசிய நீலமாகியது. வெள்ளி மெழுகுவர்த்தியின் ஒளியில் ஒளிரும் உருக்குபோல மின்னியது.

ஆனால் படகு நிற்காமல் நீரோட்டத்தில் சென்று கொண்டிருந்தது. மூடு பனியின் திருகு சுழலேணிகள் வழியாக கடந்து சென்றது. கடைசியாகப் பார்க்கும்போது அனைத்தும் கடந்து செல்வதாயிருக்க படகு மட்டுமே சலனமின்றி நிற்பதாகத் தோன்றியது;

வானமும் பூமியும், கரைகளும் மரங்களும் மற்றும் ஆற்றின் சிடுசிடுத்த அலைகளும்- ஓய்வொழிச்சல் இன்றியும் அமைதியின்றியும்- பாசமிகு தாயின்வற்றாத கண்ணீர்ப் பெருக்கைப் போல.

www.padippakam.com
நன்றி : நூலகத்திட்டம்

## நேரடிக்கதையான பயண அனுபவம்

# யார் நீ?

-கிண்ணியா அமீரலி-

தினமுரசு வாரமலரைத் திருப்பித் திருப்பிப் புரட்டிக் கொண்டிருந்த போது.... திரும்பித்-திரும்பி என்னையே பார்த்துக் கொண்டிருந்த உன்னை உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கினேன்.

"அளுத்கம" பஸ்ஸில் ஜன்னலோர வசதியான சீற் ஒன்றில் சாய்ந்தபடி வந்த என்னை- உன் சிவப்புச் சர்வாணி அடிக்கடி உரசி வர....உன்னைக் கண்களில் கண் காணித்து வந்தவன்...நீ என்னையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வருவதைப் பார்த்தபோது நான் பயந்துதான் போனேன்.

'மொரட்டுவை'யில் மினிபஸ் நின்ற ஒரு நிமிஷத் தாமதப் பொழுதில் நீ மெதுவாக என்னைப் பார்த்து மௌனித்துச் சிரித்தாய்.

பஸ் மெதுவாகப் போகக் கூடாதா' என என்மனசு அவசரப்பட்டது.

நீ கேட்டாய்.

'பேப்பரைத் தர்றீங்களா?'

தந்தேன்.

விரித்தாய்...விரித்தாய்...

'தேன்கிண்ணத்தில்' உன் விழி எறும்புகள் மொய்த்த போதுதான் புரிந்தது நீ ஒரு கவிதைப் பைத்தியம் என்று.

நான் உன்னைச் சுவாரஸ்யமாக ஆராய்ந்து கொண்டிருந்தேன். குறுக்கெழுத்துப் போட்டி'யை விழிகளால் நிரப்பி....ஏதோ ஒரு 'மேலிருந்து கீழ்' மூளையைக் குழப்ப நீ 'இடமிருந்து வலமா'க மீண்டும் பேப்பரில் மூழ்க.... நான் வாயெடுத்தேன் பேச.... ஆனால்.... நீ சிறுகதைக்குள் விழிபுதைத்து விட்டாய்.

நீ யாராக இருப்பாய்....? நான் அங்குலம்.... அங்குலமாக- யோசித்தேன்.

நிச்சயமாக நீ ஒரு தினமுரசு வாரமலர் அபிமானி! ஒரு ரசிகை! அல்லது-ஓர் ஆரம்ப எழுத்தாளி!

ஆனால்-ஒன்று மட்டும் உறுதி.

நீ தினமுரசு வார மலரைத் தொடர்ந்து படித்து வரும் ஒரு நல்ல வாசகி!

நீ யாரென்று அறிய என்னுள்ளம் துடித்தது.

உன் வெள்ளை முகத்துச் சின்னச்சிரிப்பில்-எங்களூர்த் தோழி ஒருத்தியின் ஞாபக முகச்சாயல் தொனித்தது.

வாசக(ர்)சாலை- சிந்தியா பதில்களில்.... நீ தாமதித்த பிறகும்கூட 'நீ ஓர் புதிய எழுத்தாளி' என்பதை ஊகித்தறிய முடியாதா என்ன? உன் பெயரை மட்டுமாவது அறிந்து கொள்ள வேண்டும் எனக்கிடந்து- தவித்தேன்.

நீ 'பேருவலை'யில் இறங்கிப் போகும் வரை- தினமுரசு வார மலரிலிருந்து.... விழி நகர்த்தாமலேயே வந்தாய்.

நீ இறங்க எழுந்த போது...நான் எழுந்து நின்று கேட்டேன்...

'நீங்க பேப்பருக்கு ஏதும் எழுதுறதா?'

நீ 'ம்' என்றாய்.

'உங்க பேர்'

"இறக்கம்"

கிளீனர்ப் பொடியன் நாசமாய்ப் போக.

நீ பேப்பரோடு தாங்ஸ் தந்து பாய்ந்து இறங்கி நகர....

நான் - யார் நீ? என்ற ஆராய்ச்சியிலிருந்து விடுபட மனமில்லாதவனாக.... சீற்றில் சாய்ந்தேன்.

ஓரிரு நாட்களாக-

அளுத்கம பஸ்- தினமுரசு- சிவப்புச் சர்வாணி-

யார் நீ?

தினமுரசுதான் பதில் தரவேண்டும்.

யோசித்தேன்.

இதோ! 'கதை'யை எழுதியும் விட்டேன். இதைக் கட்டாயமாக நீ படிப்பாய்.

இப்போதாவது சொல்லிவிட மாட்டாயா....

அன்று-

16.07.93 வெள்ளிக்கிழமை


காலை 8 மணியளவில் புறக்கோட்டை யிலிருந்து அளுத்கம பஸ்ஸில் உன் சகோதரனோடு வந்தாயே.... யார் நீ?

(யாவுமே உண்மை)

## நட்சத்திரத்தை சிரிக்க வைத்தவை

நடிகர் சத்தியராஜ் நகைச்சுவை உணர்வு நிரம்பியவர். தமிழக சினிமா உலகில் ஜாலியான மூட் நடிகர்களில் ஒருவர்.

தான் ரசித்த ஜோக்குகளை அவரே சொல்கிறார்.



கணவன்:(முதலிரவு அறையில) நீ பால்காரனோட மகளா இருக்கலாம். அதுக்காக ஒரு பரிசு மாட்டைக் கொண்டுவந்து ரூம்ல கட்டிட்டு பால் கறந்து குடிச்சுக்குங்கன்னு சொல்றது கொஞ்சம் கூட நல்லாயில்ல.

■

நோயாளி: டாக்டர், சரியா மூச்சுவிட முடியாம கஷ்டப்படேறன் காப்பாத்துங்க டாக்டர்.

டாக்டர்: கவலைப்படாதீங்க ....மூச்சை நிறுத்திடறன். நோ பிரப்ளம்.

■

ஒருவர்: அந்தப் பாம்பு ஏன் படம் எடுக்க மாட்டேங்குது.

மற்றவர்: ஸ்டிரைக் நடக்குதே. விசயமே தெரியாதா உங்களுக்கு.

■

அவள்: பஸ் ட்ரைவரை கல்யாணம் பண்ணிக்கிட்டது ஒரே தொல்லையாப் போச்சுடி.

இவள்: ஏண்டி இப்படி அலுத்துக்கறே.

அவள்: விசிலடிச்சாத்தாண்டி அவருக்கு மூட்டே வருகிறது.

■

மகன்: அஞ்சு வயசில பத்து விசயங்களைக் கத்துக்கிறது தப்பா டடி?

தந்தை: தப்பே இல்லை. கத்துக்கலாம்.

மகன்: தீப்பெட்டி கேட்டா மம்மி எதுக்கு டடி கத்துறாங்க?

■

காதலன்:அன்பே உனக்காக நான் தாஜ்மகாலைக் கூட பெயர்த்துக்கொண்டு வந்துதருவேன்.

காதலி: அதை ஏற்கனவே பரமேஷ் சொல்லிவிட்டார். வேறு ஏதாவது பேசுங்க.

■

நோயாளி: டாக்டர் இந்த ஒப்பரேசனுக்குப் பிறகாவதுநான் பிழைச்சிடுவேனா?

டாக்டர்: டோன்ட் வொறி சொந்தக் காரங்களுக்கு எல்லாம் ஏற்கனவே தந்திகுடுத்திட்டேன்.

■

வக்கீல்: உங்கள் கணவரை கடுமையாகத் தாக்கினீர்களாமே உண்மையா?

பெண்: ஆமாம். கல்யாணத்திற்கு முன் தனக்கு நன்றாகச் சமைக்கத்தெரியும் என்று சொல்லிவிட்டு இப்போது சமையலறைப் பக்கமே போகவில்லை என்றால் கோபம் வராதா?

■

அவன்: காஷ்மீருக்குப் போயிருந்தியே, என்ன வாங்கிட்டு வந்தே?

இவன்: ஜலதோஷம் தான்

■

ஒருத்தி: ராத்திரி பூராவும் தூங்கவே விடல.

மற்றவள்: ம்.....நீ கொடுத்து வச்சவ.

ஒருத்தி: கோபத்தைக் கிளறாதடி. ராத்திரி பூராவும் ஒரே மூட்டைப்பூச்சித் தொல்லை.

■

## சுகமான சுமை

விளம்பர யுக்திகள் பலவகையாக தினந்தோறும் வந்து வியக்கவைக்கின்றன.

வியாபாரமே அவற்றின் குறியாக இருந்தாலும் சுவாரசியங்களும் சில விளம்பரங்களில் வியப்பையூட்டுகின்றன.

பாரீசில் ஹோட்டல் அதிபர் ஒருவருக்கு புதுவிதமாய் விளம்பரம் செய்ய ஆசை.

உடனே இப்படி ஒரு விளம்பர வாசகத்தை எழுதினார்.

"நாள் பூராவும் சுமக்கத் தயாரானால் ஆயுள் பூராவும் சொந்தமாவாள்" வாசகத்தோடு ஒரு படம். அரை நிர்வாணமாய் ஒரு அழகி. சுமக்கப்பட வேண்டியவள் அவள்தான்.

விளம்பரத்தை பார்த்த ஆறு இளைஞர்கள் அதிபரின் சவாலை சந்தோசமாய் ஏற்றனர்.

கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா என்ன?



படத்தில் உள்ள ஆறுபேரும் ஒரு கப்பலில் பணிபுரியும் இணைபிரியாத் தோழர்கள.

என்றாலும் அழகி யாருக்குச் சொந்தம்?

சுலபமாய் விடை கண்டுபிடிக்க ஹோட்டல் அதிபர் புதிய யோசனை ஒன்றை வைத்திருக்கிறார். சீட்டுக் குலுக்கிப்போட்டு அதிஷ்டசாலி தோந்தெடுக்கப்படுவார். அவரிடம் அழகி ஒப்படைக்கப்பட்டிடுவாள். கில்லாடியான அதிபர்தான்.

---

தேன் கிண்ணத்தில் இம்முறை சூடு கொஞ்சம் அதிகம்தான்.
என்றாலும் என்ன, நியாயமான சூடுதானே!
கிண்ணம் தரப்படுகிறது
எண்ணம் சூடேறி வலுப்படட்டும்!

# தேன் கிண்ணம்



### உயிருக்காக இன்னொரு உயிர்!

மண்ணின்
மலைகளைவிட
மனிதர்களின்
இது
மகத்தானது!

உரிமைக்கு
வலுவிருக்கும் வரைதான்
இந்தக்
கண்ணாடிப்
பாத்திரம்
உயரத்திலிருக்கும்!

இதற்கு
உருவம்
இல்லாவிட்டாலும்
உணர்வதற்கு
உள்ளம்
இருக்கும்!

இது
மனிதனுக்கு
உண்டு!
ஆனால் இல்லை!
இயற்கைக்கு
இல்லை-
ஆனால் உண்டு!
ஏனெனில்
தொட்டுப்பார்ப்பவையும்
தட்டிப்பார்க்கின்ற
தைரியம்-
மனிதனைவிட
இயற்கைக்கு
அதிகமாகவே
இருக்கிறது!

மானம்
உயிருக்காகப்
படைக்கப்பட்ட
உயிர்!
ஆத்மாவுக்கு
அணிவிக்கப்பட்ட
ஆடை!

அறிவுக்குக்
கிடைத்த
சுதந்திரம்
அழகுக்குக்
கிடைக்காத
அருள்!

நிலவு
கடன்வாங்கியாவது
காலம் கழிக்க
வில்லையென்றால்-
சூரியன்
சுட்டெரிக்கவில்லை
என்றால்-
மலர்
மணக்கவில்லையென்றால்
வனம்
தழைக்கவில்லையென்றால்-
வானம்
பொழியவில்லையென்றால்
மனிதன்
மனிதனாகவில்லையென்றால்-
ஆமாம்
இவை மானசீகமாகப்
பயப்படுவதெல்லாம்
மானத்துக்காகத்தான்!

மானமுள்ள
நூறாயிரம்பேர்
மறக்கப்படும்போதும்
மானமில்லா
ஒவ்வொருவனும்
பேசப்படுகிறான்!

ஒன்று நிச்சயம்!
மனிதனுடனேயே
முக்கால் நேரம்
மூச்சுவிடுவதால்-இது
கூடியிருக்கும்
இடைநடுவிலேயே
குழி பறிக்கும்!

எம்.அஸ்மிலாலி
கொழும்பு-14

### போ குயிலே போ!

அன்புக் குயிலே!
சின்னக் குயிலே!
உந்தன் சிறகுக்குள்
சிறையிருக்க
எனக்கேதம்மா
துணிவு?

நெசவுத் துணிபோல
எனது வீடு.
ஓர்
குச்சி வீடு.

மனச்சிறகை
அகல விரித்துப் பறக்க
ஏழை எனக்கேதம்மா
வானம்.

குயிலே
இருண்ட கூடுகள்
எனது..

உன் பிரியங்கள்
புனிதமானவை
நேசமானவை.

துண்டுத்துணி
விரித்து ஒழுகும் குடிசையிலே
நான்
கண்ணயர்வேன்-

போ..ஓடிப்போ-
உன் கூட்டைத்
தேடிப்போ...
அழுது விட்டுப்போகும்
எனக்காக
நீ ஒரு கவிதைபாடு!
அன்புக்குயிலே
அது போதும் எனக்கு!

அக்குறணை
இளைய அப்துல்லாஹ்.

### எழுதிக்கொண்டே...... இருப்பேன்......

என்
உணர்வுகளை
தீக்குளிக்கவிட்டு
இவ்வுலகை
நான் எழுத்துக்களால்
தழுவுகின்றேன்....

இந்த சமூகம்
நெருப்பாக மாறுகையில்
நான் எழுத்துகளிற்குள்
எரிந்து கொண்டிருப்பேன்....
நிலவாக குளிர்கையில்
வெள்ளைத் தாள்களில்
நதியாக ஊர்ந்து
கொண்டிருப்போன்....

சமுதாயத்தின்
மானுட விரோதிகளிற்கு
நான் முள்ளாக
மாறுகையில் எனை
மதித்து தம்மை
காயப்படுத்திக் கொள்வார்கள்....
தீயாக சுடுகையில்
தொட்டுப் பார்த்து
சுட்டுக் கொள்வார்கள்.....

அதர்ம துப்பாக்கிகளினால்
சமாதியாக்கப்படுபவர்களிற்கு
என் எழுத்துக்கள்
தாலாட்டுப் பாடும்!
மனிதத்தை
வேரறுப்பவர்களிற்கு
என் முத்துக்கள்
முட்களாக மாறும்!

சுதந்திரவாதிகளின்
கூக்குரலிற்கு
என் எழுத்து
எதிரொலி பாடும்.
சுயநலவாதிகளின்
புலம்பலிற்கு
என் எழுத்து
முகாரி இசைக்கும்.

நான் தேசத்தின்
காற்றாக, கடலாக
பரிணமித்து
கவிதையாக
வருகையில்
என் மனிதம்
சிலிர்த்துக்கொள்ளும்.


இந்த மூச்சும்
உயிரின் துடிப்பும்
இருக்கும்வரை
என் எழுத்துக்கள்
நீண்டு கொண்டே
செல்லும்; அகிலம் வரை...

அ.றஜீசன்

### பெண்ணே உன்னைத்தான்?

பெண்ணே!
மழைத்துளிகளை முத்தமிட்டு
பூப்படைந்த புல்லினத்
பார்க்க!
வண்ண வண்ண
உடையணிந்து
வரும் வானவில்
அரசன்!
கண்சிமிட்டும் நேரத்தில்
கண்சிமிட்டிவிட்டு ஓடும்
மின்னல் வீரர்கள்!
இருக்கத்தான் செய்வார்கள்
ஏனென்றால்
'அது ஒரு மழைக்காலம்
அதுப்போல்இன்று
உனக்குள்
சின்ன சின்ன ஆசைகள்
சிறகணியும்
சிந்திக்க விடாமல்
சிறகடித்து பறக்கும்!
மனம்!
மந்தோப்பில் போய்
மல்லிகை பறிக்க
கனவுகள் தோன்றும்
கட்டில்கள் கற்பனையில்
மிதக்கும்
கடலில் நீந்த நினைவுகள்
தோன்றும்
கடைசியில்!
நினைவுகள் நித்திரையை
நிதம் தேடும்
நிலவை அவன்
களவாடுவான்
நீ இதயத்தை
தொலைப்பாய்-ஏனென்றால்
"இது ஒரு இளமைக்காலம்"
நிர்கதியான நீ
சீதனசிறையில்!
கண்ணீரில் நீ கரைவாய்
உன்
கன்னியை காலங்கள்
கரைக்கும்.
காலத்தை நீ கரைத்தாய்
கல்லறைக்குள்
கானாமல் போனது
காதல்! அதுமட்டுமல்ல!
உன்
எதிர்காலம் ஒன்றும்!
ஏனனங்கள்தான்
கடைசியில் மிச்சம்-
ஏனென்றால்
"நீ கடப்பது கலியுக காலம்".

து.கலைவாணி
வத்தளை



### மூன்று வரிகளில் விசயம்

சுதந்திர கொண்டாட்டம்
சிராக நடக்கின்றது
அடையாள அட்டையின்றி அனுமதியில்லை

•

வயிற்றுச் சுமை
வரவில்லை அவளுக்கு
குடும்பக் கட்டுப்பாடு

•

சமாதானப் பேச்சுகள்
அதிகமாக நடக்கின்றது
காணிக்கையாக உயிர்கள்

பீர்.எம்.நாபிக்
தலைமன்னார் பியர்.

### -இவள்-

அஸ்தமனத்துக்காய்
காத்திருக்கும்
நிலவு இது.
இருபது வயதுக்குள்
இறப்பினால்
ஆசிர்வதிக்கப்பட்ட
இருதய மலரிது,
அணையப் போகையில்
அற்புதமாய்
ஜொலிக்கும்
அகல் விளக்கு இது
பரீட்சைகளில்
வெற்றியைத் தவிர
வேறெதையும் பெற்றிராத,
எனினும்
விதியிடம் தோற்றுவிட்ட
விந்தையான
வினா இது
ம்.....இது.....இங்கே
இதுவல்ல
இவள் அது....!

ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி.

### செந்தாமரைகள்

வானங்காணாமல்
பச்சிலை ஆடை
மறைத்து நின்றாலும்
சாளரத்தால் எட்டிப்பார்க்கும்
சல்லாப ராணிகள்

-யாழூரான்-

# பாத்திரம் அறிந்து புத்தி சொல்

குபேரனும், இராவணனும் சகோதரர்கள். ஒரே தந்தைக்குப் பிறந்தவர்கள். முதலில் குபேரன் தவம் செய்து மிக உயர்ந்த நிலையை அடைந்தார். யக்ஷர் கூட்டத்திற்குத் தலைவரானார்.

தந்தை, "இலங்கை சொர்க்கம் போல் அமைக்கப்பட்ட இடம். அங்கே உன் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டு யக்ஷர்குல மன்னனாக வாழ்வாய்" என்றார்.

அப்படியே குபேரன் வாழ்ந்து வந்தார்.

அதற்குப்பின் இராவணன் பிறந்து தலையெடுத்தான். தவம் செய்து பல வரங்களைப் பெற்றான். அதுவரை பயந்து பாதாளத்தில் பதுங்கியிருந்த அவன் தாய் வழி உறவான அரக்கர் குலம் அவனை அண்டியது.

"இலங்கையில் முன்னர் நாம் தான் இருந்தோம், இப்போதும் நாம்தான் அங்கு வாழவேண்டும்" என்று உபதேசம் செய்தது.

"இலங்கையை என்னிடம் கொடுத்துவிடு" என்று குபேரனுக்கு ஆள் அனுப்பினான் இராவணன். குபேரன் தந்தையிடம் ஆலோசித்து, இலங்கையைக் காலி செய்து கொடுத்து விட்டு இடம் மாறினார். அதன்பின் தவஞ்செய்யச் சென்று, சிவபெருமானின் பேரருளைப் பெற்றுத் திரும்பினார். தம்பியைப் பற்றி அறிந்த விஷயங்கள் மனதிற்கு வேதனை அளித்தன. "அவன் கெட்ட குணமுள்ளவன். அவனோடு பேச்சு வைத்துக் கொள்ள வேண்டாம்" என்று தந்தை சொன்னதை மறந்து விட்டுத் தூதனுப்பினார்.

"தம்பி தவஞ் செய்து திரும்பிய நான், நீ செய்யும் அட்டூழியங்களைக் கேள்விப்பட்டேன். உன்னால் உருவழிக்கப்பட்ட இந்திர நந்த வனத்தைப் பார்த்தேன். தேவர்களும் முனிவர்களும் உன்னைக் கொல்வதற்கு வழி என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அபலைப் பெண்களின் கண்ணீர் உன்னை அழித்து விடும். இனி இந்தத் தீச் செயல்களில் இருந்து விடுபட்டு நல்லவனாக வாழ்வாய்" என்று அந்தத் தூதனிடம் சொல்லி அனுப்பினார்.

பலன் என்னவாயிற்று தெரியுமா?

அடங்காத கோபங்கொண்டு படையெடுத்த இராவணன் குபேரனை வென்று, புஷ்பக விமானத்தையும் எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

குபேரன் உயிர் பிழைத்ததே பெரும்பாடாய்ப் போயிற்று. தன் உயிருக்கு நிகரான, புஷ்பக விமானத்தையும் இழந்தார்.

தன்னைக் கேளாதவர்களுக்குப் புத்திமதி சொன்னால் தனக்கே கேடு வரும் என்பது நீதிமொழி. இந்து மதம் நமக்குக் காட்டும் நல்லவழி.

# குர்ஆன் வழிகாட்டுகிறது

விசுவாசிகளே (யாவரும்) நிச்சயமாக சகோதரர்களே! ஆகவே உங்கள் சகோதரர்களுக்கிடையில் (ஒழுங்கையும்) சமாதானத்தையும் நிலை நிறுத்தி சுமுகமாக இருங்கள். (அல் குர் ஆன் 49:10)

மேலும் நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹ் உடைய வேதமாகிய கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 3:10)

(நபியே!) பிறைகள் (மாறிவரும் நிலை) பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். அவை மனிதர்களுக்கும் ஹஜ்ஜி (வணக்கத்து)க்கும் நேரங்களைக் குறிப்பிடுபவை என்பதில் கூறும். (அல்குர்ஆன் 2:189)

இன்னும் (தன் சொத்துக்கள் என்று அவன் பெருமையடித்துப்) பேசிக் கொண்டிருப்பவற்றையும் நாம் ஆனந்தரங்கம் கொள்வோம். (இவற்றை எல்லாம் விட்டு) அவன் நம்மிடத்தில் தன்னந்தனியாகவே வருவான். (அல்குர்ஆன் - 19:77:80)

## ஆன்மீகம்

# திருந்தினால் தேவன் அருள் கிடைக்கும்

ஒருவன் தான் செய்த பாவத்தை உணர்ந்து அதிலிருந்து அவன் மனம் திரும்ப வேண்டும். அதைத்தான் இறைவனும் விரும்புகிறார் என்கிறது கிறிஸ்தவம்.

ஒரு தடவை இயேசு கிறிஸ்து பாவிகளுக்கு உப்தேசம் செய்து விட்டு, அவர்களோடு உணவருந்தினார். இதைக் கண்டு அவரோடு இருந்த பரிசேயரும், வேதபாரகரும் இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறாரே? என்று முணுமுணுக்கிறார்கள். இது தேவகுமாரனின் செவிகளில் விழுகிறது. தேவகுமாரன் அப்போது அவர்களிடத்திலே, பாவிகள் மனந்திரும்புவது தான் இறைவன் நாடுகிற, சந்தோசத்தை விளைவிக்கின்ற காரியம் என்பதை ஒரு சிறிய உவமை மூலம் விளக்கினார்.

ஒரு மனிதனிடத்தில் நூறு ஆடுகள் இருந்தது. அவற்றில் ஒன்று காணாமல் போய்விட்டால் அதை அவன் விட்டு விடுவதில்லை. காணாமற்போன ஆட்டை மிகுந்த வாஞ்சையோடு, வனாந்தரம் எங்கும் தேடி அது கிடைத்து விட்ட பட்சத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு அதனைத் தனது தோளில் போட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்து தனது உற்றார் உறவினரை, சுற்றுப் புறத்தில் உள்ளவர்களை எல்லாம் அழைத்து, காணாமற்போன எனது ஆட்டைக் கண்டுபிடித்தேன். என்னோடு நீங்களும் சந்தோசப்படுங்கள், என்பான் அல்லவா? அதைப் போலத்தான் பாவம்-செய்யாத-மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோசம் உண்டாகிறதைப் பார்க்கிலும், மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோக ராஜ்யத்தில் மிகுந்த சந்தோசம் உண்டாகியிருக்கும். (லூக்கா:15-7)


# அசார் ஒரு அருமையான கப்டன் பூசல் என்ற வதந்திக்கு கபில் முற்றுப்புள்ளி!

இலங்கை சுற்றுப்பயணத்தில் இருக்கும் இந்திய அணியில் இப்பொழுது அனைவரின் ஒட்டு மொத்தப் பார்வையும் ஒருவர் மீது விழுந்திருக்கிறது.

அவர் ஹரியானாவின் இளம் சிங்கம் கபில்தேவ். 19 வயதில் டெஸ்டில் நுழைந்து தனது முப்பத்தைந்தாவது வயதில் சாதனை புரிய இருக்கிறார்.

நியூசிலாந்து முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ரிச்சட் ஹாட்லி இதுவரை 431 டெஸ்ட் விக்கட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை புரிந்துள்ளார். இந்த இலக்கை கபில் நிச்சயம் எட்டி விடுவார். இதோ அவரது பேட்டி.





**கேள்வி:** சென்னையில் நடந்த இரண்டு வார பயிற்சி முகாமில் நீங்கள் பந்து வீச்சில் அதிகம் கவனம் செலுத்தியதை விட துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தியதாகத் தெரிகிறது. சிம்பாப்பேயிற்கு எதிராக அடித்தது போல் இலங்கையிலும் துடுப்பாட்டத்தில் ஏதாவது ரன் குவிக்கும் திட்டம் உண்டா?

**கபில்:** நான் புந்து வீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் கவனம் செலுத்துகிறேன். இரண்டிலும் எனக்கு ஆர்வம் அதிகம் உண்டு. நீங்கள் பார்க்கும்போது ஒருவேளை நான் துடுப்பாட்டம் செய்திருப்பேன். அதுதான் உங்களுக்கு அப்படித் தோன்றி இருக்கிறது. தற்போது என் கவனம் முதலில் பந்து வீச்சில் உலக சாதனை புரிய வேண்டும் என்பதில் உள்ளது.

**கேள்வி:** இந்த சுற்றுப்பயணத்தில் உலக சாதனை நிகழ்த்துவீர்களா?

**கபில்:** உலக சாதனை புரிய முயற்சிக்கிறேன். அனைவரும் என் மேல் வைத்திருக்கும் அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவேன். மேலும் இதற்காகக் கடுமையாக உழைக்கிறேன். கடுமையான உழைப்பிற்கு என்றும் நல்ல பலன் கிட்டும்.

**கேள்வி:** உலக சாதனை புரியப் போகிறதை நினைத்து ஏதாவது டென்ஷன் ஏற்படுகிறதா?

**கபில்:** அப்படியெல்லாம் ஒரு டென்ஷன் எனக்குக் கிடையாது. ஆரம்பகாலத்திலிருந்து விக்கட்டை எடுக்கும் போதும் சரி, ரன்களைக் குவிக்கும்போதும் சரி அல்லது இரண்டிலும் பெயிலியர் ஆனாலும் நான் ஒரே மாதிரித்தான் இருப்பேன். அதுதான் என் இயல்பு.

**கேள்வி:** உண்மையைச் சொல்லுங்கள் ரிச்சட் ஹாட்லியின் சாதனையைச் சமன் செய்யும்போதோ அல்லது அதை முறியடிக்கும் போதோ எவ்வித பரபரப்பும் உங்களுக்கு ஏற்படாதா?

**கபில்:** நிச்சயம் ஏற்படாது என்று நினைக்கிறேன். ஒரு வேளை ஒரு சிறு அங்சைட்டி ஏற்படலாம்.

**கேள்வி:** உங்களுக்கும் அசாருதீனுக்கும் கருத்து வேறுபாடா?

**கபில்:** சுத்தப் பொய். யார் அப்படிச் சொன்னது?

**கேள்வி:** உங்களுக்கு நிறைய ஓவர்கள் பந்து வீசக் கொடுப்பதில்லையே?

**கபில்:** அசாருதீன் எனக்கு நிறைய ஓவர்கள் பந்துவீசக்கொடுக்கிறார். அநேக நேரங்களில் என்னைக் கலந்தாலோசிக்கிறார். நல்ல முறையில் நட்புறவோடு பழகுவார்.

உள்ளபடி அவர் நல்ல பணபாளா. மனிதர். சிறந்த பட்ஸ்மன், தகுதி வாய்ந்த தலைவர்.

**கேள்வி:** மறக்க முடியாத நிகழ்ச்சி எது?

**கபில்:** ஒரு முறை பம்பாயில் இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை 19 வயதிற்குட்பட்டவர்களின் பயிற்சி முகாம் நடத்தியது. அதில் நான் தேர்வு செய்யப்பட்டு கலந்து கொண்டேன். சாப்பாட்டிற்குச் சென்றபோது எனக்கு காய்ந்துபோன ரொட்டியும், கொஞ்சம் காய்கறியும் கொடுத்தார்கள். அதைத் தட்டில் வாங்கிக்கொண்டு அங்கேயே அசையாமல் நின்றேன். அங்கிருந்த மனேஜர் தராப்பூர் "ஏன் நிற்கிறாய்" என்றார். "நான் வேகப்பந்து வீச்சாளர். எனக்கு நிறைய சப்பாத்தி வேண்டும். இது பத்தாது" என்றேன். அதைக் கேட்டு அவர் வாய்விட்டு ஏளனமாகச் சிரித்தார். "நீ வேகப்பந்து வீச்சாளனா?" என்று மீண்டும் சிரித்தார். "இந்தியாவில் வேகப்பந்து வீச்சாளர்களே கிடையாது என்பது உனக்குத் தெரியுமா?" என்றார். நான் வேதனைப்பட்டேன். அன்றைக்கு நான் பட்ட வேதனை என்னை இந்த அளவிற்கு சாதனையாளராகக் கொண்டு வந்தது.

## கசப்பான உண்மை

இலங்கையின் கிரிக்கெட் குழுவினருக்கு சிங்கள மக்கள் மத்தியில் உற்சாகமான வரவேற்பு இருக்கிறது.

அத்தோடு இலங்கைக் கிரிக்கெட் குழுவினரும் குறைசொல்ல முடியாதபடி திறமைகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

சர்வதேச அரங்குகளில் போதியளவு பிரகாசிக்காவிட்டாலும் கூட உள்நாட்டில் விளையாடும்போது புதிய உற்சாகத்துடன் புகுந்து விளையாடுகிறார்கள்.

இதில் ஒரு கசப்பான உண்மை என்னவென்றால் இலங்கைக் கிரிக்கெட் குழுவுக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் உற்சாகமான ஆதரவு குறைவாகவே இருக்கிறது.

அதற்கான காரணம்- அணியில் தமிழ்-முஸ்லிம் வீரர்களின் எண்ணிக்கைக் குறைவு என்று சில அவதானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

தமிழர்கள் இந்திய அணிக்கும், முஸ்லிம்கள் பாகிஸ்தான் அணிக்கும் கொடுக்கும் ஆதரவோடு ஒப்பிடும்போது இலங்கை அணி குறைவான ஆதரவையே பெறுகிறது.

தற்போது முத்தையா முரளிதரன் நம்நாட்டு அணியில் இருப்பது ஒரு நல்ல மாற்றம். அதேபோல் முஸ்லிம் விளையாட்டு வீரர்கள் மத்தியில் இருந்தும் ஒருவரை அணியில் இடம் பெறச்செய்ய உரியவர்கள் முயலவேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில் விளையாட்டிலாகட்டும் வேறு எதிலாகட்டும் தேசிய ஒற்றுமைக்கான பிரதிபலிப்புக்கள் இருப்பது நல்லது.

கசப்பான சில உண்மைகளை ஜீரணிப்பதும், கோபப்படாமல் காரணத்தைக் கண்டறிந்து தீர்வு காண்பதும் இனிப்பான நிகழ்வுகளுக்கு தளம் தரும்.

# கிரிக்கெட் அரங்கில் இலங்கை அணி

இலங்கை கிரிக்கெட் அணியின் சமீபத்திய வெற்றிகள் அசுரத்தனமாக இருந்தன. இருப்பினும் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது டெஸ்ட் போட்டி சாதனைகள் திருப்தியளிப்பதாக இல்லை. தற்போது நடைபெறும் இந்திய-இலங்கை கிரிக்கெட் ஆட்டங்களுக்கு முன்புவரை, மொத்தம் 43 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருந்தாலும் 20 டெஸ்ட்டுகளில் தோல்விகளையும், 19 வெற்றி தோல்வியில்லாமலும், நான்கே வெற்றிகளையும் பெற்றுள்ளது. இந்த நான்கு வெற்றிகளும் இலங்கை மண்ணிலேயே பெறப்பட்டவை ஆகும். 1985ம் ஆண்டில் பி.சரவணமுத்து ஸ்ரேடியத்தில் இந்தியாவுக்கு எதிராகவும், 1986ல் கொழும்பு சி.சி.சி மைதானத்தில் பாகிஸ்தானுக்கு எதிராகவும், 1992 மற்றும் 1993ல் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் முறையே நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிராகவும் பெற்ற வெற்றிகளே இந்த நான்கும் ஆகும்.

### இலங்கையின் டெஸ்ட் போட்டிகள்

| எதிரணி | போட்டிகள் | வெற்றி | தோல்வி | வெற்றி தோல்வி இன்மை |
|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 5 | 1 | 3 | 1 |
| அவுஸ்திரேலியா | 7 | – | 4 | 3 |
| நியூசிலாந்து | 11 | 1 | 4 | 6 |
| பாகிஸ்தான் | 12 | 1 | 6 | 5 |
| இந்தியா | 8 | 1 | 3 | 4 |
| இலங்கையில் | 18 | 4 | 6 | 8 |
| வெளி நாடுகளில் | 25 | – | 14 | 11 |
| மொத்தம் | 43 | 4 | 20 | 19 |

### இந்தியா எதிர் இலங்கை (டெஸ்ட்)

| ஆண்டு | போட்டி | இந்தியாவெற்றி | இலங்கை வெற்றி | வெற்றிதோல்வி இன்மை |
|---|---|---|---|---|
| 1982–83 | 1 | – | – | 1 |
| 1985–86 | 3 | – | 1 | 2 |
| 1986–87 | 3 | 2 | – | 1 |
| 1990–91 | 1 | 1 | – | – |
| மொத்தம் | 8 | 3 | 1 | 4 |

### இலங்கை அணியின் டெஸ்ட் சாதனைகள்

**முதல் டெஸ்ட்:** இங்கிலாந்திற்கு எதிராக 1981-82 கொழும்பில்

**அதிகபட்ச ரன்கள்:** 547/8 டிக்கிளேர், 1992-93 அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கொழும்பில்.

**குறைந்த பட்ச ரன்கள்:** 82, 1990-91 இந்தியாவுக்கு எதிராக சண்டிகாரில்.

**அதிக டெஸ்ட்களில் விளையாடியவர்:** அர்ஜுன ரணதுங்க, 39 டெஸ்ட்கள்.

**அதிகபட்ச ரன்களைக் குவித்தவர்:** 267 அரவிந்த டி சில்வா, 1990-91ல் நியூசிலாந்திற்கெதிராக வெலிங்டனில்.

**ஒரு தொடரில் அதிகபட்ச ரன்கள்:** அரவிந்த டி சில்வா மூன்று டெஸ்ட்டுக்களில் 493 ரன்கள் 1990-91ல் நியூசிலாந்திற்கு எதிராக

**அதிகபட்ச டெஸ்ட் ரன்கள்:** அர்ஜுன ரணதுங்க, 2201, சராசரி-35.50

**ஒரு இனிங்சில் அதிகபட்ச விக்கட்டுக்கள்:** ரவி ரட்நாயக்க 8/83 பாகிஸ்தானுக்கு எதிராக

**ஒரு தொடரில் அதிக விக்கட்டுக்கள்:** ருமேஷ் ரட்நாயக்க, மூன்று டெஸ்ட்டுக்களில் 20 விக்கட்டுக்கள், 1985-86ல் இந்தியாவுக்கு எதிராக.

**அதிகபட்ச டெஸ்ட் விக்கட்டுக்கள்:** ருமேஷ் ரட்நாயக்க, 23 டெஸ்ட்டுகளில் 73 விக்கட்டுகள், சராசரி-35.10.

## ஸ்போர்ட்ஸ்

# "முன்னர் மோசம் தான்" நம்நாட்டு நடுவர்கள் பற்றி அசார்!

**இந்திய அணியின் கப்டன் அசாருதீன் எளிமையானவர். அணியினர் மத்தியில் நல்ல பெயர். இலங்கைக்கு வருவதற்கு முன்னர் அவர் அளித்த பேட்டியின் பிரதான பகுதி இது.**



**கேள்வி:** இந்தியாவின் வெற்றி சுழற்பந்து வீச்சாளர்களின் கையில் உள்ளது. ஆனால் சுழற்பந்துவீச்சில் சிறப்பாக ஆடுபவர்கள் இலங்கைக்காரர்கள். அப்படி இருக்கையில் எப்படி சமாளிக்கப் போகிறீர்கள்?

**அசாருதீன்:** அதைப் பொறுத்திருந்து பாருங்கள். பிட்ச்சில் ஸ்பின் நன்றாக எடுத்தால் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்கப்படும். இல்லாவிட்டால் வேகப்பந்து வீச்சாளர்களுக்குக் கொடுக்கப்படும். நம்மிடம் போதுமான அளவிற்கு இரண்டு துறையிலும் பந்து வீச்சாளர்கள் உள்ளனர்.

**கேள்வி:** இலங்கை நடுவர்களின் தரம் எப்படி இருக்கும்?

**அசாருதீன்:** இலங்கை நடுவர்களின் தரம் ஒரு காலத்தில் மோசமாக இருந்தது. இப்போது எட்டு வருடம் ஆகிவிட்டது. தற்போது நடுவர்களின் தரம் முன்னேறி இருக்கும் என்று நம்புகிறேன். ஆனால் அதைப்பற்றிக் கவலை இல்லை.

**கேள்வி:** சச்சின் டென்டுல்கர் துணை கப்டன் ஆனதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**அசாருதீன்:** வரவேற்கத்தக்கதொன்று. அவருக்கு ஏற்கனவே நல்ல அனுபவம் உண்டு. அத்தோடு இல்லாமல் குழுவினர் அனைவரிடமும் சச்சின் அன்புடன் பழகுவார். இந்தப் பதவி அவருக்குக் கொடுத்ததைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். சச்சின் அந்தப் பதவிக்கு முழுத்தகுதி படைத்தவர்.

**கேள்வி:** சென்னையில் நடந்த பயிற்சி முகாம் போதுமானதா?

**அசாருதீன்:** இது பற்றாதுதான். இருந்தாலும் பயனுள்ளதாக இருந்தது.

உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகள், FAX வெளிநாட்டு தந்திகள், ஆங்கில டைப்பிங் ஆகியவற்றிற்கு பொலன்னறுவையில் ஒரே இடம்.

**Quick Communications**
Kaduruwela,
Polannaruwa.
T.P. 027/2063,
FAX: 0094-27-2063

உங்கள் அபிமான 'தினமுரசு வாரமலர்' எம்மிடம் கிடைக்கும்.











மோட்டார் கார்கள் பலரகத்தில் வந்துவிட்டன. வருகின்றன. என்றாலும் அந்தக்காலக் கார்களில் இருக்கிற அழகே தனிதான். நம்மவர் ஏ.40, சோமசெட் மாதிரி. இது 1936 இல் உருவாக்கப்பட்ட மேர்சிடிஸ் பென்ஸ் கார். இதுதான் கார். கப்பர் கார்.

## இது ஹொலிவூட்



பிரெயின் டெட் (இறந்த மூளை) கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும். வேறு அர்த்தங்கள் பண்ணவேண்டாம். திரில் என்றால் அப்படி ஒரு திரில்.





பாசஞ்சர் 57 (பயணி 57)

Nowhere To Run



சீனர்களின் சமையல் முறை அலாதியானது. இறைச்சி வகைகளை அவர்கள் தயாரிக்கும் விதமே தனியானது - சுவை மிக்கது. கோழி இறைச்சியை அவர்கள் பக்குவமாகச் சமைக்கும் முறை நம்மவருக்கும் உகந்தது.

தேவையானவை:
பக்குவப்படுத்தப்பட்ட கோழி- 1
இஞ்சித்துண்டு- அளவானவாக
உப்பு(தூள்)- அளவானவாக
பம்பாய் வெங்காயம்- 2
நல்லெண்ணெய்- அளவானவாக

செய்முறை:

தோலுரித்து, உட்பக்கங்கள் சுத்தமாக்கப்பட்ட கோழியை, முழுதாகக் கொள்ளக்கூடிய அளவான சோஸ் பானில் வைத்து அதனை மூடும் அளவு தண்ணீர் சேர்க்கவும். கோழியை வெளியே எடுத்து வேறாக வைத்து விட்டு அதே தண்ணீரில், இஞ்சியைச் சற்று நசித்துப்போட்டு உப்பையும் அரிந்த வெங்காயத்தையும் தண்ணீரில் விட்டு கொதிக்க வைக்கவும்.

தண்ணீர் கொதித்ததும் கோழியை மெதுவாக கொதி நீரில் இறக்கவும். 10 நிமிடங்கள் கொதிக்க விட்டபின் சோஸ்பானை மூடி அடுப்பிலிருந்து இறக்கி 2 மணி நேரம் ஆறவிடுங்கள். பின்னர் கோழியை வெளியே எடுத்து சுத்த மான ஒற்றுத் தாளால் ஒற்றி ஈரத்தை எடுக்கவும்.

இதன்பின் எண்ணெய்யை கோழியின் மேல் பகுதியில் முழுமையாகத் தடவவும். அளவாக உப்புத்தூளையும் தெளிக்கவும். இப்பொழுது பரிமாறத் தயாராகிவிட்டது. அளவான துண்டுகளாக வெட்டி 6 பேருக்குப் பரிமாறலாம்.



# சைனீஸ் சிக்கின்

மற்றுமொரு முறை:
இம்முறைக்கு மேலதிகமாகத் தேவையானவை:
என்ணெ - 1 தேக்கரண்டி
சோயா சோஸ்- 3 மேசைக்கரண்டி (குடிப்பமல்லாதது)
பம்பாய் வெங்காயம் - 6
கொத்தமல்லிக் கீரை - சிறிதளவு

மேற்கூறிய முறையில் வேகவைக்கப்பட்ட கோழியை எண்ணெய் தடவுவதற்கு முன்னர், பரிமாறும் அளவுக்கேற்ற துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். 6 பம்பாய் வெங்காயங்களை முழுவட்டங்களாக வெட்டவும். என்ணை லேசாக வறுத்து கொத்தமல்லிக் கீரைத் துண்டுகளையும் சேர்த்து வெட்டப்பட்ட துண்டுகள் மீது தூவவும். பரிமாறுவதற்கு முன்னர் நல்லெண்ணெய் மற்றும் சோயா சோஸ் ஆகியவற்றைக் கலந்து மெல்லிய பாத்திரத்திலிட்டுச் சூடாக்கவும். கொதிக்கும்போது இறைச்சித் துண்டுகள் மீது இக்கலவையினை விட்டு விட்டு ஊற்றவும். இப்போது சுவையான சைனீஸ் சிக்கின் ரெடி.

சோற்றுடன் உண்பதற்கு இம்முறை நல்லது.




இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை சோமாதேவி பிளேஸ், 88/14ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்லப்பா, நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஓகஸ்ட் மாதம் 1ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.